24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 46 மார்கழி 28ஆம் நாள் சனிக்கிழமை 12 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049



# இணக்கமில்லை என்றால் புதிய அரசமைப்பு ‘அம்பேல்’

## சபையில் ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 12

புதிய அரசமைப்புக்கான உத்தேச வரைவு – நிபுணர் குழுவின் அறிக்கை அரசமைப்பு நிர்ணய சபையாகக் கூடிய நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்டது. பிரதான எதிர்க்கட்சியான மகிந்த அணி அதனைக் கடுமையாக எதிர்த்தது. இணக்கம் எட்டப்படவில்லை.

இந்த நிலையில், புதிய அரசமைப்பு வரைவுக்கு சகலரும் இணக்கம் தெரிவித்தால் வழி நடத்தல் குழு அடுத்த கட்டமாகச் செயற்படும். இணக்கம்காணப்படாவிட்டால் அந்த முயற்சியைக் கைவிடவேண்டி வரும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

>> 24

---

அரசமைப்பு முயற்சி தோற்றால்

## விளைவு எப்படி அமையும் என்பதைச் சொல்ல முடியாது

சம்பந்தன் எச்சரிக்கை



கொழும்பு. ஜன. 12

புதிய அரசமைப்பு முயற்சி தோல்வியடையும் என்றால் அதன் விளைவு எவ்வாறு அமையும் என்பதைத் தெரிவிக்கமுடியாது. அந்த நிலை ஏற்படாமல் இருக்க அனைவரும் இணைந்து இதனை முன்னுக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

>> 24

---

## இதுவரை எட்டாத இணக்கமா இனி எட்டப்படப் போகின்றது?

ஜே.வி.பி. விசனம்

கொழும்பு. ஜன. 12

மூன்று ஆண்டுகளில், 83 தடவைகள் வழி நடத்தல் குழுகூடி அரசமைப்பு வரைவைக் கூட உருவாக்கிக் கொள்ள முடியவில்லை. இதற்கு எட்டாத இணக்கமா இனி எட்டப்படப் போகின்றது? ரணில் அரசு, வெறுமனே காலத்தைக் கடத்தி அரசமைப்பு முயற்சிகளை வீணடிக்கும் நடவடிக்கைகளை மட்டுமே முன்னெடுக்கின்றது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க விசனத்துடன் தெரிவித்தார்.

அரசமைப்பு நிர்ணய சபையில் நேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

>> 25

---

தேர்தலில் தோற்றவர்கள்

## புதிய அரசமைப்பை எப்படி உருவாக்க முடியும்?

மகிந்த கேள்வி

கொழும்பு. ஜன. 12

புதிய அரசமைப்பைக் கொண்டு வரும் தரப்பினரை கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் நிராகரித்தார்கள். பொதுத் தேர்தலுக்குச் செல்வோம். அதன் போது நாம் எமது அரசமைப்பு யோசனையை முன்வைக்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சி தமது யோசனையை முன்வைக்கட்டும். மக்கள் முடிவு செய்வார்கள். இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அரசமைப்பு நிர்ணய சபையில் நேற்று உரையாற்று

>> 24

---

## ஒற்றையாட்சிக்குள் புதிய அரசமைப்பு

சு.கவின் நிலைப்பாடு

கொழும்பு, ஜன.12

ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கு முதலிடம் தற்போதைய அரசமைப்பில் உள்ளவாறே பேணப்படவேண்டும். நிறைவேற்று அரச தலைவர் முறைமை ஓரளவுக்கேனும் தொடர வேண்டும். இதுவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு. இவ்வாறு அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபாலடி சில்வா தெரி

>> 25

---

## பொன்னான சந்தர்ப்பத்தை தவறவிடவேண்டாம்

சுமந்திரன் கோரிக்கை



கொழும்பு, ஜனவரி 12

புதிய அரசமைப் பொன்றை உருவாக்கி தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான பொன்னான சந்தர்ப்பமொன்று இரண்டு பிரதானக் கட்சிகளுக்கும் கிட்டி

>> 25

---

## வாள், துப்பாக்கி முனையில் பல லட்சம் ரூபா கொள்ளை

வங்கியில் எடுத்த பணம் எங்கே? என்று கேட்ட கொள்ளையர்கள்

கிளிநொச்சி, ஜன. 12

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் பல லட்சம் ரூபா பணம், துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. முறைப்பாடு மேற்கொண்ட வீட்டு உரிமையாளர், வங்கியிலிருந்து 2 லட்சம் ரூபா பணத்தை நேற்றுமுன்தினம் எடுத்து வந்துள்ளார். இந்த

>> 24

---

## தைப்பொங்கலை முன்னிட்டு பாடசாலைகளுக்கு விடுமுறை

வடக்கு ஆளுநர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 12

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளதாக அவரது

>> 25

---

## 40 ஆண்டுகளில் வடக்கு அரைப் பாலைவனமாகும்

அபாயச் சங்கு ஊதுகிறார் சம்பிக்க

கொழும்பு, ஜன. 12

காலநிலை மாற்றத்தின் காரணமாக வடக்கு மாகாணமானது கடுமையான சவால்களை எதிர்நோக்குகின்றது. அடுத்த 30 முதல் 40 ஆண்டுகளில் வடக்கு மாகாணமானது அரைப் பாலைவனமாக மாறும். இவ்வாறு நகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையி

>> 25

அரசமைப்பு உருவாக்கத்தில்

# தமிழ்க் கூட்டமைப்பினர் அதிகம் நல்லவர்களாக இருந்துவிட்டனர்

## மனோ பாராட்டுப் பத்திரம்



கொழும்பு, ஜன. 12

புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதிகம் நல்லவர்களாக இருந்துவிட்டார்கள். நானாக இருந்தால் இவ்வளவு தூரம் இறங்கி விட்டுக் கொடுத்துச் செயற்பட்டிருக்கமாட்டேன். அனைத்துச் சிங்களக் கட்சிகளும் இணைந்து பன்னாட்டுச் சமூகத்திடம் தீர்வை முன்வைக்க வலியுறுத்தியிருப்பேன். அதனைப் பரிசீலித்துப் பார்கின்றோம் என்றே கூறியிருப்பேன். இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

அரசமைப்பு நிர்ணய சபை பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கூடியது. உத்தேசவரைவுத்திட்டம்முன்வைக்கப்பட்டது. அது தொடர்பில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**தெற்கிலிருந்து வடக்குக்கு**

இந்த நாட்டில் அதிகாரப் பகிர்வு, கூட்டாட்சி தொடர்பான யோசனைகள் தெற்கில் இருந்துதான் வடக்குக்குக் கொண்டு செல்லப்பட்டன. பண்டாரநாயக்க, மலைநாட்டுச் சிங்களவர்கள் இந்தக் கோரிக்கைளை வடக்குக்குக் கொண்டுசென்றனர். அந்தக் காலப் பகுதியில்வடக்குத்தமிழர்கள்அவற்றைநிராகரித்தனர். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வடக்கில் உள்ளவர்கள் அன்று சுயாட்சியைக் கோரியதாகக் கூறினார். அதன் அர்த்தம், தனிநாடென்பது அல்ல.

மலைநாட்டுச் சிங்களவர்கள் வேறுநாடு தொடர்பில் சிந்திக்கையில் வடக்கில் உள்ள தமிழர்கள் முழு நாட்டைப் பற்றியும் சிந்தித்தனர். வெள்ளையர்களை வெளியேற்றி நாட்டின் சுயாதீனத்துக்காகப் போராடிய தமிழர்கள் 180 பாகை சுழன்று தனி நாட்டைக் கோரும் அளவுக்குத் தள்ளியது யார் என்பதை உங்கள் நெஞ்சில் கைவைத்துக் கேட்டுக்கொள்ளுங்கள். அதிகாரப்பகிர்வு, கூட்டாட்சிஎன்பனவடக்கில்இருந்துவந்தது. அமெரிக்காவில் இருந்து வந்தது. இந்தியாவில் இருந்து வந்தது எனக் கூற வேண்டாம். தெற்கில் இருந்துதான் அவை வடக்குக்குச் சென்றன. யாழ்தேவியில் போனதா தெரியவில்லை.

**வடக்குத்தான் தீர்மானிக்கவேண்டும்**

வடக்குத் தமிழர்களின் பிரச்சினையை வெறும் பொருளாதாரப் பிரச்சினையாக மாத்திரம்மட்டுப்படுத்திவிடவேண்டாம். தெற்கைப் போன்றுவடக்குக்கும்அபிவிருத்திஅவசியம். பாதைகளும், மருத்துவமனைகளும், பாடசாலைகளும், பாலங்கள் அமைக்கப்படவேண்டும். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அவற்றைஅபிவிருத்திசெய்வதற்கானஅதிகாரமும், தீர்மானிப்பும் வடக்கில்தான் இருக்க வேண்டும்.

கொழும்பில் குளிர் அறைகளில் இருந்து கொண்டு யாழ்ப்பாணத்தில் எங்கே பாடசாலையும், மருத்துவமனையையும், பாதையை அமைப்பதென தீர்மானிக்க முடியாது. அரசியல் அதிகாரத்தை, ஆட்சி அதிகாரத்தை பிளவுபடாத நாட்டுக்குள் பகிரவேண்டும் என்று அதனால்தான் சொல்கின்றோம். அதுதான் சுயாட்சி. அந்த சுயாட்சிக்குத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்பட வடக்கின் தலைவர்கள் போராடுகின்றனர். ஒருகாலத்தில்ஆயுதப்போராட்டம்இருந்தது. தற்போது அதனைக் கைவிட்டு விட்டுஜனநாயகவழியில்போராடுகின்றனர்.

**முதல் தடவை பங்களிப்பு**

அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல 1972 ஆம் ஆண்டு மற்றும் 1978ஆம் ஆண்டு அரசமைப்புநிர்ணயசபைதொடர்பில்ஞாபகப்படுத்தினார். இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழ் மக்களின் பங்களிப்பு இருக்கவில்லை எனக் கூறியிருந்தார். அது அனைவருக்கும் தெரியும். வரலாற்றில் முதல் தடவையாக கூட்டமைப்பின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்சுமந்திரன்உள்படஅதன்உறுப்பினர்கள் வழிநடத்தல் குழுவில் பங்கேற்றுள்ளனர். அதனைப்புரிந்து கொண்டு அவர்களுக்கான விடையைக் கொடுக்க வேண்டும். அதுதான் அரசியல் தலைமைத்துவம். அவ்வாறான தலைமைத்துவம் இன்று நாட்டில் உள்ளதா என்பது எனக்குத் தெரியவில்லை.

**சிந்தியுங்கள்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழிநடத்தல் குழுவில் பங்கேற்றது தொடர்பில் எனக்கு இணக்கமில்லை. அதிகம் நல்லவர்களாக அவர்கள்நடந்துகொண்டுள்ளனர். அதனால்தான் தெற்கிலிருந்து சென்று கூட்டாட்சியைக் கொண்டுவருவோம்என்றுபண்டாரநாயக்க கூறியதை நிராகரித்து ஒற்றையாட்சிக்குள் சிங்களவர்களுடன்வாழ்வோம்என்றார்கள். நானாக இருந்திருந்தால், வழிநடத்தல் குழுவில் பங்கேற்றிருக்கமாட்டேன். அனைத்துச் சிங்களக்கட்சிகளும்இணைந்துதீர்வைபன்னாட்டுச்சமூகத்திடம்முன்வைக்கவேண்டும். அதனை நாங்கள் பரிசீலிக்கின்றோம் என்றுதான்கூறியிருப்பேன். அதிகம்நல்லவர்களாக கூட்டமைப்பு நடந்து கொண்டதால்தான் இங்கு வந்து அவர்கள் அமர்ந்துள்ளார். அதனைப் பற்றிச் சிந்தியுங்கள்.

கட்சிபேதங்களை, இனவாதத்தைஒருபக்கம் தூக்கிப்போட்டுவிட்டுச் செயற்படுங்கள். இது அரசியல் பிரச்சினை அல்ல. நாட்டின் பிரச்சினை. எங்குதவறுஇழைத்தோம்என்பதைப் புரிந்து கொண்டு தீர்க்க வேண்டும். தீர்க்க முடியாது என்றால் வழிநடத்தல் குழுவில் இருப்பதையிட்டு நான் வெட்கமடைகிறேன். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை பிரித்து இன வாதத்தை தொடர்ந்து கொண்டுசெல்ல முற்படுவது விடுதலைப் புலிகள் கோரிய பிரிவினைவாதத்தைவிடமிகவும்மோசமானது- என்றார். (ஒ.5,10)

---

தீர்வுக்கு

# பெயர்ப்பலகை முக்கியமல்ல

## கூறுகிறார் டக்ளஸ்

கொழும்பு, ஜன. 12

அரசியல் அதிகாரங்களே எமது மக்களின் வேணவாக்கள். மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டு. பகிரப்பட்ட அதிகாரங்கள் நிலைபேறானதாகவும் மீளப்பறிக்கப்படமுடியாதவையாகவும்இருத்தல்வேண்டும். இறைமையுள்ள மாகாணங்களை கொண்ட இறைமையுள்ள நாடாக இருத்தல் வேண்டும். மதச்சார்பற்ற, இருமொழிக்கொள்கையுள்ள நாடாகவும் இருத்தல் வேண்டும். தமிழ் பேசும் மக்களுக்கு சிறப்பு அதிகாரங்களை கொண்ட அரசியல் ஏற்பாடு உள்ளடக்கப்பட வேண்டும். இவைகள் மட்டும் இருந்தால் போதும். இத்தகைய தீர்வுக்கு எந்தப்பெயரை சூட்டினாலும் நாம் ஏற்றுக்கொள்வோம். இவ்வாறுஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அரசமைப்புநிர்ணயசபையில்நேற்றுஉரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**பிசாசுகள்**

தமிழ்பேசும்மக்களின்அரசியல்வேணவாக்கள் அனைத்தையும் புதிய அரசமைப்பு முழுமையாக ஏற்றுக்கொள்ளுமேயானால் நாம் நிச்சயம் அதை ஏற்றுக்கொள்வோம். ஆனாலும் ஒற்றையாட்சியா? கூட்டாட்சியா? என்ற வாதச்சண்டைக்குள் தீர்வு முயற்சிகள் முடங்கிப்போய் விட நாம் அனுமதிக்க முடியாது. தீர்வின் பெயர் எமக்கு பிரதானம் அல்ல. ஒற்றையாட்சிஎன்றால்தமிழ்மக்களின்பார்வையில் சிங்களப்பிசாசு! கூட்டாட்சி என்றால் சிங்கள மக்களின்பார்வையில்தமிழ்ப்பிசாசு!! இரண்டுமே பிசாசுகள் அல்ல என்பதை தெளிவூட்ட விரும்புகிறேன்.

**ஒற்றையாட்சி**

அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும், அதனை மீளமைப்பதற்குமான அதிகாரங்கள்கொழும்புஅரசுக்கேஉண்டுஎன்று இங்கு கொண்டுவரப்படும் வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது; மாகாணங்களுக்கான அதிகாரங்களை கொழும்பு அரசால் குறைக்கவும் முடியும், பறிக்கவும் முடியும், மாகாண சபை முறைமையை அகற்றிவிடவும் முடியும் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இது ஒருமித்த நாட்டிற்குரிய அதிகாரங்கள் அல்ல என்றும் மாறாக, ஒற்றையாட்சிக்குரிய பண்புகளையே கொண்டிருக்கிறது என்பதையும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாலை, வெள்ளிக்கிண்ணத்தில் குடித்தாலும், பொற்கிண்ணத்தில் குடித்தாலும், பால் வெள்ளியாகவோ, பொன்னாகவோமாறிவிடப்போவதில்லை. பால் என்றும் பால்தான். அதே போல் ஒற்றையாட்சிக்குரிய அதிகாரங்களை கொண்டிருக்கும் அரசமைப்புக்கு ஒருமித்த நாடுஎன்றுபெயர்சூட்டிவிட்டால்ஒற்றையாட்சி கூட்டாட்சியாக மாறி விடாது.

**மேலதிக ஆசனங்கள்**

நாட்டில்இருமொழிக்கொள்கையானதுநடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தைஇங்குசுட்டிக்காட்டவிரும்புகின்றேன். இரண்டாம் சபை என்கின்ற தலைப்பின் கீழ், இரண்டாம் சபைக்கு 55 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் சபையானது சிறுபான்மைஇனமக்களதுபிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகக் கொண்டுவரப்படுவதால் 50க்கு 50 என்ற விகிதாசாரத்தில் சிறுபான்மை, பெரும்பான்மைஇனரீதியில்உறுப்பினர்கள்தெரிவுசெய்யப்படவேண்டும்என்ற விடயத்தையேநான்தொடர்ந்தும்வலியுறுத்தி வருகின்றேன். மாகாணசபையின்அதிகாரங்கள்பறிபோகாமல்இருப்பதற்கும்இந்த50க்கு 50 என்ற இன விகிதாசார உறுப்பினர்கள் தேர்வே சிறந்தது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்பற்றிஇங்கேகுறிப்பிடப்பட்டுள்ளவாறு வடக்கு மாகாணத்துக்கு மேலதிகமாக 4 ஆசனங்கள்வழங்கப்பட்டிருப்பதுவரவேற்கத்தக்கது. அதேபோன்றுகிழக்குமாகாணத்திலிருந்தும் போர்ச் சூழ்நிலை காரணமாக சுமார் 3 இலட்சம் பேர் வரையில் இடம்பெயர்ந்திருப்பதால், கிழக்குமாகாணத்துக்கும்3மேலதிகஆசனங்கள் தேவை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**அசல்களின் இடத்தில் நகல்கள்**

அரசியலை ஒரு தொழில் போல் கருதாமல். தனதுஅரசியல்கடமையாககருதியதாலும், தரகு அரசியலைநிராகரித்துதமிழ்பேசும்மக்களின் வேணவாக்களைபிரதிபலிப்பவராக இருந்ததாலுமே கலாநிதி நீலன் திருச்செல்வத் தால் சிறந்த வரைவை தயாரிக்க முடிந்திருந்தது.

ஆனாலும், கான மயில்கள் களமாடிய இடத்தில் வான் கோழி வந்து தானும் ஆட நினைப்பதுபோல், அசல்கள்இருந்தஇடத்தில்நகல்கள் வந்து உட்கார்ந்திருப்பதால் தமிழ் பேசும் மக்களின் வேணவாக்கள் யாவும் இன்று தரகு அரசியலுக்காக விலை பேசப்படுகின்றது.

மேய்ப்பவர்கள் கதை கேட்டு வழி தடுமாறிச் செல்ல தமிழ் மக்கள் மந்தைகள் அல்ல. வழி காட்ட வேண்டிய அரசியல் தலைமைகள் எமது மக்களின் மேய்ப்பவர்களும் அல்ல. பிரிட்டனின் ஒற்றையாட்சி முறைமைக்குள் கூட்டாட்சிக்கு நிகரான அதிகாரங்களை அனுபவிக்கும் ஒரு அயர்லாந்து போல், ஸ்கொட்லாந்து போல் தமிழ் பேசும் மக்களும் தலை நிமிர வேண்டும் - என்றார். (ஒ.5)

# தமிழர்களின் போராட்டம் வெற்றிபெறாது நீடிப்பதற்கு எங்களிடம் ஒற்றுமையின்மையே முக்கிய காரணம்!

## மன்னார் குடிமக்கள் குழுத் தலைவர் தெரிவிப்பு

**தலைமன்னார், ஜன. 12**

**தமிழ்ச்சமூகம்நூறுவருடங்களுக்குமேலாகச்சந்தித்துவரும்போராட்டம் இன்னும் வெற்றிபெறாதுள்ளமைக்கு, எங்கள் மத்தியில் ஒற்றுமையின்மையே முக்கிய காரணம் என்று மன்னார் மாவட்ட குடிமக்கள் குழுத்தலைவர்அருட்பணிஅ.ஞானப்பிரகாசம்அடிகளார்தெரிவித்தார்.**

இழப்புக்கள், பிரச்சினைகள் கொண்ட நாடுகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்ள ஜேர்மன் நாட்டுக் கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் லூட்விங் சிக் ஆண்டகை தலைமையிலான குழுபயணித்துவருகின்றது. அவ்வாறு இலங்கை வந்த அந்தக் குழு மன்னார் மாவட்டத்துக்குக் கடந்த சனிக்கிழமை பயணித்தது.

இந்தக் குழுவினரின் கருத்தமர்வில் ஞானப்பிரகாசம் அடிகள் கருத்துரைக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டக் குடிமக்கள் குழு காணாமல் ஆக்கப்பட்டோர் விடயமாகவும், சிறையில் அரசியல் கைதிகளாக இருப்போரின் விடயமாகவும் தனது கடமையைஒருசெயற்றிட்டஅடிப்படையில்செய்துகொண்டுவருகின்றது.நீதியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் இந்த அமைப்புச்செயற்பட்டுவருகின்றது.

இந்த நேரத்தில்நாங்கள்பலமுட்டுக்கட்டைகளைச் சந்திக்க வேண்டியும் உள்ளன.

இங்குள்ள அரசியல் வேறுபாடுகள், சாதிப்பிரச்சினைகள், மதங்களுக்கிடையேயுள்ளபிழையானஎண்ணங்களும் பொருளாதாரப் போட்டிகளும் செயற்பாடுகளும் அதாவது தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் உட்பட அரசு சார்பான திணைக்களங்கள் மக்களின் நலனுக்கானசெயற்பாட்டில்முட்டுக்கட்டைகளாகவே இருக்கின்றன.

எமது மக்களின் நிலங்கள் பறிக்கப்படுகின்றன.


இங்குள்ள மக்களின் பொருளாதாரப் பின்னணிக்கு முக்கிய காரணமாக இருப்பதில் ஒன்று நுண்நிதிக் கடன் வழங்கும் நிறுவனங்கள். இவை மக்கள் மத்தியில் தேவையான பொருள்களைக்கடனாக வழங்கி, மக்கள் தங்கள் உரிமைகள்பற்றிச்சிந்திக்காவண்ணம் ஆடம்பரப் பொருள்களை வழங்கி கடனாளிகளாகமாற்றிக்கடனைப்பற்றியே சிந்திக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளன.

மக்களின் நலன் நோக்கி நாங்கள் முன்னெடுக்கும் செயல்களுக்குப் பல சவால்கள், தடைகள் காணப்படுகின்றன. எங்கள் உரிமைக்கானபோராட்டாம்சுமார் நூறு ஆண்டு காலமானதாக இருக்கின்றது.

1915ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும்இதுவரைக்கும்நாங்கள்எதைச் சாதித்து இருக்கின்றோம் என்பது எம் மத்தியில் இருந்து வரும் கேள்வியாகவுள்ளது.

**ஒற்றுமை தேவை**

இவற்றுக்கெல்லாம் காரணம் எங்கள் மத்தியில் நிலவும் ஒற்றுமையின்மையே. பல விடயங்களில் நாங்கள் பிரிந்திருக்கின்றோம். இப்பொழுது எங்களுக்கு முக்கியமாக தேவைப்படுவது ஒற்றுமையே.



அனைவரும்ஒரேமக்களாகக்கைகோர்த்துநிற்கவேண்டியஅவசியம்ஏற்பட்டிருக்கின்றது. இங்கு அரசு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையே இருக்கின்ற பிளவுகள் ஒருவர் ஒருவருடன் சேர்ந்து செயல்படாததன்மைகளும்இவற்றுக்கு முக்கிய காரணமாக இருக்கின்றது.

ஒரு சிலர் தங்கள் சுயநலத்துக்காக அப்பாவிமக்களைப்பணத்துக்காகப் பயன்படுத்துகின்றார்கள். இவைகள்எல்லாம் நிவர்த்திசெய்யப்படவேண்டும். இவைகள்எங்களுக்குசவாலாகவும்காணப்படுகின்றது.

இதனால்பத்துவருடங்களுக்குபிற்பாடு எப்படிப்பட்ட சமூகத்தை பார்க்க இருக்கின்றோம் என்பது எங்கள் மத்தியில் இருக்கும்ஒருகவலை-என்றார். (த-60)

---

வெள்ளத்தால்பாதிக்கப்பட்டோருக்கு

# வீடுகள் அமைக்கும் பணி இன்றுவன்னியில்ஆரம்பம்

கிளிநொச்சி, ஜன. 12

வன்னியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணி இன்று சம்பிரதாயபூர்வமாகஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர். இந்தப் பணிகளை ஆரம்பித்து வைப்பதற்காக அதன் தலைவர் பலந்தூரிய வடக்குக்கு வருகைதரவுள்ளார்.

வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட மக்களைகடந்தமாதம்நேரடியாகச் சந்தித்த அமைச்சர் சஜித், பிரேமதாச தனது பிறந்தநாள் அன்று வீடமைப்புப் பணிகளை ஆரம்பிப்பேன் என்று கூறியிருந்தார். அவரதுபிறந்தநாளான இன்று அந்தப் பணி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

3 ஆயிரத்து 600 வீடுகள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சேதமடைந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளன. புதிய வீடுகள் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. பகுதியளவில்சேதமடைந்த வீடுகளுக்கான கொடுப்பனவுகளையும் அரசு வழங்கவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் உமையாள்புரம், முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் வீடுகள் அமைக்கும் பணி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது. (ஒ.5,7)

---

## இதுவரை அவசர சேவைகளில் ஈடுபட்டுவந்த காவுவண்டிகள் இனி நோயாளரை இடமாற்றும்

யாழ்ப்பாணம், ஜன. 12

இந்திய அரசால் வழங்கப்பட்ட நோயாளர்காவுவண்டிகள் அவசர சேவைக்கும், ஏற்கனவே சேவையில் உள்ள நோயாளர் காவு வண்டிகள் நோயாளர்களை இடம்மாற்றவும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன என்று மாகாண சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

திடீர் மருத்துவ தேவைகளானவிபத்து, நெஞ்சுவலி, பிரசவம், நஞ்சருந்தல், விசப் பூச்சிகள் கடி போன்ற பல்வேறுதேவைகளுக்கும் அவரச நோயாளர் காவு வண்டிகள் சேவையில்ஈடுபடுத்தப்பட்டன. மருத்துவ மனைகளுக்கு இடையே நோயாளர்களை மாற்றம் செய்வதற்கு வண்டிகள் போதுமானதாக இருக்கவில்லை. கடந்த வருடம் ஜூலைமாதம்20ஆம்திகதி நோயாளர் காவுவண்டிகளை இந்திய அரசு வழங்கியது.

யாழ்ப்பாணம் 7, கிளிநொச்சி 4, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்ஆகியவற்றுக்குத் தலா 3 வீதம் வடக்குமாகாணத்துக்கு20 வண்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவை தற்போது அவசர சேவையில் மட்டும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஆகவே முன்னர் மருத்துவ மனைகளின்ஊடாகச்சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அவரச நோயாளர்காவுவண்டிகள் மருத்துவ மனைகளுக்கு இடையேநோயாளர்களை மாற்றம்செய்தல்உள்ளிட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றுதெரிவிக்கப்பட்டது. (த-7)

---

# வடக்கு மாகாண சபைக் கீதம் நிகழ்வுகளில் இசைக்கப்படும்

## கீதம் உருவாக்கப் பங்காற்றிய கலைஞர்களை மதிப்பளிக்கும் நிகழ்வில் சி.வி.கே. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 12

வடக்குமாகாண கீதம்அனைத்துவடக்கு மாகாண அலுவலகங்கங்களின் உத்தியோக பூர்வ நிகழ்வுகளில் இசைப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்படும் என்றுவடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கீதம் உருவாக்குவதற்குபணியாற்றியகலைஞர்களைமதிப்பளிக்கும் நிகழ்வு அவைத் தலைவர் தலைமையில் சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்துக்கு கீதம் உருவாக்கப்பட்டுள்ளது. இது வரலாற்றுப் பதிவாக அமையும். இதற்காகப் பாடுபட்ட அனைத்து கலைஞர்களுக்கும் இந்த இடத்தில்நன்றிசொல்லக்கடமைப்பட்டுள்ளேன். வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு61ஆவதுசபையின்தீர்மானமாக வடக்கு மாகாணக் கீதம் இயற்றப்பட வேண்டும்என்றுகோரிக்கைமுன்வைக்கப்பட்டுதீர்மானம்நிறைவேற்றப்பட்டது. அதற்கு அமைவாக வேலைகள் நடைபெற்றன. வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம்நிறைவடையும்இறுதிஅமர்வில் மாகாணக் கீதத்துக்கான அனுமதி சபையில் பெற்றுக்கொள்ளப்பட்டு அது முழுமை அடைந்துள்ளது. இந்தக் கீதம் அனைவரையும்சென்றடையவேண்டும். மாகாண சபையின் ஆளுகைக்கு உட்பட்ட அனைத்துஅமைச்சு, திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலகங்களிலும் நடைபெறும்உத்தியோக பூர்வ நிகழ்வுகளில் வடக்கு மாகாணக் கீதம் இசைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

மாகாணதலைமைச்செயலர்அ.பத்திநாதன் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான திட்டங்களில் இதுவும் ஒன்று. வடக்கு மாகாணத்தில் நடைபெறும் உத்தியோக பூர்வ அலுவலக நிகழ்வுகளில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு அடுத்ததாக மாகாண கீதம்இசைக்கபட்டுமாகாணகொடிஏற்றுவதற்கான நடைமுறையை கொண்டு வருவதற்கு சுற்றறிக்கை ஒன்றை அனைத்துத் திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

நிகழ்வில்மாகாணகீதத்தைஉருவாக்குவதற்குப் பணியாற்றிய பாடலாசிரியர், பாடகர்கள், கவிஞர்கள், இசையமைப்பாளர்கள் மதிப்புறுத்தப்பட்டனர். வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், அமைச்சின் செயலார்கள், திணைக்களத்தலைவர்கள், கவிஞர்கள்எனப்பலர் நிகழ்வில்கலந்துகொண்டனர். (த-7)

---

## தென்னைப்பயிர்ச்செய்கையாளர்களுக்கு கடந்த வருட மானியம் விரைவில் வரும்

*பிராந்தியதென்னைப்பயிர்ச்செய்கைச்சபைதெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 12

வடக்கு மாகாணத்தில் தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்குக்கடந்த வருட மானியத்துக்கான காசோலைகள் அனைத்தும் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்குள் வழங்கப்படும் என்று யாழ்ப்பாணப் பிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கைச்சபைதெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் தென்னைச்செய்கையாளர்களுக்குப்பல்வேறுவேலைகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. ஊடுபயிர்ச்செய்கை, பசளைப் பாவனை போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன.

இதற்காகக் கடந்த வருடம் 7.5மில்லியன்ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகக் கிடைக்காமையால் மானியத்துக்கான காசோலைகள்வழங்கப்படவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தென்னைச் செய்கையாளர்களில்அநேகமானவர்களுக்குக்கடந்தவருடம்மானியத்துக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டம் 230, முல்லைத்தீவுமாவட்டம்130, கிளிநொச்சிமாவட்டம் 30 பயனாளிகளுக்கு மானியத்துக்கான காசோலைகள் இன்னமும் வழங்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட நிதிகிடைக்கும். எதிர்வரும்பெப்ரவரிமாதத்துக்குள் அனைத்துத் தென்னைச் செய்கையாளர்களுக்கும் மானியத்துக்கான காசோலை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

# கிழக்கு ஆளுநராக ஹிஸ்புல்லா வேண்டாம்; எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கில் கடையடைப்பு

அம்பாறை, ஜன. 12

கிழக்கு மாகாண ஆளுநர் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்குதமிழ்மக்கள்செறிந்துவாழும்பகுதிகளில்நேற்று வெள்ளிக் கிழமை கடையடைப்பு இடம்பெற்றது.





தனியார் வர்த்தக நிலையங்கள் முழுவதும் மூடப்பட்டிருந்தன. வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. அரசதிணைக்களங்கள்பாடசாலைகளில்வழமையான எண்ணிக்கையானோர் சமுகமளிக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

அரச அலுவலகங்களின் வழமையான செயற்பாடுகளும் மந்த நிலையில் காணப்பட்டனஎன்றும்பொதுமக்களின் வருகை குறைந்து காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அரச வங்கிகள் மற்றும் தனியார்வங்கிகளின்செயற்பாடுகளும் மந்த நிலையிலேயே காணப்பட்டன.

அரச, தனியார் பேருந்துகள் குறைந்தளவிலேயே பணியில் ஈடுபட்டன.

தைப்பொங்கல் வியாபாரத்துக்காக வெளி மாவட்டங்களிலிருந்து வந்து திருக்கோவில் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள், முஸ்லிம், தமிழ் வியாபாரிகளின்அங்காடிச்சந்தைகளும் முழுமையாக மூடப்பட்டிருந்தன.

கடையடைப்பை வலியுறுத்தி கிழக்கு மக்கள்ஒன்றியம்எனும்பெயரில்துண்டு அறிவித்தல்கள் ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்தன.

கிழக்குமாகாணஆளுநராகஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டார். அவர்ஆளுநராகநியமிக்கப்படும்வரைநாடாளுமன்றஉறுப்பினராகப்பதவிவகித்தபோதும்இனவாதம் பேசியவர் என்று அரசியல்வாதிகள் பலரும் குற்றஞ்சாட்டிவருகின்றனர்.

தற்போது கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், அமைப்புக்கள் பலரும் ஹிஸ்புல்லாவின்நியமனத்துக்குஎதிர்ப்புத்தெரிவித்து வருகின்றனர். (த)

## வடக்கின் முன்னாள் ஆளுநர் குரே அதிகாரசபைத் தலைவரானார்

கொழும்பு, ஜன. 12

வடக்குமாகாணமுன்னாள் ஆளுநர்ரெஜினோல்ட்குரே தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவ்வாறேசப்ரகமுவ மாகாணத்தின் முன்னாள் ஆளுநர்நிலூகாஏக்கநாயக்கஅரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.


அரசதலைவர்மைத்திரிபால சிறிசேன இந்த நியமனங்களை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரே. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் சுதந்திரக் கட்சிக்கு எதிராக அரசியல்சூழ்ச்சியில் ஈடுபட்டார் என்று கூறப்பட்டு வந்தது. இந்த நிலையில்பதவிவிலகுமாறு கூறப்பட்டசிலஆளுநர்களில் ஒருவரான குரே கடந்த வாரம் பதவி விலகியிருந்தார். (த-7)



## அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சர்களாகினர் இருவர்

### பிரதியமைச்சரானார் ஒருவர்



கொழும்பு, ஜன. 12

அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சர்கள் இருவரும் பிரதியமைச்சர் ஒருவரும் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்துள்ளனர் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அரசதலைவர் செயலகத்தில் அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனமுன்னிலையில்மூவரும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

அதன்படிஅமைச்சரவைஅந்தஸ்துஅல்லாத அமைச்சர்களாக, ரவீந்திர சமவீர தொழில் மற்றும்தொழிற்சங்கஉறவுகள் அமைச்சராகவும் வி.ராதாகிருஷ்ணன் சிறப்புப் பிரதேச அபிவிருத்தி அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறைப் பிரதியமைச்சராக அப்துல்லாஹ் மஹ்ரூப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை, அமைச்சர்தயாகமகேவகித்து வந்த அமைச்சுப் பதவியிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு சமூக வலுவூட்டல் அமைச்சுப்பதவி வழங்கப்பட்டுள்ளது என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## வைத்தியசாலை வீதியை சீரமைக்குமாறு கோரிக்கை

நவாலி, ஜன. 12

நவாலி தெற்கு ஆயுள் வேத வைத்தியசாலை வீதியை மீள் சீரமைப்பு செய்துதருமாறு அந்தப் பகுதியில்வசிப்பவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அங்குள்ளநோயாளர்களும் பொதுமக்களும் இது பற்றிய கோரிக்கையை வலி.தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேசசபைத்தவிசாளரிடம் கோரியுள்ளனர்.

நவாலி தெற்கில் ஹேமலதாஞாபகார்த்தஆயுள் வேத வைத்தியசாலை உள்ளது. அந்தவைத்தியசாலைக்கு செல்லும் வீதியில் 180 மீற்றர் நீளமான பகுதி கற்கள் வெளிக்கிளம்பியநிலையில் உள்ளது. (த-50)

## திருகோணமலைத் துறைமுகம் அமெரிக்காவுக்குத் தாரைவார்ப்பா?

### சபையில் விமல் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஜன. 12

கிழக்கின் திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்ககடற்படையின் கட்டுப்பாட்டில்கொண்டுவரும் உடன்படிக்கையை அரசு செய்யவுள்ளதா என்றுஎதிர்க்கட்சிஉறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஆளும்தரப்பிடம்கேள்வி எழுப்பினார்,

நாடாளுமன்றில் கடந்த புதன்கிழமை இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தின் போது கேள்விஎழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்ககடற்படையின் கடற்படைப் பயிற்சிகளுக்கும் அவர்களின் இராணுவ நகர்வுகளுக்கும் இலங்கையின் கிழக்கில் முகாம் ஒன்றை வழங்க அரசுதீர்மானம் எடுத்துள்ளதாகஅறியமுடிகின்றது. கிழக்கில் திருகோணமலைத் துறைமுகத்தை அவ்வாறு வழங்க உடன்படிக்கைசெய்துள்ளதாகத் தகவல்கள் மூலமாக அறியமுடிகின்றது. உண்மையில் அரசு அவ்வாறான தீர்மானம் ஒன்றை முன்னெடுத்துள்ளதா? அமெரிக்கக் கடற்படை அவ்வாறு கைப்பற்றியுள்ளதா என்று அயலுறவு அமைச்சர்திலக்மாரப்பனவிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் தெரிவித்த அயலுறவு அமைச்சர் : அவ்வாறு எந்தவொரு உடன்படிக்கையும்செய்து கொள்ளப்பட்டுள்ளதா என்று எனக்குத் தெரியாது. இதனைப் பாதுகாப்பு அமைச்சரிடமே கேளுங்கள் என்று பதில் தெரிவித்தார்.

இதற்கு கருத்து முன்வைத்தவிமல்:பன்னாட்டு உடன்படிக்கை குறித்து உங்களிடம்தானேகேட்க வேண்டும். உங்களுக்கு இது குறித்து எந்தவிடயமும் தெரியவில்லையா என்றுஅமைச்சரைநோக்கிக் கேள்வி எழுப்பினார். எனினும்அமைச்சர்திலக் மாரப்பன பதில் கூறாது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். (த-61)

## பாடசாலைகளின் சுற்றாடல்களை அண்மித்து

# போதைப்பொருள்விற்பனையைத்தடுக்க முறையானதிட்டத்தைத்தயார்ப்படுத்தவும்

### பொலிஸாருக்கு அரசதலைவர் பணிப்பு

கொழும்பு, ஜன. 12

பாடசாலைச் சூழலில் இடம்பெறும் பல்வேறு வகையான போதைப்பொருள் விற்பனை நடவடிக்கைகளை முற்றாக இல்லாதொழிப்பதற்கு முறையான நிகழ்ச்சித் திட்டமொன்றைச் தயார்ப்படுத்துங்கள். அனைத்துத் தரப்பினரினதும் பங்களிப்புடன் அதை நடைமுறைப்படுத்துங்கள் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணித்துள்ளார்.

அதற்குத்தேவையானசட்டத்திருத்தங்களைவிரைவாகமேற்கொண்டுநடைமுறைப்படுத்துமாறும்மைத்திரிஅதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அந்தப்பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

போதைப்பொருள்களைக்கட்டுப்படுத்தல்தொடர்பாகஅரசதலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

பாடசாலைச் சூழலில் இடம்பெறும் பல்வேறு வகையான போதைப்பொருள் வியாபாரம் மற்றும் மாணவர்கள் அவற்றுக்கு அடிமையாவது பற்றிய பல்வேறு தகவல்கள் தமக்குக் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்ட அரசதலைவர், இந்த நாசகார நடவடிக்கைகள் தலைதூக்குவதற்கு இடமளிக்க வேண்டாமென்றும் பணிப்புரை விடுத்தார்.

சட்டவிரோதபோதைப்பொருள்களைக்கட்டுப்படுத்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களைபலப்படுத்தி உரிய சட்டதிட்டங்களைதிருத்தும்நடவடிக்கைகளும்தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அனைத்துச் சட்டத் திருத்தங்களையும் விரைவாக மேற்கொண்டு உரிய அதிகாரங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அதிகாரிகளுக்குப் பணித்தார்.

பாதுகாப்புஅமைச்சின்செயலர்ஹேமசிறிபெர்ணான்டோஉட்பட அமைச்சின் செயலர்களும் குறித்த நிறுவனங்களின் தலைவர்களும், அரச அதிகாரிகளும், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர் என்றுள்ளது. (த)

ரில்வின் சில்வாவுக்கு

# ரூ.10 மில். செலுத்த விமலுக்கு உத்தரவு

மக்கள் விடுதலை முன்னணிக்கு ஒரு கோடி ரூபா இழப்பீட்டுத் தொகையை செலுத்துமாறு நீதிமன்றம் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலர் ரில்வின் சில்வாவினால் தொடரப்பட்ட வழக்கிலேயே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலராக விமல் வீரவன்ச, அங்கம் வகித்த போது நிறைவேற்றுக்குழுவில் தான் முன்வைத்த கருத்துக்கள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டமைக்கு எதிராக நீதிமன்றில் வழக்கொன்றை ரில்வின் சில்வா தாக்கல் செய்திருந்தார்.

புலமைச்சொத்துக்கள் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளியாக அடையாளங்காணப்பட்ட விமல் வீரவன்ச, மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலர் ரில்வின் சில்வாவுக்கு 10 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஓ.5)

# புதிய ஆளுநர்களுடன் மைத்திரி திடீர் சந்திப்பு

இலங்கையின் 8 மாகாணங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள புதிய ஆளுநர்களை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். அரச தலைவர் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மாகாணங்களின் தலைமைச் செயலர்களும் பங்கேற்றிருந்தனர்.

சந்திப்புத் தொடர்பில் அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மக்களுக்கான சேவைகளை முறையாகவும் வினைத்திறனாகவும் வழங்குவதோடு அரசின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அனைத்து புதிய ஆளுநர்களும் நேரடியாகத் தலையிடுவார்கள் என்று எதிர்பார்ப்பதாக அரச தலைவர் தெரிவித்தார்.

மாவட்ட ரீதியாகவும் அரச தலைவர் செயலகத்தினாலும் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

ஜனவரி 21 முதல் 28 வரையான காலப்பகுதி தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் சீர்கேடுகள் தொடர்பில் சமூகத்தை விழிப்பூட்டும் பல வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் பாடசாலை மாணவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களை இலக்காகக்கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்த அரச தலைவர், அவ்வேலைத்திட்டங்களில் தமது தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தி பங்களிப்புகளை வழங்குமாறு ஆளுநர்களிடமும் மாகாண முதன்மைச் செயலர்கள் உள்ளிட்ட அதிகாரிகளிடமும் வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அரச தலைவர் மைத்திரிபால, தான் சுகாதார அமைச்சராக பணியாற்றிய காலகட்டத்தில் போதைப்பொருளுக்கு எதிராக தம்மால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் காரணமாக ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் போதைப்பொருள்களுக்கு எதிராக கடுமையான சட்டதிட்டங்கள் காணப்படுவதாகத் தெரிவித்தார். அத்தகைய சட்டங்களை மேலும் வலுப்படுத்துவதுடன், போதைப்பொருளினால் ஏற்படும் சவால்களை வெற்றிகொள்வதற்காகத் தனது ஆட்சிக்காலத்துக்குள் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போதைப்பொருள் பாவனையை தடுப்புக்காக அரசால் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றின் முன்னேற்றம் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலின்போது மீளாய்வு செய்யப்பட்டது.

பெப்ரவரி மாதம் 18 முதல் 23ஆம் திகதி வரையான காலத்தை தேசிய கிராமசக்தி வாரமாக அறிவித்து, 4 ஆயிரம் கிராமங்களுக்கு கிராமசக்தி செயற்திட்டத்தை கொண்டு செல்லும் நோக்கத்தோடு பல வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்த வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநர்கள் தெளிவுப்படுத்தப்பட்டனர் - என்றுள்ளது. (ஓ.5)



மாத்திரையைப் போதையாகப் பயன்படுத்திய விவகாரம்

# பிராந்திய மருந்தகங்களிலேயே மாணவர்களுக்கு விற்கப்பட்டன

## யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.12

**வலி.வடக்கு மீள்குடியமர்வுப் பகுதியில் மாத்திரைகளைப் போதைப் பொருளாகப் பயன்படுத்தினர் என்று கூறப்படும் மாணவர்கள் அந்தப் பிராந்தியத்தில் உள்ள சில மருந்தகங்களிலேயே அவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள பத்திரிகைச்செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அந்த மருந்தகங்களில் சுகாதாரப் பகுதியினர் பரிசோதனை மேற்கொண்டபோது மாணவர்களுக்கு அந்த மருந்துகள் வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன என்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்கும் மாணவர்கள் மூவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு, அசாதாரண நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்தச்சம்பவம் கடந்த புதன்கிழமை நடந்துள்ளது.

மாணவர்களுக்கான ஒன்றுகூடல் ஒன்று பாடசாலையில் நடைபெற்றுள்ளது. அதில் அனைத்து மாணவர்களும் கலந்துகொண்டிருந்தனர். தரம் 9தைச் சேர்ந்த இந்த 3 மாணவர்களும் வரவில்லை. அவர்கள் வகுப்பறையில் மயங்கும் நிலையில் சோர்வாக இருந்துள்ளனர். அதை அவதானித்த பாடசாலை உப அதிபர் பொலிஸாரின் உதவியை நாடி, மாணவர்களை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

தனது மூத்த சகோதரரிடம் இருந்த வலி போக்கும் மாத்திரை ஒன்றை ஒரு மாணவர் ஏனைய மாணவர்களுக்குக் கொடுத்துள்ளார். அதைப்பயன்படுத்தியதால் உடலில் அசாதாரண நிலமை தோன்றியிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வலிகளுக்குப் பயன்படுத்தப்படும் மாத்திரை ஒன்றை அளவுக்கு அதிகமாக உட்கொண்டால் உடலில் இவ்வாறு அசாதாரண நிலமை ஏற்படும். மாணவர்களும் வலி நிவாரண மாத்திரை வகை ஒன்றைப் பயன்படுத்தினர் என்று எமக்குத் தெரிவித்துள்ளனர். அதற்குரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டன என்று தெல்லிப்பழை மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்திருந்தது.

இந்த மாத்திரைகளை மருத்துவப் பரிந்துரை இல்லாது மாணவர்களுக்கு வழங்கியுள்ளமை சோதனைகளில் தெரியவந்தது என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாகச் சுகாதாரப் பகுதியினர் விரைவான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளனர். சுகாதாரப்பகுதியினர் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உள்படப் பாடசாலைச் சமூகத்துக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர் என்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் வேறு எங்காவது நடைபெறுகின்றனவா? என்பது தொடர்பான சோதனைகள் தற்போது முடுக்கி விடுப்பட்டுள்ளன. அவ்வாறு அறிவிக்கப்படும் சந்தர்ப்புங்களில் அவர்களுக்கு எதிராக அதிகபட்ச நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகள், சுற்றாடல் நிகழ்வுகள் தொடர்பாக அன்னியோன்ய அவதானிப்புடன் இருப்பது அவசியம் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (எ-7,26)

ரவிராஜ் கொலை வழக்கின்

# பிரதிவாதிகள் விடுதலைக்கு எதிரான மேன்முறையீட்டு மனு பரிசிலனைக்கு!

## 30ஆம் திகதி இடம்பெறும் என்று நீதிமன்று அறிவிப்பு

கொழும்பு, ஜன. 12

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் பிரதிவாதி கள் விடுதலைசெய்யப்பட்டமைக்கு எதிரான மேன்முறையீட்டு மனு இந்த மாதம் 30 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அச்சல வெங்கப்புலி நேற்றுமுன்தினம் இதனைக் கூறியுள்ளார்.

குறித்த மேன்முறையீட்டு மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுவின் பிரதிவாதியாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் லெப்டினன்ட் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி என்பவருக்கு இதுவரை அறிவித்தல் கிடைக்கவில்லை என்று மன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றுமொரு வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதிவாதிக்கு அறிவித்தலைக் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மனுதாரர்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

நடராஜா ரவிராஜின் கொலை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று பிரதிவாதி களையும் 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது.

மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக சசிக்கலா நடராஜ் மேன்முறையீடு செய்திருந்தார். (து)

# துப்பாக்கியுடன் இளைஞன் கைது

கொழும்பு, ஜன. 12

புத்தளம் மாவட்டத்தின் மனகூண்டுவப் பகுதியில் வெளிநாட்டுத் தயாரிப்பு துப்பாக்கியுடன் இளைஞன் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த நியாஸ் மொஹமட் (வயது-29) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். கத்தியால் குத்திக் காயம் ஏற்படுத்தியமை மற்றும் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியமை தொடர்பான குற்றச் செயல்களுடன் சந்தேக நபருக்குத் தொடர்பு இருப்பதாகத் தமது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ,5,71)

# சடலங்களைத் தகனம் செய்ய வலி.தெற்கில் கட்டணம்

வலி.தென்மேற்கு, ஜன. 12

வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள இந்து மயானங்களில் சடலங்களைத் தகனம் செய்வதற்கு இனி கட்டணம் அறவிடப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 14 இந்து மயானங்கள் இருக்கின்றன. ஒரேயொரு மயானத்தில் மட்டும் (மானிப்பாய் பிப்பிலி மயானம்) சடலத்தை தகனம் செய்வதற்கு பிரதேச சபையினால் பணம் அறவிடப்பட்டு வருகிறது. இப்பிரதேசத்திலுள்ள பெரும்பாலான மயானங்கள் பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமையினால் காடு போல் காட்சியளிக்கின்றன. அத்துடன் மழை காலங்களில், எரிகொட்டகைகள் இல்லாததனால் சடலங்களை தகனஞ் செய்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்.

இந்த நிலை குறித்து பிரதேச சபைக்கு சுட்டிக்காட்டிய பொது மக்கள் மயானங்களை அபிவிருத்தி செய்து தருமாறு கோரியிருந்தனர். இதற்கமைய மயானங்கள் பல லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதையடுத்து பிரதேச சபையின் வருமானத்தை கருத்தில் கொண்டு ஜனவரி மாதத்தில் இருந்து ஒரு சடலம் தகனம் செய்வதற்கு ஆயிரம் ரூபா வரி அறவிடவேண்டும் என்று சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-115)

## குருதிக்கொடை முகாம்

அளவெட்டி, ஜன.12

குருதிக்கொடை நிகழ்வு அளவெட்டி. தெற்கு றோமன் கத்தோலிக்கத் தமிழ்கலவன் பாடசாலை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும். யாழ்ப்பாணம் மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத் திருநாளை முன்னிட்டு சூரியோதய சனசமுக நிலைய இளைஞர்களினால் குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஐ-63)

## வடக்கில் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை தொடர்கிறது

நவாலி. ஜன. 12

வடக்கில் இயற்கை பாதிப்பு. போர் பாதிப்பு என்பவற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை தொடர்ந்த வண்ணம் உள்ளது. இந்த பாதிப்புகளில் இருந்து முதலில் நாம் சிறுவர்களை பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு உதவுவதற்கும் முன்வர வேண்டும். இவ்வாறு கோப்பாய் பிரதேச தேசோதய சபைத் தலைவர் சமாதான நீதிவான் இ. மயில்வாகனம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபனால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நாற்காலிகள் கோப்பாய் தேசோதய சபைக்கு வழங்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் நலிவுற்ற பாடசாலை மாணவர்களின் விபரங்களை எமக்கு வழங்கினால் நாம் மாணவர்களுக்கான கல்வி உபகரணத் தேவைகளை வழங்குவோம். இதனை விட சர்வோதயத்தின் உதவிகளையும் பெற்று நாம் உதவி வருகின்றோம்.

இதனைவிட மேலாக இன்று வடக்கில் இயற்கை பேரிடரினாலும், கடந்தகால போரினாலும் எமது சிறார்கள் பாதிக்கப்பட்டு உதவிகளற்ற நிலையில் வடக்கு முழுவதும் உள்ளனர்.

இவ்வாறானவர்களுக்கு உதவ வர்த்தகர்கள், புலம்பெயர் அன்புள்ளங்கள், பெரியோர்கள் முன்வர வேண்டும் - என்றார். (50)



## பொங்கல் பொருள்கள் வழங்கிவைப்பு

சாவகச்சேரி, ஜன.12

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டுச் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் சங்கப் பணியாளர்களுக்கு பொங்கல் பொருள்களை சங்க அலுவலகத்தில் வைத்த நேற்று வழங்கி வைத்தனர்.

250 பேருக்கு பொங்கல் பொருள்களை சங்கத் தலைவர் வ. தெய்வேந்திரம் பொது முகாமையாளர் க. நாகசுபாசன் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர். (ஐ-9)

## மயானத்தை சீரமைக்க நடவடிக்கை

வலிதென்மேற்கு, ஜனி.12

போதி மயானத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் வெயியேறியுள்ள நிலையில் மயானத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

வலிதென்மேற்கு பிரதேசத்தில் முதலாம் வட்டாரத்திலுள்ள போதி மயானக் காணியில் ஒரு பகுதியில் இராணுவத்தினர் முகாமிட்டு நிலை கொண்டிருந்தனர். பல வருடங்களாக நிலை கொண்டிருந்த இராணுவத்தினரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கமாறு அப்பகுதி மக்கள் பிரதேச சபையைக் கோரியிருந்தனர். குடாநாட்டில் அரசகாணிகளில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் படி ப்படியாக வெளியேறி வருகிறார்கள். இந்நிலையில் பிரதேச சபைக்குச் சொந்தமான போதி மயானத்தில் முகாமிட்டு நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் கடந்த வாரம் மயானத்தை விட்டு வெளியேறியிருந்தனர்.

இதையடுத்து, இப்பகுதிகளின் நலன்கருதி மேற்படி மயானத்தை அபிவிருத்தி 'செய்யுமாறு முதலாம் வட்டார உறுப்பினர் திருமதி சிவனேஸ்வரி தவிசாளரை கோரியதை தொடர்ந்து மயானம் அபிவிருத்தி செய்யப்பட்டுவருகிறது. (ஐ-115)

## உரிய அனுமதி இன்றி ஆழ்துழைக்கிணறுகள் அமைக்கப்படுகின்றன

சாவ. நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வகைதொகையின்றி ஆழ்துழைக்கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. குடியிருப்பாளர் சபையில் அனுமதி பெறுவதும் இல்லை. ஆழ்துழைக் கிணறுகள் அமைக்கும் நிறுவனம் சபையில் உரிமம் பெறுவதுமில்லை. இதனால் சபைக்கு பெரும் வருமான இழப்பு ஏற்படுவதுடன் பிரதேசத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறு சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் ப. ஜயகாந்தன் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையின் அமர்வு நேற்றுமுன்தினம் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபை எல்லைக்குள் ஆழ்துழைக் கிணறுகள் அமைப்பதாயின் சபையில் அனுமதி பெற்று உரிய திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் பார்வையிட்டு காண்பிக்கும் இடத்தில் ஆழ்துழைக்கிணறுகள் அமைக் கப்பட வேண்டும்.

ஆழ்துழைக்கிணறுகள் அமைக்கும் நிறுவனங்கள் சபைக்கு வெளியில் உள்ள பிரதேசங்களிலிருந்து வருகை தந்து அமைத்து விட்டுச் செல்கின்றன. அவர்கள் தாம் வதியும் பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி சபையில் உரிமம் பெறுவதுமில்லை இவ்வாறான நிறுவனங்கள் சபையில் பதிவு செய்து உரிய உரிமம் பெற்ற பின்னரே சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆழ்துழைக்கிணறுகள் அமைக்க முடியுமென அறிவித்தல் வெளியிட வேண்டும். - என்றார்.

அவ்வேளையில் உரையாற்றிய உறுப்பினர் க. சிவராசா ஆழ்துழைக்கிணறுகள் அமைக்க நிறுவனத்தினர் 20 ஆயிரம் ரூபா கட்டணம் அறவிடுகின்றனர். ஆனால் உரிய திணைக்களத்துக்கு அனுமதிக்காக விண்ணப்பித்தால் வந்து பார்வையிட்டுச் செல்ல 47 ஆயிரத்து 500 ரூபா கட்டடணமாகச் செலுத்துமாறு தெரிவிக்கின்றனர். இதனாலேயே மக்கள் திணைக்களத்தில் பதிவு செய்யச் செல்வதில்லையெனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக தவிசாளர் உரையாற்றுகையில் கடந்த ஜூன். ஜுலை மாதங்களில் அனுமதியின்றி ஆழ்துழைக்கிணறுகள் அமைக்கப்படுவதால் தமது கிணறுகளில் தண்ணீர் குறைவடைந்து வருகின்றது என மக்கள் முறைப்பாடு செய்ததையடுத்து பொதுமக்களும் நிறுவனங்களும் சபையில் அனுமதி பெற வேண்டுமென பத்திரிகைகளில் விளம்பரம் செய்தபோதிலும் உறுப்பினர் சிவராசா தெரிவித்தது போன்று அதிகபணம் செலுத்தவேண்டுமெனக் கருதி மக்கள் எம்மிடம் வருவதில்லை எனவும் ஆழ்துழைக் கிணறுகள் அமைக்கும் குடியிருப்பாளர் மீதும் நிறுவனத்தின் மீதும் சட்ட நடவடிக்கை எடுத்தாலே தடுக்க முடியும் எனத் தெரிவித்தார். (ஐ-9)

## பழைய மாணவர் ஒன்றுகூடல்

கொடிகாமம், ஜன. 12

கொடிகாமம் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் ஒன்றுகூடல் பாடசாலை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் ஒன்றுகூடலில் கலந்து கொள்ளுமாறு அதிபர் கே. சத்தியானந்தன் அறிவித்துள்ளார் (ஐ-159)

## தாழ்நிலக்குடியிருப்புக்கள் வெள்ளம் தேங்காதவாறு உயர்த்தப்படவுள்ளன

அச்சுவேலி. ஜன. 11

'அச்சுவேலி தெற்கு மற்றும் அச்சுவேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள தாழ்நிலக் குடியிருப்பு பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கி நிற்காத அளவுக்கு மண்நிரப்பப்பட்டு உயர்த்தப்படவுள்ளது. இதற்கான முன்மொழிவுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் இந்த வருடம் கோடை காலப் பகுதியில் வேலைகள் முன்னெடுக்கப்படும்' என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவ திணைக்கள உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தகவல் தெரிவித்ததாவது:

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி வடக்கு பகுதியில் தாழ்நிலக் குடியிருப்புகளில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் குறித்த பகுதிகளில் குடியிருக்கும் குடும்பங்கள் இடர்பாடுகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்த இடர்பாடுகள் தொடர்பில் எமது திணைக்கள அலுவலர்கள் நேரில் சென்று பார்வையிட்டதுடன் தற்காலிகமான உதவிகளையும் வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வகையான 4 தாழ்நிலக்குடியிருப்புக்கள் மண் நிரப்பி உயர்த்தப்பட்டுள்ளன. அந்த வகையில் இது ஐந்தாவது பகுதியாக அமையும் - என்றார்.

தொண்டமானாறு குடாக்கடல் நீரேரி வேலைத்திட்டத்துக்கு பொறுப்பான நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் எஸ். சர்வராசா தகவல் தெரிவிக்கையில்.

அச்சுவேலி தெற்கு. வடக்கு பகுதி தாழ்நிலக்குடியிருப்புகளில் மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றன. இந்த மக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை எதிர்காலத்தில் போக்க வேண்டும்.

குடாக்கடல் நீரேரி தடுப்பணைக்கும் இந்த வெள்ள நிலமைக்கும் தொடர்பே இல்லை தொண்டமானாறு தடுப்பு அணையால் தான் வெள்ளம் தேங்கி நிற்கின்றது என விசமப்பிரசாரம் செய்யப்படுகிறது.

வெள்ளம் தேங்கி நிற்பதற்கும் தடுப்பு அணைக்கும் தொடர்பு இல்லை. இந்த வருடம் குறித்த தினங்களில் மட்டும் மழைபெய்யாமல் தொடர்ச்சியாக மழை பெய்தமையால் நிலக்கீழ்நீர் மட்டம் முன் கூட்டியே நிரம்பியுள்ளது. அதுவே வெள்ளம் தேங்கி நிற்பதற்குரிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தாழ்நிலக் குடியிருப்புகள் மண்போட்டு உயர்த்தப்படவேண்டும் அதற்கான மண்ணை குடாக்கடல் நீரேரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொண்டுவருகிறது எனத் தெரிவித்தார்.

வலி. கிழக்கு பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தகவல் தெரிவிக்கையில் 'மேற்படி வெள்ள நிலமைகள் தொடர்பாகவும் மேற்படி குடியிருப்புப் பகுதியை மண் போட்டு நிரப்புவது தொடர்பாகவும் உரிய நிபுணத்துவ ஆலோசனை பெறப்படுவதோடு இந்த வருடம் அதனை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

குறித்த தாழ்நிலக் குடியிருப்பாளர்கள் எதிர்காலத்தில் வெள்ளத்தினால் பாதிப்புக்கு உள்ளாகாமல் இருப்பதற்கு குடியிருப்பு பகுதியை மண்நிரப்பி உயர்த்துவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது' எனத் தெரிவித்தார். (ஐ-11)

## நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்குள்

# மாட்டிறைச்சி விற்பனைத் தடை மூன்று மாதங்களாவது நீடிக்கும்

## சபைத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் மாட்டிறைச்சி விற்பனைக்கான தடை ஆகக் குறைந்தது 3 மாதங்கள்வரையாவது நீடிக்கும் என்று தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் அமர்வு சபா மண்டபத்தில் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது; நல்லூர்பிரதேசசபைஎல்லைக்குள் மாட்டிறைச்சியை விற்பனை செய்ய விதிக்கப்பட்ட தடையை நீக்குவதா அல்லது தொடர்ந்தும்நடைமுறைப்படுத்துவதா என்பதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது.

எமது பிரதேச சபையின் எல்லைக்குள் மாட்டிறைச்சியை விற்பனை செய்வதை தடை செய்யுமாறு உறுப்பினர்மதுசுதனால்கொண்டுவரப்பட்டுதீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந் நிலையில் எமது சபையின் எல்லைக்குள் வாழும் பல மக்கள் எமக்கு மாட்டிறைச்சி தடையைநீக்கிமறுபரிசீலனை செய்யுமாறு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்த அடிப்படையில் நாம் எவ்வாறானநடவடிக்கையைஎடுக்கலாம் என உள்ளுராட்சி திணைக்களத்திடம் ஆலோசனையைக் கேட்டிருந்தோம்.

அதற்கு அவர்கள் மாட்டிறைச்சி வறிய மக்களின் போசக்குணவாக காணப்படுகின்றது. இது இலங்கையில் தடை செய்யப்படாத உணவாகவும் காணப்படுகின்றது. மேலும்வடக்குமாகாண சபையினால்அங்கீகரிக்கப்பட்டு 1952/16ஆம்இலக்க2016ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி அரசிதழில் பிரசுரிக்கப்பட்ட நியமவிதிகளைஎமதுதிணைக்களம் ஏற்றுக்கொண்டுள்ளது.

சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவிடயத்தினைதங்கள்சபையின்தீர்மானத்தினால்மறுப்பது பொருத்தமானதுஅல்ல. மேலும் மாட்டிறைச்சிக்கடைகளைநடத்தாது விடுவதனால் ஏற்படும் வருமான இழப்பீட்டுக்கு சபையேமுழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றுபதில் அனுப்பியுள்ளனர்.

இந்நிலையில் இந்து அமைப்புகள் சில மாட்டிறைச்சிக்கு தொடர்ந்தும் தடை இருக்க வேண்டும்என்றுவலியுறுத்திக் கடிதம் அனுப்பி உள்ளன.

இரண்டு தரப்புகளும் தங்கள் கருத்துக்களை கூறியுள்ளதால் நாம் இதில் கவனமாக தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டும். அதற்கு சில காலம் தேவைப்படுவதால் நாம் இது தொடர்பில் முழுமையாக ஆராய்ந்துமூன்றுமாதத்துக்குள் ஓர்முடிவினை அறிவிப்போம்.- என்றார். (ஜ-8)

# தொலைத்தொடர்பு கோபுரங்களின் உரிமக் கட்டணம் அதிகரிப்பு

## சபையில் தீர்மானம் நிறைவேறியது

யாழ்ப்பாணம், ஜன.12

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வருடாந்த உரிமக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு சபையில்தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச சபையின் அமர்வு சபா மண்டபத்தில்நேற்று இடம்பெற்றது.

இதன்போதுசபைத்தவிசாளர், எமதுசபையின் எல்லைக்குள்12 தொலைத்தொடர்புகோபுரங்கள் அமைந்துள்ளன. அவற்றுக்கான வருடாந்த உரிமக் கட்டணமாக நாம் இதுவரை காலமும் 10 ஆயிரம் ரூபாய் பணத்தினை அறவிட்டு வந்தோம். அதனை நடப்பாண்டில் இருந்து அதிகரிப்பது என நிதிக் குழு ஊடக தீர்மானித்துள்ளோம். அதன் படி வருடாந்தம் 15 ஆயிரம் ரூபா அறவிடுவது என தீர்மானித்துள்ளோம். இதற்காக சபையின் அங்கீகாரத்தைக் கோருவதாகத் தெரிவித்தார்.

இதற்கு அனைத்து உறுப்பினர்களும்ஆதரவு தெரிவிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஜ-8)

# கட்சிக்கு பணம் வழங்குவது சபையில் சர்ச்சையாகியது

யாழ்ப்பாணம், ஜன. 12

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்களின் மாத ஊதியத்தில் இருந்து ஆயிரம் ரூபா கட்சிக்கு சபையின் ஊடாக நேரடியாக வழங்கப்படுவது தொடர்பில் சபையில் சர்ச்சைஏற்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் அமர்வு சபா மண்டபத்தில் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில்நேற்றுஇடம்பெற்றது. இந்த அமர்வில் சபையின் வரவு செலவீன விபரங்கள்சபையில்சமர்ப்பிக்கப்பட்டது. அதில் சபையின்ஐக்கியதேசியகட்சிஉறுப்பினர் ஒருவரின் மாத ஊதியத்தில் இருந்து கட்சியின் பொருளாளருக்கு ஆயிரம் ரூபாய் அனுப்பப்படுவதாக அறிகையிடப்பட்டிருந்தது.

இதனை அவதானித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் மயூரன் கணக்கறிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின்பொருளாளருக்குஆயிரம்ரூபாய்என கூறப்பட்டுள்ளது அதன் விளக்கத்தை தருமாறு சபையில் கோரினார்.

அதற்கு பதில் அளித்த உறுப்பினர் குகனந்தன். எமது கட்சியின் உள்ளுராட்சி சபை உறுப்பினர்கள்ஒவ்வொருவரிடமிருந்தும் மாதாந்தம்ஆயிரம்ரூபாகட்சிக்குசெலுத்த வேண்டும் என்று எமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய கட்சியின் பொருளாளரால் சபைக்கு எமது அனுமதியுடன் நேரடியாக கடிதம் அனுப்பப்படுள்ளது. அதன் அடிப்படையில் எனது மாதாந்த ஊதியத்தில் இருந்து ஆயிரம் ரூபாய் செல்கின்றது என்று விளக்கமளித்தார்.

அப்போது கருத்து தெரிவித்த சபையின் தவிசாளர் உள்ளுராட்சி சபை உறுப்பினர்கள்ஊதியத்தில்இருந்துகட்சிக்குகட்டணம் செலுத்துவது வழமையான ஒன்று. அவர்கள்கட்சிக்குநேரடியாகபணத்தைச்செலுத்தியிருந்தால் அவர்கள் எமக்கு நேரடியாக கோரிக்கைவிட்டிருக்கமாட்டார்கள். அத்துடன் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களிடம் இருந்தும் இவ்வாறு கட்டணம் அறவிடப்படவுள்ளது. ஆகவேஇதுசாதாரணவிடயமே - என்றார். (ஜ-8)

## நல்லூர் பிரதேசசபையின்

# வட்டார வீட்டுத்திட்ட முன்மொழிவு ஆளுநரின்அனுமதிக்குஅனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம் ஜன 12

நல்லூர் பிரதேச சபையின் ஊடாக வட்டார ரீதியாக நடைமுறைப்படுத்தவுள்ள வீட்டுத்திட்ட முன்மொழிவு வடக்கு மாகாண ஆளுநரின்அனுமதிக்காகஅனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் அமர்வு சபா மண்டபத்தில் தவிசாளர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வின்ஆரம்பத்தில்அறிவித்தல்களை அறிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்தாவது.

"நல்லூர்பிரதேசசபையின் நிதியில் வட்டாரத்துக்கு ஒரு வீடு என்ற அடிப்படையில் வீட்டுத்திட்டம் வழங்குவது என கடந்த வருடம் தீர்மானிக்கப் பட்டது. அவ்வாறு வழங்கப்படும்வீடுஒன்று 8 இலட்சம்ரூபாய்பெறுமதியானது. அதன் படி 12 வட்டாரத்துக்கும் 96 இலட்சம்ரூபாய் ஒதுக்கீடுசெய்யப்பட்டது.

அதன் படி உறுப்பினர்களிடம்இருந்துவறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பயனாளிகளின்பெயர்விபரங்கள்சேகரிக்கப்பட்டன.

அவ்வாறுபெறப்பட்டபெயர் விபரங்கள் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கபட்டு பயனாளிகளின் முழுமையான விபரங்கள் ஆராயப்பட்டன. வழமையான வீட்டுத்திட் டங்களுக்கு வழங்கப்படும் புள்ளிகள் வழங்கப்பட்டுபயனாளிகள் தெரிவுகள் இடம்பெற்றன.

இவ்வாறு இறுதி செய்யப்பட்ட பயனாளிகளின் விபரங்கள் எமது திட்டங்கள் தொடர்பில்விரிவாகஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண ஆளுநரின்ஒப்புதல்கிடைத்ததும்வீட்டுத்திட்டம்உடனடியாக நடைமுறைப் படுத்தப்படும்" - என்றார். (ஜ-8)

## எல்லை வரம்பு தயாரிப்பின்போது

# பிரதேச சபையின் வரைபடத்தில் மாற்றங்கள் செய்யக் கூடாது

## சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

உள்ளுராட்சி சபைகளுக்கான எல்லை வரம்பின் போதுநல்லூர்பிரதேசசபையின்வரைபடத்தில்எவ்வித மாற்றங்களும் செய்யக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் அமர்வு சபா மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதேகுறித்ததீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

உள்ளுராட்சி சபையின் எல்லைவரம்பின்போதுபல கிராமங்கள்எமதுசபையை விட்டு பிரிக்கப்பட வுள்ளது. அத்துடன் நல்லூர் பிரதேச சபையின்எல்லையில்உள்ள பெரும்பாலான பகுதிகள் பிரித்தெடுக்கப்படுவது டன் ஒருசிலசிறியபகுதிகளேஎமக்குப் புதிதாக ஒதுக்கப்படவுள்ளன. இதனால் நாம் பலவற்றை இழப்பதுடன்எமது பாரம்பரியகிராமங்கள்சிதைவடைகின்றன. எனவே நாம் இதற்கு அனுமதிக்க கூடாது என்றுஉறுப்பினர்கள்சபையில்கோரிக்கைகளைமுன்வைத்தனர். இதுதொடர்பில் சபை உறுப்பினர் குகானந்தன் தெரிவிக்கையில்:

ஒருசிலரின்திட்டமிட்டசெயலினாலேயேஎல்லைவரம்பின் போது பல கிராமங்கள் கைவிட்டு செல்லும் நிலையில்உள்ளது. புதியஎல்லை வரம்பின் படி பிரதேசங்கள் பிரிக்கப்பட்டால்நல்லூர்பிரதேசசபைக்குமீண்டும்தேர்தல் நடத்த வேண்டிய சூழ்நிலை கூட உருவாகலாம். ஏனெனில் சபையின் எல்லைக்குட்பட்டஜே/115கிராம அலுவலகர் பிரிவில் சபையின் மூன்று உறுப்பினர்கள்அங்கம்வகிக்கின்றனர். அதில் தவிசாளர் கூட அங்கம் வகிக்கின்றார். புதிய எல்லை வரம்பின் படி கிராமங்கள் சுன்னாகம் வலி. தெற்குப்பிரதேசசபையுடன் இணைக்கப்பட்டால்மூன்று உறுப்பினர்களின் பதவிகளும் வெற்றிடமாகும். அப்படியானால்மீண்டும்தேர்தல் நடத்த வேண்டி வரும். அது மட்டுமல்லாது 12 வட்டாரத்துக்கும்27ஆயிரம்வரையிலானவாக்காளர்கள்உள்ளனர். அவர்களைநாம்இழக்க வேண்டி உள்ளது. எனவே நாம் இதனை எதிர்க்க வேண்டும். - என்றார்.

சபை உறுப்பினர் மரியதாஸ்தெரிவிக்கையில்:

நல்லூர் தொகுதிக்கு என ஒருநாடாளுமன்றஉறுப்பினர்இல்லை. எமக்குஅபிவிருத்தி செய்ய வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர் வட்டுக்கோட்டைக்கும், தென்மராட்சிக்கும் அபிவிருத்திகளை செய்து வருகின்றார். நாம் அபிவிருத்திகள் எதுவும் இல்லாது உள்ளோம். இதற்கு எமது மக்களே காரணம் - என்றார்.

இதன்பின்னர் கருத்து தெரிவித்த உறுப்பினர் மயூரன், எமதுபிரதேசசபையின்எல்லைகள்மாறக்கூடாது. நாம் எமது பிரதேசத்தை விட்டுக் கொடுக்கமுடியாது. எனவே எல்லை வரம்பின் போது எமது பிரதேசங்களில் எந்த மாற்றமும் ஏற்படக் கூடாது இப்போதுஉள்ளவரைபடமே இருக்கவேண்டும். -என்றார்.

இதனை ஓர் தீர்மானமாக நிறைவேற்றுவோம் என தவிசாளர் கோரினார். அதன் படி சபையின் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஜ-8)

## உணவு உற்பத்தி வேலைத் திட்டங்கள் விவசாயிகளிடமிருந்து கோரப்படுகின்றன

தெல்லிப்பழை.ஜன.12

தெல்லிப்பழைபிரதேசசெயலர்பிரிவில்விவசாயஅமைச்சினால்இவ்வருடம்மேற்கொள்ளவுள்ள உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தும் வேலைத் திட்டங்களை விவசாயிகளிட மிருந்து பிரதேச செயலகத்தினர் கோரியுள்ளனர்.

செயற்றிட்டங்கள் தொடர்பான முழுமையான விபரங்களை தமது பிரிவு கமக்கார அமைப்பின்ஊடாகஉடனடியாகஒப்படைக்குமாறு பிரதேச செயலர் ச.சிவசிறி கேட்டுள்ளார். (ஐ-9)

## இருபத்தைந்து வருடங்களின் பின் மயிலிட்டி ஆலயத்தில் பொங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.12

வலி.வடக்கு ஆதி மயிலிட்டி காசி புதராய் ஆலயத்தில் 25 வருடங்களின் பின்னர் இந்தமுறை தைப்பொங்கல் இடம்பெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை அந்த ஆலய நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மயிலிட்டி பகுதியில் கடந்த 25 வருடகாலமாக இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுக்கப்பட்டது. ஆதி மயிலிட்டி காசி புதராய் ஆலய பாலஸ்தானம் கடந்த வருட நடுப்பகுதியில் நடைபெற்றது. தொடர்ந்து நித்திய பூசைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் தைப்பொங்கல் தினமான எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆலயத்தில் பொங்கல் நிகழ்வு பிற்பகல் 4 மணியளவில் சிறப்பாக நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பொங்கல் செய்ய விரும்பும் அடியார்கள் நேரத்துடன் தத்தமது வீடுகளில் பொங்கலை நிறைவுசெய்து ஆலயத்துக்கு வந்து தைப்பொங்கல் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாக சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

போர் காரணமாகப் பல தசாப்தங்களாக மயிலிட்டிப் பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்த இடங்களுக்கு ஆரம்பத்தில் மக்கள் சென்றுவர அனுமதிக்கப்படவில்லை. பல போராட்டங்களின் பின்னர் அந்த இடம் விடுவிக்கப்பட்டது. தற்போது மயிலிட்டி துறைமுகம் உள்ளிட்ட இடங்களில் மக்கள் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்த இடங்களில் மக்கள் தற்காலிக குடியிருப்புக்களை அமைத்துத் தங்கி யுள்ளனர். அங்கு இன்னும் பல பகுதிகள் விடுவிக்கப்படாமலேயே உள்ளன. (ஐ)



## விளையாட்டுப் போட்டி

இளவாலை.ஜன.12

இளவாலை புனித யூதா ததேயு ஆலய இளையோர் ஒன்றியத்தினரால் இளவாலை பங்குத்தந்தை யேசுரட்ணம் அடிகளாரின் நெறிப்படுத்தலில் வருடாந்த் விளையாட்டுப் போட்டி ஆலய முன்றலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அன்ரன் ஸ்ரிபன் அடிகளார், சிறப்பு விருந்தினராக பல் மருத்துவர் ஆன். லாவன்யா செபஸ்ரியன் நிமால் அகியோர் கலந்துகொண்டனர். (ஐ-222)

## திருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதல்

கொடிகாமம். ஜன 12

யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று காலை 7 மணி தொடக்கம் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும்.

நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் தமிழ்ச்சங்க உபதலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் சிறப்புரை ஆற்றுவார்.

திருவாசக முற்றோதலுக்கான அனுசரணையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவரும் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினருமாகிய கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் வழங்கவுள்ளார்.

நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ்ச்சங்கத்தினர் அழைப்புவிடுத்துள்ளனர். (ஐ-159)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் சனசமுக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் அபிவிருத்தி அலுவலகர் ரி. இளமுருகன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது தலைவர் மு.ஜெகதேவன், உபதலைவர் பா. இரகுநாதன், செயலர் திருமதி நாகேஸ்வரன், உபசெயலர் செல்வி கா. பவானி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை உறுப்பினர்களாக சி. தில்லைநாதன், செல்வன் பா. கோபிநாத், திருமதி ஜெ.ஜெயலட்சுமி, திருமதி ஜெ. யோகம்மா, திருமதி ப. சத்தியகுமாரி திருமதி த.குகனேந்திராணி ஆகியோருடன் கணக்காய்வா ளர் திருமதி பா. யசோதா தெரிவுசெய்யப்பட்டார். (ஐ-173)


## கொடியேற்றம்

யாழ்ப்பாணம்.ஜன.12

யாழ்ப்பாணம் வண்.வடகிழக்கு இறைமூத்த நைனார் கொண்டலடி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா இடம் பெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)



*யாழ்ப்பாணம் சித்தங்கேணி பாஃக் ஜோன்கோ முன்பள்ளியில் புதிய ஆண்டுக்கான சிறார்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வு முன்பள்ளியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது என்று தரைப்படை ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.*

*நிகழ்வில் பௌத்த மகாபோதி சங்கத்தின் தலைவர் பாணகல உபதிஸ்ஸ மகாதேரர், யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன கெட்டியாராச்சி ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)*

## அமுதவிழாவும் 'பஞ்சநதி' மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம். ஜன.12

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர், ஆசிரியர், முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கத்தின் அமுதவிழாவும் 'பஞ்சநதி' மலர் வெளியீடும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறும். வாழ்த்துரைகளை யாழ்ப்பாணம் சின்மயாமிசன் சுவாமி சிதாஹசானந்தா, வடக்கு மாகாண இலங்கை தேசிய கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர் அருட்தந்தை சொலமன் டிக்ஷன் ,சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பேராசிரியர் க.தேவராஜா, உதயன் நிர்வாகியும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், வடக்கு மாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, ஆறுதல் நிறுவன நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா, கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் முன்னாள் உபஅதிபர் க.ஜெகநாதன், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி முகாமையாளர் அ.சத்தியமூர்த்தி ஆகியோர் வழங்குவர். "பஞ்சநதி" நூலின் வெளியீட்டு உரையினை கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவனும் வவுனியா மாவட்ட சமுக சேவை கள் அலுவலர் செ.ஸ்ரீநிவா சன் நிகழ்த்துவார். (ஐ)

## நெற்பயிர்கள் அழிவடையும் நிலையில்

சாவகச்சேரி, ஜன. 12

பயிரிடப்பட்ட நெற்பயிர்களில் எரிபந்தம், கழுத்துக்குத்தி போன்ற நோய்கள் ஏற்பட்டதால் பயிர்கள் பல அழிவடையும் நிலையில் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தென்மராட்சி தெற்குப் பகுதியில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களிலேயே இவ்வாறான நோய்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நோய்களைக் கட்டுப்படுத்த விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட நாசினிகள் பயன்படுத்தியபோதிலும் பயன் தரவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இன்னும் இரு வாரங்களில் அறுவடைக்கு நெற்பயிர்கள் தயாரான நிலையில் திடீரென பல வயல்களில் இந்த நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் பெருமளவான இழப்பு ஏற்படலாமெனவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ-9)

## தொழில்நுட்பக் கண்காட்சி

வடமராட்சி, ஜன.12

யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய கல்லூரியின் தொழில்நுட்பக் கண்காட்சி கல்லூரியின் தொழில்நுட்பீட வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பொறியியலாளர் எஸ்.விக்னேஸ்வரன் கலந்துகொண்டார்.

வளர்ந்து வரும் தொழில்நுட்பம் மற்றும் அதிலுள்ள வாய்ப்புகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்வில், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்திய நிலையம் மற்றும் ஏனைய தொழில்நுட்பம் சார் சேவைகளை வழங்கும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் வளவாளர்களாக கலந்துகொண்டு தொழில்நுட்பத் துறையில் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் விளக்கமளித்தனர். (ஐ-422)



# திரையரங்கில் அடிதடி இளைஞர்கள் காயம்

வவுனியா, ஜன.12
வவுனியா - கண்டி வீதியில் அமைந்துள்ள வசந்தி சினிமா திரையரங்கில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற அடிதடியில் ஒருவர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.
குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், தென்னிந்திய திரைப்பட நடிகரான ரஜினிகாந்த் நடிப்பில் வெளிவந்துள்ள 'பேட்ட' திரைப்படத்தைக் காண்பதற்காக நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் வவுனியா வசந்திதிரையரங்குக்கு முன்பாக ஒன்று கூடியிருந்தனர்.
திரைப்படத்தைக் காண்பதற்கான நுழைவுச்சீட்டை கொள்வனவு செய்வதற்காக வரிசையில் நின்ற இளைஞர்களுக்கிடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அது வாக்குவாதமாக உருவெடுத்து அடிதடியாக மாறியது.
குறித்த சம்பவத்தில் சினிமாப் பாணியில் மதுப் போத்தல்கள், தலைக் கவசங்களால் குழுக்களாகப் பிரிந்து இளைஞர்கள் அடிதடியில் இறங்கினர்.
இதனால் கண்டி வீதியின் போக்குவரத்து சிறிது நேரம் பாதிப்படைந்திருந்தது.
சம்பவத்தில் பலர் காயமடைந்தபோதும் ஒருவரே மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-110)



## மன்னார்மாவட்டச்செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு

மன்னார், ஜன. 12
மன்னார் மாவட்டச் செயலகத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வுகடந்த 8ஆம்திகதிமாலை, மாவட்டச்செயலகதிறந்த வெளி அரங்கில் நடைபெற்றது.
மன்னார்மாவட்டச்செயலக ஊழியர்நலன்புரிச்சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கு மாவட்டச்செயலர்சி.ஏ.மோகன்றாஸ்தலைமைதாங்கினார். இதில் மாவட்டச் செயலக அலுவலர்கள் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், பிரதேச செயலகங்களின் பதவி நிலை அலுவலர்கள் மாவட்டத்தில் உள்ள சகல திணைக்களங்களின் தலைவர்கள், இராணுவ பொலிஸ் உயர் அதிகாரிகள், வங்கிகளின் முகாமையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
தேர்தல்கள் ஆணைக்குழுவினால்கடந்தவருடம்மன்னார் மற்றும்மடுக்கல்விவலயமாணவர்களிடையேநடத்தப்பட்ட ஓவியப் போட்டிகளில் ,வலயமட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெற்றமாணவர்களுக்குசான்றிதழ்கள்மற்றும்பெறுமதியானபணப்பரிசுகளும்வழங்கப்பட்டன.
அத்துடன், அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் .துறை ரீதியாக மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களைச் சேர்ந்த 21 மாணவ மாணவிகள்பதக்கம்அணிவிக்கப்பட்டுபரிசில்வழங்கிமாவட்டச்செயலர் உள்ளிட்ட அலுவலர்களினால்மதிப்பளிக்கப்பட்டனர். இதன்போது அலுவலர்களினால்பாடல்கள்நடனங்கள் கலைநிகழ்வுகளும்நடத்தப்பட்டன.
மன்னார் மாவட்டச் செயலகத்தின் முதல் தடவையாக அனைத்துஊழியர்களையும்இணைத்துஇந்தஒன்றுகூடல் நிகழ்வுநடத்தப்பட்டது. (க-213)



## நல்லின பழமரக்கன்றுகள் வழங்கல்

கிளிநொச்சி.ஜன.12
கிளிநொச்சி ,பெரியபரந்தன் கமக்கார அமைப்பினரின் ஒழுங்கமைப்பினூடாக கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தினால் பெரிய பரந்தன் கிராம மக்களுக்கு நல்லினப் பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.
நேற்று முன்தினம் காலை பெரியபரந்தன் கிராம மக்களுக்கான நல்லின பழமரக்கன்றுகள் வழங்கும்நிகழ்வில், பெரியபரந்தன்கமக்கார அமைப்பின் தலைவர் சு.யதீஸ்வரன் மற்றும் செயலர், அந்தப் பகுதி கிராம அலுவலர், கமக்கார அமைப்பின்உறுப்பினர்கள்ஆகியோர் கலந்துகொண்டு மக்களுக்கு வழங்கி வைத்தனர். (க-426)

## விறகு ஏற்றும் வாகனத்தில் வவுனியாவில் பாண் விற்பனை

வவுனியா.ஜன.12
வவுனியாவில் பிரபல்யமான வெதுப்பகம் ஒன்றின் வெதுப்பக உற்பத்திப் பொருள்களை விறகு ஏற்றப்பயன்படுத்தப்படும் பட்டா வாகனத்தில் உரிய முறையில் துப்புரவு செய்யாது கொண்டு சென்ற இருவருக்கு நீதி மன்றால் தண்டம்விதிக்கப்பட்டுள்ளது.
இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:
கடந்த ஒக்ரோபர் மாதம் ஓமந்தை பொதுச்சுகாதாரப்பரிசோதகர்க.சிவரஞ்சனின் வழமையான பரிசோதனை நடவடிக்கையின் போது தரணிக்குளம் பகுதி வியாபார நிலையங்களுக்கு வெதுப்பக உணவுப்பொருள்கள் விநியோகம் செய்யும் பட்டா வாகனத்தைப் பரிசோதனை செய்திருந்தார்.
குறித்த வாகனம் விறகு ஏற்றப்பயன்படுத்தப்பட்ட நிலையில் சுத்தம் செய்யாது மண், தூசுகளுடன் பூச்சிகளும் காணப்பட்ட நிலையில்,காலாவதி திகதி முடிவடைய முன்னரே பூஞ்சணம் பிடித்த நிலையில் பாண் என்பனவும் காணப்பட்டிருந்தன.
அத்துடன் மருத்துவ தகுதி சான்றிதழ் இன்றி வாகனத்தைச் செலுத்திய நபரே வெற்றுக்கைகளால் உணவுப்பொருள்களை விற்பனைசெய்திருந்தார்.
இந்த விடயங்கள் தொடர்பில் குறித்தநபருக்குஎதிராகவும்உரிய அனுமதிபத்திரம் இன்றி உணவுப்பொருள்களை விற்பனை செய்த வெதுப்பக உற்பத்தியாளருக்கு எதிராகவும் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது.
இந்த வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப் பட்டது.
எதிராளிகள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதற்கிணங்க 1ஆம் எதிரி மீதானஆறுகுற்றச்சாட்டுகளுக்கும் தலா4ஆயிரம்ரூபாவீதம்24ஆயிரம்ரூபாவும்2ஆம்எதிரிக்கு6ஆயிரம்ரூபாயுமாகமொத்தம்30ஆயிரம்ரூபாஅபராதம்விதிக்கப்பட்டது.
கைப்பற்றப்பட்ட பொருள்களை அழிப்பதற்கு உத்தரவிடப்பட்டது.
மேலும் காலாவதி திகதி முடிவடைந்த 10 குளிர்பான போத்தல்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த வர்த்தகர் ஒருவருக்கு எதிராக 5ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (க-110)



## கற்றல் கருவிகள் வழங்கல்

முல்லைத்தீவு.ஜன.12
வல்வை உதயசூரியன் கழகத்தினரால், பாடசாலைமாணவர்களுக்குக்கற்றல்கருவிகள்வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, உதயசூரியன்கழகத்தினரால், முல்லைத்தீவுமாவட்டத்தின்சிலபாடசாலைமாணவர்களுக்குக் கற்றல் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.
வல்வைஉதயசூரியன்கழகக்கனடாக்கிளையின்நிதியுதவியில், வல்வை விக்கினேஸ்வரா சனசமூகசேவா நிலையம், யாழ்ப்பாணம் வல்வை உதயசூரியன் கழகம் ஆகியன இணைந்து இந்தக் கற்றல் கருவிகளைப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கியுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமங்களிலுள்ள தேறாங்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, ஐயங்கன்குளம் அரசினர்தமிழ்க்கலவன் மற்றும் புத்துவெட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் , பழையமுறிகண்டி பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கே கற்றல் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.
9 ஆம் திகதி இடம் பெற்ற இந்த நிகழ்வுகள், அந்தந்தப் பாடசாலைகளின் முதன்மை மண்டபங்களிலேயே இடம்பெற்றன.
அத்துடன் தேறாங்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தெரிவுசெய்யப்பட்ட 80 மாணவர்களுக்கும், ஐயங்கன்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தெரிவுசெய்யப்பட்ட 90 மாணவர்களுக்கும் புத்துவெட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலுள்ள 20 மாணவர்களுக்கும், பழையமுறிகண்டி பாடசாலையிலுள்ள 10 மாணவர்களுக்குமாக மொத்தம் நான்கு பாடசாலைகளைச்சேர்ந்த 200 மாணவர்களுக்கு இவ்வாறு கற்றல்கருவிகள்வழங்கிவைக்கப்பட்டுள்ளன. இந்தநிகழ்வுகளில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து. ரவிகரன், வல்வை உதயசூரியன் கழகக் கனடாக் கிளையின் உறுப்பினர் மு.ஜெயதரன், யாழ்ப்பாணம் வல்வை உதயசூரியன் கழகத்தின் உறுப்பினர்களான விமலதாஸ் கவிச்செல்வன், செ.ஜெனார்த்தன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைமாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (க-246)



## பேசாலையில் குருதித் தானம்

மன்னார், ஜன.12
மன்னார்பேசாலையில்பலசமூகப்பணியில்ஈடுபட்டுவரும்பேசாலை சென்.பத்திமாவித்தியாலயபழையமாணவர்களானகோல்டன்ஸ்டார் மற்றும் பேரொளி கழகத்தினர் ஒன்றிணைந்து குருதிக்கொடை நிகழ்வைஏற்பாடுசெய்திருந்தனர்.
கடந்த 9 ஆம் திகதி நடந்த முகாமில் மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்மருத்துவக்கலாநிதிஎஸ்.வெற்றிநேசன்ராஜன், பேசாலை பிரதேச மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவக் கலாநிதி இம்மானுவேல் ஈற்றன் பீரீஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (க-60)

## நோயாளருக்கு உதவி வழங்கல்

பாலிநகர் பாண்டியன் உறவுகள் அமைப்பினரால் மல்லாவி பாலிநகர் கிராமத்தில் சிறுநீரகம், வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் 6 பேருக்கு அவர்களின் மருத்துவச் செல்வுக்காகப் பண உதவி வழங்கப்பட்டுள்ளது. ஐந்து நோயாளிகளுக்கு 5 ஆயிரம் ரூபாவும் ஒரு நோயாளிக்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. இவர்களுக்கான உதவியைப் பிரான்ஸில் இருந்து வருகை தந்த பாலிநகர் பாண்டியன் உறவுகளின் நிறுவுநர் நேரடியாக வழங்கிவைத்தார். (க-222)



# கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் பல மில்லியனில் அமைக்கப்பட்ட பூங்கா

கிளிநொச்சி, ஜன.12

**வடக்குமாகாண சபையால் 3.2 மில்லியன் நிதியில் அமைக்கப்பட்ட மருதநகர் இயற்கைப் பூங்கா, கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.**



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட மருதநகர் பகுதியில் வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலம் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட இந்த இயற்கை பூங்கா, கட்டி முடிக்கப்பட்ட அன்றே கைவிடப்பட்டுள்ளது.
இந்தக் கட்டட கட்டுமானப் பணிகள் 30 ஆம் திகதி ஒகஸ்ட் மாதம் 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
தற்போது மதுப் பிரியர்களின் இடமாக மாறியுள்ளது. பற்றைகளால் மூடப்பட்டு, பறவைகள் எச்சங்கள் போடப்பட்ட நிலையிலும் யாரும் கவனத்தில் கொள்ளவில்லை.
இந்தப் பூங்கா சரியான இடத்தெரிவு செய்யப்பட்டா அமைக்கப்பட்டது என சமூக ஆர்வலர்கள் சிலர் தற்போது கேள்வி எழுப்பியுள்ளனர்.
இது தொடர்பாகக் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளரிடம் கேட்டபோது, தற்போது கட்டடம் தொடர்பாக ஒப்பந்தம் வழங்கப்பட்டமை, அவை முடிவுறுத்தப்பட்டமை தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன.
மாவட்ட செயலர் குறித்த பூங்காவைக் கிளிநொச்சியில் முதன்மையான பூங்காவாக மாற்றும் பொருட்டு திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளார். அவற்றுக்கான நிதி கிடைத்ததும் கட்டடங்களையும் உள்வாங்கி பூங்கா ஒன்று அமைக்கப்படும் எனத் தெரிவித்தார். (க-6)




விசுவமடுவில்

## படையினரால் வீடு கையளிப்பு

முல்லைத்தீவு, ஜன.12
விசுவமடு, மாணிக்கபுரம் பகுதியில் வசித்துவந்த வயோதிப தாயார் ஒருவருக்கும் அவரது பாரமரிப்பில் தாய் தந்தையை இழந்து வாழ்ந்து வந்த சிறுமி ஒருவருக்குமாக 5.5 இலட்சம் ரூபா செலவில் படையினரால் வீடு ஒன்று அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.
புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில், வீட்டுத்திட்டம் எதுவும் கிடைக்காத நிலையில், தற்காலிக குடிலில் வாழ்ந்து வந்த இருவர் கடந்த மழைவெள்ளத்தில் தற்காலிக குடில்களும் முற்றாக பாதிக்கப்பட்ட நிலையில், கிராம அபிவிருத்திச் சங்கம் 57 ஆவது படைப்பிரிவினருடன் தொடர்பு கொண்டு கேட்டதற்கு இணங்க 5.5 இலட்சம் பெறுமதியான வீட்டை 57 ஆவதின் 2ஆவது படைப்பிரிவின் 6 ஆவது சிங்க றெஜிமன்ட் பிரிவினர் கட்டிக் கொடுத்துள்ளனர்.
இந்த வீடு அமைப்பதற்கான நிதி உதவியை தெற்கைச் சேர்ந்த 'சித்தார்த்த பதனம்' என்ற பௌத்த சங்கம் வழங்கியுள்ளது.
இந்த நிகழ்வில் கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர், செயலர், மற்றும் 57 இன் 2 ஆவது படைப்பிரிவின் தளபதி கேணல் பிரியந்த தசநாயக ஆகியோர் கலந்து கொண்டு இவர்களுக்கான வீட்டைக் கையளித்தனர். (க-ரி3)

## நகரசபை உறுப்பினரால் குப்பைகள் கொட்டும் தொட்டிகள் வழங்கல்

வவுனியா, ஜன.12
வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்துக்கு குப்பைகளைத் தரம் பிரித்து போடுவதற்கான 5 தொட்டிகள் நகரசபை உறுப்பினர் பாலசிங்கம் பிரசன்னாவால் நேற்றைய தினம் வழங்கிவைக்கப்பட்டன. குப்பைகள் தரம் பிரித்தல் தொடர்பாக தரம் 6 ஆம் வகுப்பு மாணவர்களின் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக அம்மாணவர்களை நெறிப்படுத்தும் நோக்கில் நகரசபை உறுப்பினரும், பாடசாலையின் பழைய மாணவனுமான பாலசிங்கம் பிரசன்னாவால் குறித்த குப்பைத் தொட்டிகள் கையளிக்கப்பட்டுள்ளன. (க-110)







## சக பணியாளரின் சேதமடைந்த வீட்டை சீரமைத்து வழங்கிய 'சார்ப்' பணியாளர்கள்

கிளிநொச்சி, ஜன. 12
மனிதநேயக்கண்ணிவெடிஅகற்றும் 'சார்ப்' நிறுவனத்தினர், அண்மையில் ஏற்பட்டவெள்ளப்பெருக்கால்பாதிக்கப்பட்ட சக பணியாளரின் வீட்டை தாம் ஒன்றிணைந்து சீரமைத்து வழங்கியுள்ளனர்.
கிளிநொச்சிதர்மபுரம் பகுதியில் அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 'சார்ப்' நிறுவனத்தின் மிதி வெடி அகற்றுநராக பணிபுரியும் ஒருவரின் வீடு சார்ப் நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றுநர்கள் மற்றும் உயர்நிலை அதிகாரிகள்ஒன்றிணைந்து சீரமைத்து கொடுத்துள்ளனர்.
இந்த சீரமைப்புப்பணியின்போது, நிறுவனத்தின்திட்டமுகாமையாளர், களத் திட்ட முகாமையாளர், உயர்நிலை அதிகாரிகள், கண்ணிவெடி அகற்றும் பணியாளர்எனப்பலர்கலந்துகொண்டனர்.
அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதுடன், பல வீடுகள் வாழ்வாதாரங்கள்எனப்பலசொத்தழிவுகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## டெங்குத் தாக்கத்தால் கடந்தவருடம் 596 பேர் பாதிப்பு இருவர் சாவு

வவுனியா, ஜன.12
வவுனியா மாவட்டத்தில் கடந்தவருடம் 596 டெங்குநோயாளர்கள் இனங்காணப் பட்டுள்ளதாக வவுனியா பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் மருத்துவ அதிகாரி யூட்பீரிஸ் தெரிவித்தார்.
வவுனியாவில் கடந்தவருடம் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக கேட்டபோதே மேற்படி தெரிவித்தார்.
மேலும் தெரிவித்த அவர்: வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் அதிகபட்சமாக 405 நோயாளர்களும், செட்டிகுளம் சுகாதார மருத்தவ அதிகாரி பிரிவில் 107 நோயாளர்களும், வவுனியா வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 36 நோயாளர்களும், வவுனியா தெற்கு சுகாதாரமருத்துவ அதிகாரி பிரிவில் 48 நோயாளர்களும் இனம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் டெங்கு நோய்த் தாக்கத்தின் மூலம் வவுனியாவைச் சேர்ந்த இரண்டுபேர் கடந்தவருடம் மரணித்துள்ளனர். ஒருவர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சாவடைந்திருந்ததுடன், இன்னுமொருவர் யாழ் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் சாவடைந்ததாகவும் மேலும் தெரிவித்தார்.
வவுனியாவில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் விதமாக ஒவ்வொரு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் உள்ள பொதுமக்களின் கிணறுகளில் டெங்குக் கொசுவை அழிக்கும் மீன்கள் விடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-110)

## 50 போத்தல் வடிசாராயத்துடன் இருவர் கைது, கோடாவும் மீட்பு

வவுனியா, ஜன.12
வவுனியா செட்டிகுளம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட மயில்முட்டையிட்ட குளம் பகுதியில் சட்டவிரோத வடிசாராய உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில இருவர் கைதுசெய்யபட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு செட்டிகுளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மயில்முட்டையிட்ட குளம் பிரதசேத்தில் உள்ள காட்டுப்பகுதியில் தேடுதல் நடத்தியபோதே குறித்த நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
கைதுசெய்யபட்டவர்களிடம் இருந்து 50 போத்தல் வடிசாரயப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டதுடன், அதனை உற்பத்தி செய்யப் பயன்படும் கோடா 180 லீட்டரும், நவீன உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யபட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தபடவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (க-110)





# வீதி ஓட்டப்போட்டி

மன்னார்,ஜன.12
மன்னார் அல்அஸ்ஹர் தேசியப் பாடசாலையின் 2019 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியின் முதல் நிகழ்வான வீதி ஓட்டப்போட்டி வெள்ளிக் கிழமை காலை 7 மணியளவில் பாடசாலைக்கு முன் ஆரம்பமானது.
பாடசாலையின் அதிபர் எம்.வை.மாஹிர் வீதி ஓட்டப்போட் டியினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.
பாடசாலைக்கு முன் ஆரம்பமான போட்டி முதன்மை வீதி யூடாகச் சென்று மன்னார் மருத்துவமனை வீதியைச் சென்றடைந்தது.
அதனைத் தொடர்ந்து மன்னார் பள்ளிமுனை வீதியூடாகச் சென்று மன்னார் பஸார் பகுதியைச் சென்றடைந்து மீண்டும் பாடசாலையைச் சென்றடைந்தது. போட்டியில் முதலாம் இடத்தை தாஜ் இல்லத்தைச் சேர்ந்த எம்.எம்.எம்.முஜாகிர், 2ஆம்,3ஆம் இடங்களை சம்ஸ் இல்லத்தைச் சேர்ந்த வீரர் களான எம்.எல்.எம்.சல்மான் பாரிஸ், எம்.கே.எம்.வசீம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (க-56)

++++



வவுனியா,ஜன.12
வவுனியா - ஓலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட் டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்டப் போட்டி நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை 6.50 மணியளவில் பாட சாலைக்கு முன்பாக ஆரம்பமானது.
பாடசாலையின் அதிபர் கு.விமலேந்திரன் தலைமையில் ஆரம்பமான போட்டியில் ஆண்கள் 11 கிலோமீற்றர் தூர மும், பெண்கள் 8 கிலோமீற்றர் தூரமும் என நிர்ணயிக்கப் பட்டுப் போட்டி இடம்பெற்றது.
போட்டியின் நிறைவில் ஆண்கள் பிரிவில் த.தனுசன் முத லாம் இடத்தையும், த.சுமன் இரண்டாம் இடத்தினையும், க.கௌரிகாந்தன் மூன்றாம் இடத்தையும், பெண்கள் பிரி வில் ர.டினோஜா முதலாம் இடத்தையும்,ந.புகழினி இரண் டாம் இடத்தையும்,வி.டிசாந்தினி மூன்றாம் இடத்தையும் பெற்றனர். (க-110)

### ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயப்பகுதியை

# புனிதப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த புதுக்குடியிருப்பு பிரதேச சபை தீர்மானம்

முல்லைத்தீவு,ஜன.12
**ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தைச் சுற்றி 500 மீற்றருக்கு உட்பட்ட பகுதியைப் புனிதப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதுடன், அந்தப் பகுதிகளில் அசைவ உணவகங்க ளுக்கு அனுமதி வழங்குதில்லை என்று பிரதேச சபையால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

நேற்று முன்தினம் காலை 9.30 மணி யளவில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு பிரதேச சபை தவி சாளர் செ.பிறேமகாந் தலைமையில் நடைபெற்றுள்ளது.
இதன்போது சபையில் சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.
பிரதேச சபையின் ஆளுகைக்கு உட் பட்ட பிரதேசங்களில் உள்ள முடிவெட் டும் நிலையங்கள் மற்றும் ஆடை தைக்கும் நிலையங்கள் பாடசாலை மாணவர்களுக்குக் கல்வி அமைச் சால் பணிக்கப்பட்ட நியதிகளுக்கு அமைவாகத் தலைமுடி வெட்டுவதை யும் ஆடைகள் தைப்பதையும் உறுதிப் படுத்த வேண்டும் என்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள் ளது.
பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குத் திண்மக்கழிவு முகாமைத்துவம், கழிவகற்றல் முகா மைத்துவம் தொடர்பான விழிப்பு ணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்து வதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது.
ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தைச் சுற்றி 500 மீற்றருக்கு உட்பட்ட பகுதியைப் புனிதப் பிரதேச மாக பிரகடனப்படுத்துவதுடன், அந்த பகுதிகளில் அசைவ உணவகங்க ளுக்கு அனுமதி வழங்குதில்லை என் றும் எதிர்காலத்தில் எங்கள் பிரதேசங் களை சுத்தமாக வைத்திருக்கவேண் டும் என்ற நோக்கோடு. இந்த மூன்று தீர்மானங்களும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் இந்த ஆண்டுக் கான முதலாவது அமர்வின்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. (க-ரி3)

# கிளி.பாடசாலையில் தரம் – 6 அனுமதிக்காக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கிளிநொச்சி, ஜன.12
கிளிநொச்சியில் இரு பாடசாலைகளில் தமது பிள்ளைக்குத் தரம் -6 வகுப்புக் கான அனுமதி மறுக்கப்படுவதனால், இரு பாடசாலைகளில் ஒரு பாடசாலை யில் அனுமதியை பெற்றுத் தருமாறு மாணவனின் பெற்றோர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட் டுள்ளனர்.
கிளிநொச்சி மத்திய மகா வித்தியால யத்தின் ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் 5 வரை கல்வி கற்றபோதும், மத்திய கல்லூரியில் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மகா வித்தியா லயத்தில் இணைக்க முயன்றதாகவும், இரண்டாவது பாடசாலையும் அனும தியை மறுத்தமையால் மாணவனின் கற்றல் உரிமை மறுக்கப்படுவதாகப் பெற்றோர் மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிட்டுள்ளனர்.
குறித்த முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட மனித உரிமை ஆணைக் குழு இரண்டு பாடசாலை நிர்வாகம் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரை நேற்று முன்தினம் விசார ணைக்குச் சமூகமளிக்குமாறு அழைப் பாணை அனுப்பியிருந்தது.
இவ்வாறு அழைப்பாணைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கல்வி அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு கேட்டபோது:
கிளிநொச்சி மத்திய கல்லூரி ஒரு தேசிய பாடசாலை, அந்தப் பாடசாலையில் இணைப்பதற்கு வெட்டுப்புள்ளி நடை முறையே பின்பற்றப்படும். அதற்கு அயல்பாடசாலை நடைமுறை பின்பற் றப்படும் சட்டம் கிடையாது. அதேநேரம் பாடசாலையின் அனுமதியில் வலயப் பணிப்பாளர்கள் அல்ல மாகாணப் பணிப்பாளரும் உத்தரவிட முடியாது. அது நேரடியாகக் கல்வி அமைச்சுக்கு உட்பட்டது.
இதேநேரம் இரண்டாவது பாடசாலை யில் இரு பிரிவுகளுக்கு மட்டுமே அனு மதி உண்டு. மாகாண உத்தரவின் பிரகாரம் ஒரு பிரிவில் 35 மாணவர் களை இணைக்க முடியும்.
அதன்படி 70 மாணவர்களுக்கும் கிடைத்த விண்ணப்பத்தில் இருந்து 70 மாணவர்கள் இணைக்கப்பட்டுவிட்ட னர். அதேநேரம் இரண்டாவது பாடசா லையான கிளிநொச்சி மகா வித்தியால யத்தில் 70 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்தபோதும், உரிய நடை முறைகளைப் பின்பற்றியே அங்கும் மாணவர்கள் இணைக்கப்பட்ட னர்.
தற்போது அனுமதியைக் கோரும் மாண வன் தரம் 5 புலமைப் பரீட்சையில் 52 புள்ளிகளை மட்டும் பெற்றுள்ளதோடு, பாடசாலை தொடங்கும் வரையில் அனுமதிக்கு விண்ணப்பிக்கவில்லை. இந்த நிலையில் இந்த மாணவனை விட அதிகம் புள்ளி பெற்ற மாணவர்க ளைக் கூட இணைக்க முடியாத நில மையிலேயே 70 மாணவர்கள் இணைக்கப்பட்டனர்.
தற்போது இந்த மாணவனை இணைத் தால் அயல் மாணவர்களில் இதனை விடக்கூடிய புள்ளிபெற்ற மாணவர்களுக்கு துரோகம் செய்த செயலாக கருதியே அங்கும் அனுமதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்தனர். (க-105)

## பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கிளிநொச்சி,ஜன.12
கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிர தேச இளைஞர் கழக சம்மேளனத் தின் 2019 ஆம் ஆண்டுக்கான பொதுச் சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது. கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில், கரைச்சி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி அழைக்கப்பட்டுள்ள னர். (க-222)





முழங்காவில் ஆரம்பப் பாட சாலை வகுப்பறைக் கட்டடம் கல்வி இராஜங்க அமைச்சர் விஜ யகலா மகேஸ்வரன், வட.மாகா ணசபை முன்னாள் உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டது. (க-204)

# அம்புலன்ஸ் சாரதி மீது தாக்குதல்; மருத்துவமனை ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு

## மூன்றுபேர் சந்தேகத்தில் கைது

மன்னார்,ஜன.12
மன்னார் பேசாலைப் பிரதேச மருத்துவமனை அம்புலன்ஸ் சார தியை கடமை நேரத்தில் மூன்று பேர் கொண்ட குழுவினர் தாக் கியதைத் தொடர்ந்து நேற்றுப் பேசாலை மருத்துவமனை ஊழி யர்கள் ஒரு நாள் பணிபுறக்கணிப் பில் ஈடுபட்டனர்.
தாக்குதலுக்கு உள்ளான அம்பு லன்ஸ் வண்டிச் சாரதி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவம்பற்றி மேலும் தெரியவரு வதாவது:
நேற்று முன்தினம்,பேசாலை மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்ட நோயாளர்களைத் தீவிர சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனைக்கு எடுத் துச் சென்ற அம்புலன்ஸ் அங்கு நோயாளர்களை அனுமதித்து விட்டு, இரவு 10 மணியளவில் மீண்டும் பேசாலை நோக்கி வந் துள்ளது.
மன்னார் தலைமன்னார் பிரதான பாதை மன்னாருக்கும்,தாராபுரத் துக்கும் இடையிலிருந்து முச்சக் கர வண்டியில் வந்த மூன்று பேர் கொண்ட குழுவினர் அம்பு லன்ஸை பின் தொடர்ந்து பேசாலை சவக்காலைக்கு அருகா மையில் இடைமறித்துள்ளனர்.





பேசாலை மருத்துவமனையிலி ருந்து இன்னொரு நோயாளியை எடுத்துச் செல்ல வேண்டியிருந்த தால் அம்புலன்ஸ் நிறுத்தாது பேசாலை மருத்துவமனை நோக்கி வந்துள்ளது.
முச்சக்கர வண்டியில் வந்த இளைஞர் குழுவினர் வண்டி யைப் பின்தொடர்ந்து பேசாலை மருத்துவமனைக்கு முன்பாக வந்து அம்புலன்ஸை மறித்துச் சாரதியைத் தாக்கியுள்ளனர்.
அம்புலன்ஸ் சாரதி வாகனத்தைச் செலுத்திக் கொண்டு வருகையில் எதிரே வந்த முச்சக்கர வண்டிக்கு "டிம் வெளிச்சம்" போடாமல் வந் ததே காரணம் என ஆரம்ப விசார ணையில் தெரியவந்துள்ளது. இந் தச்சம்பவத்தைக் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை பேசாலை பிர தேச மருத்துவமனை ஊழியர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சம்பவத்து டன் தொடர்புடைய சந்தேகத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (க-60)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புதிய அரசமைப்பு வரைவு எதிர்கொள்ளும் சவால்

புதிய அரசமைப்புத்தொடர்பானவல்லுநர்கள்குழுவின் அறிக்கை நேற்றைய தினம் அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்ட நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விட்டது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைத் தக்கவைத்துத் தொடர்ந்து செல்வதற்கு அனுமதிப்பதற்காகத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையில் காணப்பட்ட இணக்கத்தின்படி மாசி மாதம் 4ஆம்திகதிக்கு பலநாள்கள் முன்னதாகவே இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

ரணில் தலைமையிலான அரசு இதனை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டாலும் இனி வரப்போகும் காலம்தான் அதற்குச் சோதனையானதாக அமையப் போகின்றது. அரசமைப்புச் சபையான நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றப்பட்ட உரைகளைக் கவனிக்கும்போது இதனை நன்கு உணர்ந்துகொள்ள முடியும்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச வரைவு இறுதி வரைவாக்கப்பட்டு அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அந்தப் பலம் தற்போதைய ரணில் ஆட்சியிடம் இல்லை. மகிந்த– மைத்திரி பக்கம் இருந்து சுமார் 10 முதல் 15 பேராவது ஐக்கிய தேசிய முன்னணி அரசுப் பக்கம் வந்தார்கள் என்றால்தான் மூன்றிலிரு பெரும்பான்மையுடன் உத்தேச அரசமைப்பை நிறைவேற்ற முடியும்.

நேற்று வரையில் ஆளும் ரணில்தரப்பினரிடம் அந்தப்பலம் இல்லை. எனினும் மைத்திரி தரப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேன்னிலவு கொண்டாடிக் கொண்டிருந்த காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் புதிய அரசமைப்பு முயற்சியை ஆதரித்தமையை வைத்து மிரட்டியும் சலுகைகளை முன்வைத்தும் எப்படியாவது மூன்றிலிரண்டு பெரும்பான்மையைத் திரட்டி விடலாம் என்கிற கணிப்புக்களும் அதனடிப்படையிலான நகர்வுகளுமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுபோன்றதொரு எதிர்பார்ப்புடனேயே ஐப்பசி 26 ஆட்சிக் கவிழ்ப்புச் சதியும் முன்னெடுக்கப்பட்டது.ஐக்கிய தேசியக் கட்சிப் பக்கம் இருந்து சில நாடாளுமன்ற உறுப்பினர்களைஉருவிக்கொள்ளமுடியும்என்கிறகற்பனையில் அந்த முயற்சி நடந்தது. ஆனால் அது நிறைவேறாமல் போனது என்பதையும் குறித்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவது சுலபமானது அல்ல என்பதை அரசமைப்புச் சபையான நாடாளுமன்றில் ஆற்றப்பட்ட உரைகளில் இருந்து உணர்ந்துகொள்ள முடிந்தது.

புதிய அரசமைப்பைநிறைவேற்றுவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் கிட்டியுள்ள பொன்னான வாய்ப்பைதெற்குஅரசியல்கட்சிகள்இழந்துவிடக்கூடாது என்றுகூட்டமைப்புநாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார். இதே விடயத்தை வேறு வார்த்தைகளில் வலியுறுத்திய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், புதிய அரசமைப்பு நிறைவேறாவிட்டால் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்றும் எச்சரித்தார்.


ஆனால், மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து சிங்கள, பௌத்த பேரினவாதத்தைத் திருப்திப்படுத்தும் வார்த்தைகளே வந்தன. வடக்கு, கிழக்கு இணைக்கப்படவில்லை, பௌத்தத்துக்கான முன்னுரிமையில் ஒரு சொல்லுக்கூட மாற்றமில்லை என்பவற்றையே அவர் சிங்கள மக்களுக்குச் சொன்னார். மேலும் சகலரது இணக்கமும் காணப்படவில்லையாயின்இந்தமுயற்சியைமுன்கொண்டு செல்ல முடியாது என்றும் குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்சவோ, உள்ளூராட்சித் தேர்தலில் ரணிலின் கூட்டணி தோற்றுவிட்டதால் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு இது தருணமல்ல என்றார். அதாவது ரணிலின்அரசை மக்கள் வெறுக்கத் தொடங்கிவிட்ட நிலையில் புதிய அரசு ஒன்று வந்தே புதிய அரசமைப்பு முயற்சியை மேற்கொள்ள வேண்டும் – என்றார்.

ஆக மொத்தத்தில் புதிய அரசமைப்பு வேண்டும் என்கிற ஒரு தரப்பும் வேண்டாம் என்கிற ஒரு தரப்பும் அந்தப் பக்கமும்இந்தப்பக்கமும்தமக்கானவாக்குகள்சிதறிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்ற தரப்புமாக நாடாளுமன்றம் மூன்று பகுதிகளாக இது விடயத்தில் பிளவுண்டு கிடக்கின்றது. இதற்கு மத்தியில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதென்பது தண்ணீருக்குள்ளால் நெருப்பைக் கொண்டு செல்லும் கைங்கரியம்தான்.

# இலங்கை அரசியலில் ஆரோக்கியமற்ற பதவிப் போட்டிகள்

இந்துமதி



எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் இழந்தமை தொடர்பாகத் தமிழ்மக்கள் அவ்வளவாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்றுதான் கூறவேண்டும். ஏனென்றால் சம்பந்தன் அந்தப் பதவியை வகித்ததால் தமிழர்களுக்கு எதுவுமே கிடைத்துவிட வில்லை என்பதுதான் யதார்த்தமாகும்.

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இரண்டு பிரதான கட்சிகளுக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அந்த இரண்டு கட்சிகளும் இணைந்து கட்டு அரசொன்றை அமைத்துக் கொண்டன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன அரச தலைவராகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராகவும் பதவிப் பொறுப்புக்களை வகித்தனர். அப்போது மூன்றாவது பெரிய கட்சியாக விளங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார். அந்தவேளையில் அதைத் தவிர வேறு மாற்று வழியொன்றும் காணப்படவில்லை.

### தற்காலிக வெற்றி

சுமார் மூன்று ஆண்டுகள் ஐந்து மாதங்களுக்கு சம்பந்தனின் பதவிக்கு ஆபத்து எதுவும் ஏற்படவில்லை. மகிந்த தரப்பினர் எதிர்கட்சித் தலைவர் பதவி தொடர்பாக அவ்வப்போது பேசி வந்தபோதிலும் அந்தப் பதவியில் மாற்றம் எதையும் ஏற்படுத்துவதற்கு அவர்களால் முடியவில்லை. ஆனால் அரசதலைவரால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் குழப்பங்கள் இந்தப் பதவியிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்குத் தவறவில்லை.

நாட்டின் அதியுயர்ந்த அரச தலைவர் பதவியை வகித்த மகிந்தராஜபக்ச இன்று எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டுக்கொண்டிருக்கின்றார். அரச தலைவரின் விருப்பத்துக்கு ஏற்ப சுமார் 50 நாள்களாகத் தலைமை அமைச்சர் பதவியில் அமர்ந்துகொண்ட அவரால் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் அந்தப் பதவியில் நீடிக்கமுடிய வில்லை. அந்தப் பதவியைத் துறந்து கண்ணிர் மல்கியவாறு வீடுசெல்ல நேரிட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தனிடமிருந்து பறித்துக்கொண்டதால் மகிந்த ராஜபக்சவுக்குக் கிடைத்த நன்மை தொடர்பாகவும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமர்ந்துவிடக்கூடாது என்பதில் இனவாதிகள் தீவிரமாகச் செயற்பட்டுவரும் நிலையில் அவர்களுக்கு ஒரு தற்காலிக வெற்றியாகவே சம்பந்தன் அந்தப் பதவியிலிருந்து விலகியதைக் கூறமுடியும். இதைவிட இது தொடர்பாக விசேடமாக எதையும் கூறமுடியாது.

### எதிர்கட்சி ஆதரவு

நாடாளுமன்றத்தில் மொத்தமாக 225 உறுப்பினர்கள் உள்ள நிலையில் சுமார் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டுள்ள கூட்டமைப்பு எதிர்க்கட்சித் தலைமைப் பதவியில் செயற்படுவதை எவராலுமே ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொள்ளவேண்டியதொரு கட்டாய நிலை தோன்றியது. ஆனாலும் எதிர்க்கட்சிக்குரிய கடமைகளை கூட்டமைப்பு இதுவரையில் நிறைவேற்றி வந்துள்ளதா? என்ற கேள்வியும் ஏழாமலில்லை.

அரசுக்கு ஆதரவு வழங்குவதையே கூட்டமைப்புத் தனது பிரதான கடமையாகக் கொண்டிருந்ததை எவருமே மறுத்துவிட முடியாது. வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவதில் இருந்து அரசின் திட்டங்கள் அனைத்துகபுகும் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கியே வந்துள்ளது. ஜனநாயக நாடொன்றில் இதையொரு அதிசயமாகவே காண முடிந்தது.

தற்போதுகூட புதிய அரசமைப்பின் உருவாக்கத்துக்காக ரணில் தலைமையிலான அரசுக்கு ஆதரவு வழங்குவதன் அவசியத்தை சம்பந்தன் அடிக்கடி கூறி வருகின்றார். கூட்டமைப்பு ஆதரவு வழங்காதிருந்தால் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து மகிந்த விலகியிருக்க வேண்டிய தேவை எழுந்திருக்காது. அது மட்டுமல்லாது ரணில் விக்கிரமசிங்க வும் தலைமை அமைச்சராக நீடித்திருக்க முடியாது. மகிந்த தரப்பு கூட்டமைப்பின் மீதும் அதன் தலைமையின் மீதும் கடுமையான வெறுப்பைக் காட்டுவதற்கு இதுவே பிரதான காரணமாகவும் அமைந்துவிட்டது.



### மகிந்த எதிர்ப்பு

இந்த நிலையில்தான் புதிய அரசமைப்பின் நிறைவேற்றத்தை அனுமதிக்க மாட்டோமென மகிந்த சூளுரைத்துள்ளார். அவருக்கு ஆதரவாக மகா சங்கத்தினரும் கிளம்பியுள்ளனர். இனவாதிகள் அனைவரும் இவ்ர்களுக்குப் பின்னால் அணி திரள்வார்களென்ப தில் எவ்வித ஐயமும் கிடையாது. இதனால் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு அரசமைப்பை நிறைவேற்றுவதில் சங்க டங்களை எதிர்கொள்ளப்போகின்றது என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

சபாநாயகரின் முடிவின் பிரகாரம் மகிந்த ராஜபக்ச எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமர்வது உறுதியாகிவிட்டது. மகிந்தவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பாகச் சம்பந்தன் கிளப்பிய ஆட்சேபனைகளை சபாநாயகர் தரப்பு ஒரேயடியாக நிராகதித்து விட்டதையும் முழுதாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதில் ஒரு தலைப்பட்சமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதே பெரும்பான்மையானவர்களின் அபிப்பிராயமாகக் காணப்படு கின்றது.

எது எப்படியோ இந்த நாட்டின் தலைமை அமைச்சர் பதவி தொடக்கம் எதிர்க்கட்சித் அலைவர் பதவிவரை போட்டிகளுக்குக் குறைவில்லாததொரு நிலைதான காணப்படுகின்றது. ஆனால் இவை ஆரோக்கியமான போட்டிகளாக அமையவில்லையென்பது மிகப்பெரிய குறைபாடாகும்.



# பற்றைகளை நாடும் அவல நிலை மாறுமா?

கிருஸ்ணன்

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் மக்கள் உட்படத் தென்மராட்சிப் பிரதேச மக்கள் கழிப்பறைக் கழிவுகளை அகற்ற முடியாது பெரும் இக்கட்டான நிலையில் உள்ளனர். அவர்கள் இயற்கைக் கடன்களுக்காகப் பற்றைகளை நாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்ட மலக் கழிவு தூய்மைப்படுத்தும் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தி முடிக்க வேண்டும் என்று சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள் சபையில் கோரியுள்ளனர்.

2016ஆம் ஆண்டு இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப் பட்டது. பிலிசறு மலக்கழிவு தூய்மைப்படுத்தம் திட்டத்தில் 25 மில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. இது ஆறு மாத காலத்தில் முடிவுறுத்தப்படும் என்றும் கூறப்பட்டது. இப்போது 3 ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. ஆனால் இதுவரை முடிவுறுத்தப்படவில்லை. இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் வலிகாமம் தெற்கு, சாவகச்சேரி, கரவெட்டி ஆகிய இடங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தலா 25 மில்லியன் ரூபா செலவில் இவை நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த மூன்று ஒப்பந்தங்களும் ஒரு ஒப்பந்தகாரரிடமே வழங்கப்பட்டுள்ளன. அந்த ஒப்பந்தகாரர் 3 மாதங்களில் வேலைகளைக் கைவிட்டுச் சென்றுள்ளார்.

இந்தத் திட்டங்களை அந்தந்த உள்ளூராட்சிச் சபைகள் மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்டச் செயலர் உள்ளூராட்சிச் சபைகளைக் கேட்டிருந்தார். பெரும் நிதியில் மேற்கொள்ளப்படும் திட்டம் என்பதால் உள்ளூராட்சிச் சபைகள் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தன.

பெருமளவு நிதிச் செலவில் திட்டத்தின் ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 3 ஆண்டுகளாக அவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இதற்கெனப் பயன்படுத்தப்பட்ட கம்பிகள் துருப்பிடித்துக் காணப்படுகின்றன. இந்தப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சிங்கப்பூர் மற்றும் இந்தியாவில் இருந்து நிபுணர்கள் வந்து பார்வையிட்டு அறிக்கையிட்ட பின்னரே இடைநிறுத்தப்பட்ட வேலைகளில் இருந்து ஆரம்பிப்பதா? அல்லது புதிதாக ஆரம்பிப்பதா? என்பது தொடர்பாக முடிவு செய்ய முடியும் என்றும் கூறப்படுகின்றது.



ஆனால் கழிவு அகற்றுவதற்கு யாழ்ப்பாணம் மாநாகர சபை 13 ஆயிரம் ரூபா அறவிடுகின்றது. பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு பிரதேச செயலகமும், அரச சார்பற்றி நிறுவனங்களும் கழிப்பறைகளை வழங்கியுள்ளன. அண்மையில் பெய்த கடும் மழையால் கழிப்பறைக் குழிகள் நிரம்பி யுள்ளன. அதனால் மக்கள் இயற்கைக் கடன் கழிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பொதுக் கழிப்பறைகள், மருத்துவமனைக் கழிப்பறைகள், பொலிஸ் நிலையங்கள், படைமுகாம்கள் ஆகியவற்றிலும் காணப்படுவதாகச் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. மலக் கழிவுகள் அகற்றப்படாத நிலையில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படும் அபாய நிலைமை தோன்றியுள்ளது.

இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர யாழ்ப்பாணம் மாநர சபை ஊடாகக் கழிவகற்றும் செயற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டன என்று சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் தெரிவித்தார். எமது கோரிக்கையை ஏற்றுச் சலுகைக் கட்டணத்துடன் மலக் கழிவுகள் அகற்றப்பட்டன. எமது வாகனங்கள் ஊடாக அவை கொண்டு செல்லப்பட்டன. அவர்கள் வழங்கிய காலக்கெடு எதிர்வரும் 15ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள நிலையில் கழிவுகளைக் கொண்டுவர வேண்டாம் என்று அறிவித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையினர் மலக் கழிவுகளை அகற்றுவதற்கு 13 ஆயிரம் ரூபாவை அறவிடுகீன்றனர். பொருளாதாரத்தில் நலிந்த குடும்பங்கள் 13 ஆயிரம் ரூபாவைச் செலுத்திக் கழிவகற்ற முடியாத நிலைமையில் உள்ளனர். அதனால் அவர்கள் இயற்கைக் கடன் கழிக்கப் பற்றைகளை நாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மலக் கழிவு அகற்றும் பிரச்சினை தொடர் கதையாகவே உள்ளது. கழிப்பறைக் கழிவுகளை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொள்ள வேண்டிய அப்பாய நிலைமை உள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் காத்திரமான முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியமானது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்று மக்கள் கோருகின்றனர்.

## ஆசிரியருக்கான கடிதம்

# சமயம் என்பது சாப்பாடல்ல, சாதனையே

தேடித் தேடொணத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன். எல்லாம் வல்ல எம்பெருமானை அவரவர் உள்ளத்திலே தேடுவதும், அவனை இருத்துவதும் அவனை உணர்ந்து ஒன்றிப்பதும் அவனைப் பிரகாசிக்கச் செய்வதும் அவன் வசப்படுவதுமே சமய மாண்பாகும்.

அவனையடைந்து பேறாக்குவதற்காகவே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பாதைகளையும் சமயம் வகுத்துத் தந்துள்ளது.

நாம் சரீரத் தொண்டுக்கு ஆளாகுவோமாக இருந்தால் அதுவொன்றே எம்மைப் பக்குவப்படுத்திச் சாதனையாளராக்கிவிடும்.

சரீரமானது எமக்குக் கிடைத்திருப்பதானது பெரும் புண்ணியமான சமாச்சாரமாகும். சரீரமானது எமது ஆத்மாவின் செயற்பாட்டை வெளிப்படுத்தி இறைவனை வசப்படுத்திப் பரசவப்படுத்துவதுமாகும்.

சரீரத்தைப் பயன்படுத்தாமல் சாப்பாடு ஒன்றால் மட்டும் இறைவனை அடைந்துவிட முடியாது. வீட்டிலும் சரி நாட்டிலும் சரி உழைப்பொன்றில்லாமல் வயிற்றுக் கீய்வது வருத்தங்களையே முதலீடு செய்வதாக இருக்கும்.

உணவு என்பது விரதத்திலும் சரி நோன்பிலும் சரி இரண்டாவது பட்சமாகவே வைக்கப்படுகிறது. சரியை, கிரியை, யோகம், ஞானத்திலும் சாப்பாடு என்பது இரண்டாவது பட்சமாகவே கருதப்படுகின்றது.

எனவே தொண்டு, வழிபாடு, பஜனை, கிரியைகள், அனுட்டானம், தியானம், புராணபடனம், நமஸ்காரம் ஆகிய சாதனைகளே சமயமாகும். இதைவிடுத்து சாப்பாடு மட்டும் சமயமாகது ஒவ்வொரு சைவ சமயிக்கும் தீட்சை அவசியமாகும். இதுவும் ஒரு சாதனையே.

கே.எஸ்.சிவஞானராஜா

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



# அமுத விழாவும் 'பஞ்சநதி' ம

## வாழ்த்துச் செய்தி

மதிப்பார்ந்த முன்னாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் வழிகாட்டலில் மொட்டாக இருந்து மலராகி இன்று அவர்தம் பெயரினை முன்னுதாரணமாக இந்தச் சமுதாயத்திற்கு அடையாளப்படுத்தக்கூடிய வகையில் ஒரு மாணவர் குழாம் பேர்சொல்லும் பிள்ளைகளாகத் திகழ்வதும் 91ஆம் ஆண்டுக்கான அம் மாணவ அணியினர் அமுத விழாவும் - "பஞ்ச நதி" மலர் வெளியீடுஞ் செய்து அவருக்கு இன்று கௌரவமளிப்பதும் உள்ளம் உவகை கொள்ள வைக்கிறது.

"நாம் செல்லுகின்ற பாதை – அதிபர் பஞ்சலிங்கம் அவர்கள் காட்டிய பாதை" என்று இத்தனை தசாப்தங்கள் கடந்தும் ஒரு மாணவர் குழாம் மனதளவிற் பூரித்துப் பெருமையோடு சொல்கின்றதென்றால் அவர்களுடைய கல்விப் பயணத்தில் எத்துணை தூரம் இந்த அதிபரது நிர்வாகத்திறன் கோலோச்சியுள் ளது என்பது பட்டவர்த்தனமாய்த் தெரிகிறது.

அதிபர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். மாணவர்களை நல் வழிப்படுத்துதில் இவர் கையாண்ட உத்திகள் மனதில் இன்றும் நின்று நிலைப் பவை. மாணவர்கள் மத்தியில் மட்டுமல்லாமல் ஆசிரியர்கள் வட்டத்திலும் இவரது நிர்வாகத்திறன் இன்றளவும் பேசப்படுவனவான விடயங்கள் செவி வழியாகக் கேட்பதில் மனம் மகிழ்கிறது. இன்றைய கல்வி நிர்வாகமானாலுஞ் சரி பாடசாலை நிர்வாகங்களானாலும் சரி இவரது நிர்வாகத் திறன்களை ஒரு முன்மாதிரியாகக் கொள்வது ஆரோக்கியமானது என்று யான் கருதுகின் றேன். இப்பெருமகனாரின் வாழ்வியற் சாதனைப் பயணத்திற்கு அவரது வழிகாட்டலில் முகிழ்த்த அவர்தம் பெருமைகளை விழுதுகளாய்த் தாங்கி நிற்கும் இந்த மாணவர் குழாம் முன்னெடுக்கும் அமுத விழாவும், "பஞ்சநதி" என்ற இந்த மலர் வெளியீடும் சிறப்புற்றமைய இறையாசி வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

**ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த மகராஜ்**
**தலைவர்-**
**ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன்**
**கொழும்பு**

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

திருவாளர் அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களின் 83 ஆவது அகவையை முன்னிட்டு வெளியிடும் "பஞ்சநதி" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியையும், யாழ். இந்துக்கல்லூரியில் உயர் கல்வியையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பினையும் பெற்று சிறந்த ஆசிரியராக 1982 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்து யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ்.இந்துக் கல்லூரியிலும் புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்க ஓர் அதிபராக அறியப்படுகின்றார்.

சிறந்த சமூக சேவையாளராகப் பல்வேறு கழகங்களின் தலைவராகச் செயற்பட்டு வருபவர். ஓய்வின்பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் வருகைதரு ஆங்கில விரிவுரையாளராகச் செயற்பட்டு மாணவர்களின் ஆங்கில மொழிப் புலமைக்கு வழிசமைத்தவர். சிறப்பு மலர்கள், சஞ்சிகைகளில் கல்வி தொடர்பாக யாவரும் அறியும் பொருட்டு தனது புலமையை வெளிப்படுத்தியவர்.

திருவாளர் அ.பஞ்சலிங்கம் அவர்கள் தனது 83 ஆவது அகவையில் சிறந்த வினைத்திறனான சேவையை ஆற்றி வருபவர். அவரது பணியை வெளிக்கொணர முயற்சித்த யாழ். கொக்குவில் இந்துவின் 1991 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களையும் பாராட்டி திருவாளர் அ.பஞ்சலிங்கம் அவர்கள் மேலும் அரிய பல கல்விப் பணிகளை தொடர்ந்து ஆற்றிட எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டி ஊற்றெடுக்கும் "பஞ்சநதி" புதுப் பொலிவுடன் பிரவாகிக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துச் செய்தி

வடமாகாணத்திலே கல்வியின் கலங்கரை விளக்கமாகத் திகழும் பாடசாலைகளிலே பிரதானமானவைகளில் யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரி, யா/யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இவை இரண்டும் தமிழ்மக்களின் அடையாளங்களாகவும் திகழ்கின்றன. இவ்விரண்டு பாடசாலைகளையும் அதிபராக இருந்து வழி நடாத்திய பெருமை மூதறிஞர் திரு அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களைச்சாரும். மாணவனாய், ஆசிரியனாய், பிரதி அதிபராய், அதிபராய் ஒருபாடசாலையிலே கடமையாற்ற இறைவன் கொடுத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி தமிழ்க் கல்விச்சமூகத்திற்கு அளப்பரிய சேவை ஆற்றியவர். முன்பள்ளித்துறையிலும் இவரது பணி அளப்பரியது றொட்டறிக்கழகம் சமாதானக்குழு போன்றவற்றிலும் பங்கெடுத்து இடர் ஏற்பட்ட காலங்களில் அயராது பணிபுரிந்தவர். தமிழ் மாணவர்களின் கல்வியே தனது தலையாய பணியாகக் கொண்டவர். தற்பொழுது எண்பது வயதைக்கடந்தும் தமிழ் முன்பள்ளிக் கல்வித்துறையில் உன்னத பணியாற்றி வருகின்றார்.

மூதறிஞர் திரு அப்பாத்துரை பஞ்சலிங்கம் அதிபராக இருந்த காலத்தில் கொக்குவில் இந்துவில் கல்வி கற்ற 1991 ஆம் ஆண்டு அணிமாணவர்கள் தங்கள் அதிபர் மூதறிஞர் திரு அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களது சேவையை கௌரவிக்கும் முகமாகவும் தமது எதிர்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டவும் அதிபர் மூதறிஞர் திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம் " அமுதவிழாவை " யும் அமுதவிழாச் சிறப்பு மலரான "பஞ்சநதி " யையும் 12.01.2019 அன்று கொக்குவில் இந்துக்கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடாத்தி வெளியிட்டு கௌரவிக்க உள்ளனர்.

இவ்வாறான நன்மைமிகு செயற்பாடுகளை ஆற்றி சமுதாயத்திற்கு வழிகாட்டும் மூதறிஞர் திரு அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களது சேவையை கௌரவிக்கும் முகமாக கொக்குவில் இந்துவில் கல்வி கற்ற 1991 ஆம் ஆண்டு அணிமாணவர்கள் எடுக்கும் "அமுதவிழாவும்" அமுதவிழாச் சிறப்பு மலரான "பஞ்சநதி" வெளியீடும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிக்கட்டும் என வாழ்த்துகின்றேன்.

**திருமதி.விஜயகலா மகேஸ்வரன் பா.உ**
**கல்வி இராஜாங்க அமைச்சர்.**

## வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி

கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் பஞ்சலிங்கம் அவர்களின் பாதச்சுவடுகளை பணிந்து பயணிக்கும் மாணவர்களால் எடுத்த முயற்சியால், பவள விழாகாணும் கதாநாயகனுக்கு வாழ்த்துசெய்தி வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

அதிபர் பஞ்சலிங்கம் அவர்கள் ஆளுமைமிக்க அதிபராக, மாணவ சமுதாயத்திற்கான கலங்கரை விளக்காக செயற்பட்டு பல்வேறு சவால்கள் மத்தியிலும் தன் பணியினை சலிக்காது செய்தமையும் ஓய்வுபெற்ற பின்பும் கல்வி, சமூக உயர்வு சார்ந்தும் பல்வேறு பணியினை தனியாக தன்மீது நம்பிக்கை கொண்டவர்களின் துணையோடு தொடர்ந்து ஆற்றியிருப்பது இன்றைய காலத்தின் தேவையானதும் ஏனையவர்க்கு முன்னுதாரண மாகவும் இருத்தல் பாராட்டத்தக்கது.

அதிபர் பஞ்சலிங்கம் அவர்கள், பணிக்காலத்தில் அவரிடம் காணப்பட்ட குறிகோளை நோக்கிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் விவேகம், நேர முகாமைத்துவம் அர்ப்பணிப்பு, சிறந்த தொடர்பாடல் அஞ்சாத தற்துணிவு போன்ற பல பண்புகள் அவரது தலைமைத்துவத்தின் எடுத்துக்காட்டாக அமைந்ததோடு இப் பண்புகள்தான் கதாநாயகனை பவளவிழா காணவைத்தது மட்டுமல்ல நூற்றாண்டு விழாவையும் காண்பர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. "விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை" என்பதனைப் போல இவரிடம் பயின்ற மாணவாகள் அவரின் பற்றுதலால் உந்தி பவளவிழா எடுத்திருப்பது நன்றியுள்ள சமூகம் நயக்கும் வகையில் இவ் விழாவை நடத்தும் மாணவர்களின் செயற்படுவது சுட்டிக்காட்டத்தக்கது. இவ் விழாவிற்கு தம்மை அர்ப்பணித்து செயலாற்றியவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வ தோடு, பவள விழா காணும் கதாநாயகன் நூற்றாண்டு விழாவினைக் காணவும், சகல சௌபாக்கியம் கிடைக்கவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**இ.இளங்கோவன்**
**ஆளுநரின் செயலாளர்,**
**(வட. மாகாணம்.)**

## வாழ்த்துச் செய்தி

திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களுக்கு அவர்தம் மாணாக்கர்களாகிய பாடசாலையின் 91 ஆம் ஆண்டுக் கான அணியினர் அமுத விழாவும் - "பஞ்சநதி " மலர் வெளியீடுஞ் செய்து கௌரவமளிப்பது உள்ளம் உவகை கொள்ள வைக்கிறது.

பழைய மாணவனாக, ஆசிரியராக, அதிபராகத் தான் கற்ற பாடசாலையில் அங்கம் வகிப்பதென்பது எல்லோருக்கும் எளிதில் அமைந்துவிடாது. அமுதவிழாக் கண்டு அதனை தாண்டிய வயதிலும் இவரது நிர்வாகத்திறன் இன்றளவும் ஏதோ ஒருவகையிற் கோலோச்சிக் கொண்டிருக்கிறது என்பதை யானறிவேன். தமிழ்க் கல்விச் சமூகத்திற்குக் கிடைத்தவொரு வரப்பிரசாதம் என்று நம்மவர் சிலாகித்துப் பாராட்டும் அளவுக்கு இவரது சேவையும் நிர்வாகத் திறனும் அமைந்துள்ளதெனக்கூறின் மிகையில்லை. சமூக ரீதியில் ஒரு கல்வியியலாளன் தரு கின்ற இத்தகைய உயர்வான மாற்றம் மகத்தானது. இன்றைய சமூகத்திற் கல்விப் புலத்திலும் அதுசார்ந்த நிர்வாகப் புலத்திலும் இவருக்கென்று ஒருதனி மரியாதையும், இவர்தம் பெருமைகளைக் கூறிப் புளகாங்கிதம் கொள்ளும் ஒரு குழுமம் இருக்கின்றதென்றால் அதுவே இவரது காலத்துச் சேவைக்காகக் கிடைத்துக் கொண்டிருக்கும் உயர்விருது.

என்னைப் பொறுத்தவரையிற் "பஞ்சநதி" என்ற இந்த மலர், திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் சாதனைப் பயணத்திற்குப் மிகப் பொருத்தமானது. இவ்வமுத விழா நிகழ்வும் மலர் வெளியீடும் சிறப்புற்றமைய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் சி.பத்மநாதன்,**
**வேந்தர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## மூதறிஞர் அப்பாத்துரை பஞ்சலிங்கம்

யாழ்ப்பாணத்தின் தலை சிறந்த கல்லூரிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாணவனாக, ஆசிரியனாக, பிரதி அதிபராக, அதிபராகப் பல்வேறு நிலைகளில் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு ஒரு அடையாளத்தைக் கொடுத்தவர் மூதறிஞர் திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்கள். அவர் தனது ஆளுமையால் இவ்விரண்டு பாடசாலைகளிலும் அதிபராக அமர்ந்து யாழ்ப்பாண கல்விச் சமுகத்துக்கு வழிகாட்டியவர். அவரின் அமுதவிழாவையும், "பஞ்சநதி" நூல் வெளியீட்டையும் இன்று (12.01.2019) சனிக்கிழமை கொக்குவில் இந்து பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் கொக்குவில் இந்துவில் கற்ற 1991 ஆம் ஆண்டு அணியினர் சிறப்பாக கொண்டாடுகின்றனர். அவ்விழா சிறக்கவும், மூதறிஞர் பல்லாண்டுகாலம் வாழ்ந்து கல்விச் சேவை புரிய உளமார வாழ்த்துகின்றோம்.

**தே.ஜெயக்குமார்,**
**தலைவர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**

## றோட்டறிக் கழகத்தின் வாழ்த்துச் செய்தி

றோட்டேரியன் அ. பஞ்சலிங்கம் அவர்களின் பிறந்த தினத்தில் யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தின் முன்னாள் தலைவர் என்ற வையிலும், றோட்டரி மாவட்டம் 3220 இன் உதவி மாவட்டச் செயலாளர் என்ற கோதாவிலும் வாழ்த்துச் செய்தி வரைவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

றோட்டேரியன் அ. பஞ்சலிங்கம் அவர்கள் இளைஞர் யுவதிகளை வழிகாட்டிக் கரை சேர்ப்பதில் கைதேர்ந்த ஒருவர். எனது பாடசாலை காலத்தில் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நான் பயின்ற காலங்களில் இவர் ஆற்றிய சேவைகளைக் கண்டு, அதிபர் என்ற கௌரவத்துக்கப்பால் அவர் மீது எனக்கிருந்த மதிப்பும், மரியாதையும் அதிகரித்தது.

நான் நினைக்கின்றேன் அவர் அதிபராக இருந்த சமயத்தில் தான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இன்றறக்ட் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. பள்ளிச் சிறுவர்களை றோட்டறிக் குடும்பத்தில் இணைத்ததன் மூலம் பல றோட்டரிச் சேவையாளர்கள் உருவாவதற்கு அவர் காரணமாகினார்.

தன்னுடைய ஓய்வு காலத்திலும் பல மக்கள் நலன் சார் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி கொண்ட றோட்டேரியன் அ. பஞ்சலிங்கம் அவர்கள், யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் தலைவராக பல வருடங்கள் பதவி வகித்தார். தன்னுடைய பதவிக் காலத்தில் பயனுள்ள பல செயற்றிட்டங்களையும் செய்து முடித்திருந்தார்.

அந்த வகையில் இன்று அகவை நாள் காணும் றோட்டேரியன் அ. பஞ்சலிங்கம் அவர்கள், தொடர்ந்தும் மக்கள் பணிநின்று சேவையாற்றுவதற்கு தேவையான திடகாத்திரத்துடனும், நீண்ட ஆயுளுடனும் என்றும் மங்காப் புகழுடன் வாழ இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

**றோட்டேரியன், சி. அனுராஜ்**
**உதவி மாவட்ட செயலாளர்**
**றோட்டறி மாவட்டம் 3220**



## திரு.அப்பாத்துரை

பெயர் : திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம்
தந்தை : சதாசிவம் அப்பாத்துரை
தாய் : அப்பாத்துரை இரத்தினம்மா
பிறந்த திகதி : 08.01.1936
பிறந்த இடம் : கொக்குவில் கிழக்கு
மனைவி : ஸ்ரீமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம் B
ஆசிரியை (31.01.1936 - 23.12.20
பிள்ளைகள் : திரு. அ.நிரஞ்சன் - பொறியியலாள
திருமதி நிருபா அருந்தவம் B.Sc.,
ஆசிரியை

**ஆரம்பக்கல்வி , இடைநிலைக்கல்வி :** யா/கொ
**க.பொ.த உயர்தரம் :** யாழ். இந்துக்கல்லூரி
**பட்டப்படிப்பு :** இலங்கைப் பல்கலைக்கழகம் கொ
**பட்டப்பின் கல்வி டிப்ளோமா :** இலங்கைப் பல்க
- கல்வித்திட்டமிடலும் நிர்வாகமும் தொடர்பான சா
- இலங்கை கல்வி நிர்வாக சேவை, தரம் III - 1982
- இலங்கை கல்வி நிர்வாக சேவை, தரம் II - 1992

**தொழில் :** ஆசிரியர் - 1958 - 1980
அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி, 1
: அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**அரச பணியிலிருந்து ஓய்வு :** 07.01.1996
**தொழில் வாழ்வு (ஓய்வின் பின்) :** வருகை விரி
கல்லூரி, யாழ்
- வருகை போதனாசிரியர், ஆங்கில மொழிக் கற்பி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1996 - 2000
- வருகை விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசா
- முகாமையாளர், NIIT, யாழ்ப்பாணக்கிளை, 200

**கல்வித்துறைச் சேவை :** - தலைவர், யாழ்ப்பாண
- அங்கத்தவர், விஞ்ஞானபீட கௌரவ உறுப்பினர்,
1991 - 1997

**எழுத்து முயற்சிகள் :** கல்வி அனுபவப் பகிர்வு
சஞ்சிகைகளிலும் சிறப்பு ம

**சமூக சேவை**
- தலைவர், கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய ம
1996/1997, 2007/2008, 2009/2010
- உப தலைவர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழை
- தலைவர், வடமாகாண அதிபர் சங்கம் 1993 - 19
- தலைவர், யாழ்ப்பாணப் பாடசாலைகள், விளைய
- தலைவர், யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்
- தலைவர், யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகம், 1998
- தலைவர், உரும்பிராய் கல்வி அபிவிருத்தி நம்பிக்
- தலைவர், உரும்பிராய் ஞானவைரவர் கோயில் ப
- காப்பாளர், கொக்குவில் வளர்மதி நிறை வாழ்வக
- தலைவர், யாழ்ப்பாண மாவட்ட நுகர்வோர் பாதுக
- உறுப்பினர், இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணி

## வாழ்த்துச் செ

யாழ்.மாவட்டத்திலுள்ள வரலாற்றுப் பாரம்பரியமிக்க சிறந்த பாடசா
கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.பஞ்சலிங்கம் அவர்கள் அமுத
யின் பழைய மாணவன் என்ற வகையிலும், சிட்னி நகர், ஆஸ்தி
என்ற வகையிலும் அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அக
யின் மகத்தான வளர்ச்சிக்கு பங்களிப்பு நல்கிய பல அதிபர்கள் ம
உண்டு. நல்லாசிரியராய், உபஅதிபராய், திறமைமிக்க அதிபரா
விளங்கி எந்தச் சூழ்நிலையிலும் பாடசாலையின் உயர்ச்சிக்காக
காலம் பாடசாலை வரலாற்றில் ஒரு பொற்காலம் என்றே சொல்ல
ளம் முழு வெள்ளை ஆடையில் உலாவி வந்த ஒரு வெள்ளை உ
பிறை கண்ட உத்தமர். மற்றவர்களால் வணங்கப்படும் தகுதி உ
சமூகத்திற்கு நற்பணியாற்ற வேண்டும். உடல்நலமும், உளநல
சங்கம் சார்பாக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின



# மலர் வெளியீடும் -12.01.2019

காலம்: 12.01.2019
(சனிக்கிழமை )
நேரம் : பி.ப. 2.30 மணி
இடம் : பஞ்சலிங்கம் கேட்போர் கூடம் (கொக்குவில் இந்துக் கல்லூரி)




## ...துரை பஞ்சலிங்கம்

...சலிங்கம்
...ர
...ம்மா

...சலிங்கம் B.Sc.
... - 23.12.2015)
...றியியலாளர், B.Sc (Engineering) (கனடா)
...ம் B.Sc., M.Ed. P.G.D.E., M.Phil.,
ஆசிரியை, வேலணை மத்திய கல்லூரி
: யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
...ல்லூரி
...ழகம் கொழும்பு B.Sc. - 1958
...கைப் பல்கலைக்கழகம், பேராதனை 1972
...ர்பான சர்வதேச டிப்ளோமா புதுடில்லி, 1985
... III - 1982
... II - 1992

...கல்லூரி, 1980 - 1991
...க்கல்லூரி, 1991 - 1996
... 1996
...கை விரிவுரையாளர், உயர்தொழில்நுட்பக்
...லூரி யாழ்ப்பாணம், 1996 - 2004
...ழிக் கற்பித்தல் அலகு,
... - 2000
...ியர் கலாசாலை, 2000 - 2014
...ளை, 2005
...யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், 2002 - 2003
...றுப்பினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

...ப் பகிர்வு தொடர்பாக, பத்திரிகைகளிலும்
...ம் சிறப்பு மலர்களிலும் எழுதியமை

... பழைய மாணவர் சங்கம்,
...
...ல்லூரி பழைய மாணவர் சங்கம் 1997/1998
... 1993 - 1995
... விளையாட்டுச் சங்கம் 1980
... துடுப்பாட்டச் சங்கம் 1994/1995
...கம், 1998/1999, 2004/2005
...த்தி நம்பிக்கை நிதியம் - 2007
... கோயில் பரிபாலன சபை 2007 - 2013
... வாழ்வகம் 2000
...வார் பாதுகாப்புச் சட்டம் - 2009
...கண்காணிப்புச் சபை, 2002 - 2008

### ...த்துச் செய்தி

...றந்த பாடசாலைகளுள் ஒன்றாகத் திகழும் கொக்குவில் இந்துக் ...ர்கள் அமுதவிழா நிறைவினைக் காண்கிறார். இப்பாடசாலை ...கர். ஆஸ்திரேலியா நாட்டு பழைய மாணவர் சங்கத் தலைவர் ...குவதில் அகமகிழ்வு அடைகின்றேன். எமது கல்லூரி அன்னை ...திபர்கள் மத்தியில் திரு.பஞ்சலிங்கம் அவர்களுக்கு தனிஇடம் ...க அதிபராய், அறிவும் ஆற்றலும் செயற்திறனும் மிக்கவராக ...ர்ச்சிக்காக தன்னலமற்ற பணியாற்றியவர். இவரின் பதவிக் ...ற சொல்ல வேண்டும். கண்டிப்புக்குள்ளும் ஒரு கருணை உள் ...ள்ளை உள்ளம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் ஆயிரம் ... தகுதி உடையவர். இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து எமது ...ம், உளநலமும் சிறந்தோங்க இந்நாளில் பழையமாணவர் ...த்து நிற்கின்றேன்.

திரு.சின்னராசா தணிகைராஜன்
OSA சிட்னி, ஆஸ்திரேலியா

### வாழ்த்துச் செய்தி

யாழ்/ இந்துக் கல்லூரியின் பழையமாணவன் மற்றும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தலைவர் என்றவகையில் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் சாதனைகளைப் பாராட்டியும், சிறப்பித்தும் கொக்குவில் இந்துவின் 91 ஆம் ஆண்டு (க.பொ.த. உயர்தர) மாணவ அணியினரால் வெளியிடப்படும் பஞ்சநதிஎனும் சேவைநயப்பு மலருக்கு இவ் வாழ்த்துச் செய்தியை அகமகிழ்வுடன் வழங்குகின்றேன். வட இலங்கையின் புகழ் பூத்த கல்வியாளரான இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகிய பிரபல பாடசாலைகளின் அதிபராகவும் சேவையாற்றி ஓய்வுபெற்றவர். இன்றுள்ள கல்வியாளர்களில் மிகுந்த ஆளுமை மற்றும் நீண்ட அனுபவம் வாய்ந்தவராகத் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் காணப்படுவதோடு, சிறந்ததோர் மென் நிர்வாகியாகவும், தூரநோக்குக் கொண்டவராகவும் இன்றளவும் விளங்கிவருகின்றார்.

அவரது நிர்வாகப் பாணியானது ஏனைய கல்வி நிர்வாகிகளுக்கு ஒரு சிறந்த வழிகாட்டலாகக் காணப்படுவதுடன், இன்றைய மாணவர்களின் நேர்சீரான நடத்தைக்கு அதுவே மிகவும் அத்தியாவசியமானதாகவும் திகழ் கின்றதென்பதை நாம் மறுக்க முடியாது. தனது கல்வி வரலாற்றில் பல புகழ்பூத்த சாதனையாளர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சார்ந் துள்ளதுடன், மறைந்த இரசாயனவியல் பேராசிரியர் திரு. மகேஸ்வரன் அவர்களும் திரு. அ.பஞ்சலிங்கம் அவர்களின் மாணவர் என்பதனை இவ்விடத்தில் பெருமையுடன் நினைவு கூருகின்றேன். மேலும் திரு.அ.பஞ்சலிங்கம் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்திற்கு தலைமை தாங்கியமை எமதுசங்கம் பெருமைபட வேண்டிய ஒரு விடயமாகும். தனது ஓய்வு காலத்தையும் கல்விப்பணி மற்றும் சமூக சேவையின்பால் செலவிடுவ தோடு, சிறுவர்களுக்கு ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தையும் உணர்த்திவருகின்றார். இவ்வாறானதோர் சிறந்தமனிதரைப் பாராட்டி இலங்கையிலும் உலக நாகடுகளிலும் பரந்து வாழும் கொக்குவில் இந்து வின் 91 ஆம் ஆண்டு (க.பொ.த.உயர்தர) மாணவ அணியினர் வெளி யிடும் 'பஞ்சநதி' யெனும் சாதனை பாராட்டும் இம்மலர் வெளியீடு சிறப்புற உளமார வாழ்த்துகின்றோம்.

கலாநிதி திரு.பொ. ஐங்கரன்
தலைவர் - யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்.

### வாழ்த்துச் செய்தி

வடஇலங்கையின் புகழ்பூத்த கல்வியாளராகவும் , யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகிய பிரபல பாடசாலைகளின் அதிபராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்ற திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் சாதனைகளைப் பாராட்டியும் அவரின் ஆளுமையைச் சிறப்பித்தும், கொக்குவில் இந்துவின் 91 ஆம் ஆண்டு (க.பொ.த உயர்தர) மாணவ அணியினரால் வெளியிடப்படும் பஞ்சநதி எனும் இச் சேவை நயப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிகுந்த மனநிறை வடைகின்றேன். இன்றுள்ள கல்வியாளர்களுக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்பவராக திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் காணப்படுவதுடன் ஒரு சிறந்த நிர்வாகியாகவும் விளங்குகின்றார். நிர்வாகச் செயற்பாடுகளில் எழக்கூடிய சிக்கல்களை நாசூக்காகவும், நிதானமாகவும் கையாளவதில் திறமைவாய்ந்த இவர் போர்க்காலங்களிலும் தான் பணிபுரிந்த பாடசாலைகளின் கல்வித்தரம் குன்றாது மாணவர்களின் செம்மையான நடத்தை மற்றும் கல்விசார் நடவடிக்கைகளுக்கு ஊக்கம் கொடுத்து அப்பாடசாலைகளைத் திறம்பட வழிநடத்திச் சென்றார்.

இவரின் சிந்தனையில் உதித்த சிறுபிள்ளைகளுக்கான ஆங்கில மொழி மூலமான முன்பள்ளிகள் இன்றும் இவரது ஆளுமையையும், தூர நோக்கையும், நிர்வாகத் திறன்களையும் பறைசாற்றி நிற்பதோடு வடபுல மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதனையும் காணமுடிகின்றது. பல பிரபலமான கல்விமான்கள் எமது பிரதேசத்தைப் பிரதிநிதிப்படுத்துவதினாலும் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் புகழ் வானுயர்ந்து நிற்பதன் காரணம் அவரால் சிறந்த முறையில் வழிகாட்டப்பட்ட ஆசிரிய மற்றும் மாணவப் பரம்பரைகளுமேயாகும். இதனடியாகவே இலங்கையிலும், உலக நாடுகளிலும் பரந்துவாழும் கொக்குவில் இந்துவின் 91 ஆம் ஆண்டு (க.பொ.த உயர்தர) மாணவ அணியினர் இச்சேவை நயப்பு நிகழ்வையும், 'பஞ்சநதி' யெனும் சாதனை பாராட்டும் மலர் வெளியீட்டையும் இன்று ஒன்றுசேர நிகழ்த்துகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் எனும் வகையில் இந்நூல் வெளியீட்டுவிழா சிறக்கவும், திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் பணிகள் மென்மேலும் மேம்படவும் எல்லாம் வல்ல பரமேஸ்வரன் அருள்புரிய உளமார வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் இ.விக்னேஸ்வரன்
துணைவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### வாழ்த்துச் செய்தி

கொக்குவில் இந்துக்கல்லூரியின் 91 ஆம் ஆண்டு பழைய மாணவர்கள் ஏற்பாட்டில் எமது கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களை கௌரவித்து நடத்தப்படுகின்ற "அமுத விழாவும் பஞ்சநதி மலர் வெளியீடும்" நிகழ்வினை காண்பதில் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளை பெருமை கொள்கிறது.

ஒரு ஆசான் தான் சார்ந்த கிராமத்திற்கும் தான் சார்ந்த பாடசாலைக்கும் எவ்வாறு சேவையாற்ற வேண்டுமென்பதில் எம் எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியை எடுத்துக்காட்டி நின்றவர் எமது முன்னை நாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள். எமது கல்லூரியின் மாணவனாக, ஆசிரியராக, அதிபராக என அவர்கள் கல்லூரிக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியது. அவர் இளைப்பாறி பல வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கல்லூரியின் பழையமாணவர் சங்கத்துடன் இணைந்தும் ஏனைய பல வழிகளிலும் கல்லூரியின் வளர்ச்சியில் இன்றும் அவர் மிகவும் சுறுசுறுப்புடன் ஈடுபட்டு வருகிறார். மேலும் கல்லூரியின் எந்த ஒரு நிகழ் வாகினும் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் பிரசன்னம் நிச்சயமானதாக இருக்கின்ற அதேவேளை குறிப்பிட்ட நேரகாலத்திற்கு வருகை தருவது அவரின் ஒரு தனிச்சிறப்பம்சமே. அவ்வாறான ஒரு சிறந்த ஆசானை இவ்வாறானதோர் நிகழ்வு மூலம் கௌரவிப்பது என்றென்றும் போற்றுதற்குரியதே.

எமது கல்லூரியின் செயற்பாடுகளுக்கு அப்பால் தனது வயது நிலையையும் பொருட்படுத்தாது யாழ் மாவட்ட சின்னஞ் சிறார்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மிகச் சிறந்ததோர் சிறுவர் பாடசாலைகளை (Kids Park) நடத்தி செல்கின்ற அதேவேளை பின்தங்கிய பகுதிகளில் வாழும் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக ஏனைய பல சமூக நிறுவனாங்களுடன் இணைந்து சிறுவர் பாடசாலை ஆசிரியர்களின் வேதனம் வழங்கல்கள் முதலான பல கல்விசார் உதவிகளை முன்னின்று ஆற்றி வருகின்றார்.

இவ்வாறானதொரு கல்விமான் மேலும் பல காலம் நீடூழி வாழ்ந்து இன்னும் பல சேவைகள் எமது கல்லூரிக்கும் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்கும் ஆற்ற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, காலமறிந்து இவ்வாறான ஒரு அரிய நிகழ்வினை ஒழுங்குபடுத்திய 91 ஆம் ஆண்டு பழைய மாணவர் அணியினருக்கும் எமது நன்றியுடன் கூடிய வாழ்த்துக் களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ.சிவஷங்கர்
செயலாளர், OSA (கொழும்பு கிளை)

### அமுதவிழா 'பஞ்சநதி' வெளியீடு சிறப்புறட்டும் !

பேச்சு சுருக்கம் ! தொடர் பணியோ பெரிது! இந்த அரிய செயற்பாடுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள் ஒவ்வொரு துறையிலும் மிகச்சிலரே உளர். அரை நூற்றாண்டுக்கு மேலாக தன்னை கல்லூரித்தாயுடன் தன் வாழ்வை பிணைத்துக் கொண்டவர் எமது மதிப்புக்குரிய திரு. அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்கள். எமது கல்லூரித் தாயின் மாணவனாக, ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக, பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக, நம்பிக்கை நிதியத்தின் தலைவராக தொடர்ந்து கல்லூரிச் சமூகத்துடன் தொடர்ந்து பயணிப்பது என்பது எல்லோருக்கும் அமையப் பெறுவ தில்லை. அந்தப் பாக்கியம் எமது அதிபருக்கு மட்டுமல்ல அவருடன் இணைந்து பயணிப்பது ஒட்டுமொத்த கொக்குவில் இந்துச் சமூகத்துக்கும் கிடைக்கப் பெற்ற வரம் !

எமது அதிபரது அமுதவிழாவில் அவர் கடந்து வந்த பாதையை மீட்டுப்பார்ப்பதென்பதும், அவர் வாழும் பொழுதே "பஞ்சநதி" யாக மிளிரவைப்பதும் எமது கல்லூரிச் சமூகத்தின் வரலாற்றுக்கடமையாக கருதுகின்றேன். அவ்வரிய பணியை கல்லூரியின் 91 ஆம் ஆண்டு உயர்தர மாணவர் அணியினர் இணைந்து சாத்தியமாக்கியதற்கு எமது கனடா பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் பாராட்டுகின்றோம்.

கொக்குவில் இந்துவின் மைந்தனாக சிறுபிராயத்திலிருந்தே சான்றோரின் சூழலிலும், பார்வையிலும், வழிகாட்டலிலும் தன்னை வளர்த்துக் கொண்டது மட்டுமல்ல அவர் சார்ந்த கல்வி – ஆசிரிய சமூகத்துக்கு வழிகாட்டியாக, சிறந்த கல்லூரி நிர்வாகியாக, சிறந்த இராஜதந்திரியாக திகழ்ந்திருக்கின்றார். எமது அதிபர் வயதில் முதிர்ச்சியடைந்து இருந்தாலும் தொடர்ந்தும் மாணவர் சமூகம் சார்ந்த விடயங்களின் செயற்பாடுகளில் 80 ஆம் ஆண்டுகளில் இருந்த துடிப்பும் - கண்டிப்பும், பழைய மாணவர்களை தன் வசப்படுத்தும் வசீகரமும் ஆளுமையும் அவரில் இன்றும் காண்கின்றோம். என்றும் மதிப்புக்கும் மரியாதைக்கும் கௌரவத்துக்குமுரிய எமது அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் நீண்ட ஆயுளுடனும் சுகதேகியாக தொடர்ந்து எமது கல்லூரிச் சமூகத்துடன் பயணிக்க இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு அமுதவிழாவும், பஞ்சநதி வெளியீடும் சிறப்புற வட அமெரிக்காவில் வசதியும் கல்லூரியின் குடும்ப அங்கத்தவர்கள் சார்பிலும், எமது சங்கத்தின் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

பொ.இரவிச்சந்திரன்
தலைவர், OSA (Canada)

### Message From the President

I am pleased and it's great privilege on delivering my message and best wishes on behalf of our association to "Panchanathy" publication and ceremony to our former Principal Mr.Panchalingam.

We have had immense pleasure to invite Mr.Panchalingham as our Chief Guest to Vasantham back in July 2018. All of his past students had met him as A/L Batches and a number of gatherings were arranged to meet him in groups. Mr.Panchalingham took this opportunity to explain about our school, current education situation in the North as well as the East and supports needed from our old student's association to rectify some of the issues. In addition to this he has used this chance to raise funding for his Pre – School kids Programme. Ever year over 600 children are getting benefits from his initiative. Mr.Panchaligham has managed to raise over. 10,000 from his pupils for this programme.

All the above reflecting about trust. dedication and his services to school and children. Mr.Panchalingham is a person who has dedicated his entire life with the school, all day every day, a person who came to school at 7.30 am and leave at 8.00 pm. It is so hard to find a person in this modern world with this much commitment to a school in his period as a teacher, Vice – Principal then as a Principal. After his retirement, his contribution to our community by introducing a kids programme is unbelievable.

As an old student's Association, we have responsibilities and love to follow his path to continue to develop our school and the community. Mr.Panchalingham laid an amazing foundation during his period to build a successful educational establishment, we have every confident to make this as a success. All along the way, I am proud to say Mr.Panchalingham was my Principal during my period at the school.

On behalf of KHCOSA – UK, I wish to take this opportunity. thank Mr.Panchalingham for his services to our school during his period and God bless for his current Pre – School kids programme. We pray for his long life and heath and for his continuous serves to our community.

**Dr.Karunakaran**
**President, OSA (UK).**

### பஞ்சநதி போன்ற புனிதரே வாழ்க!

கொக்குவில் இந்துமாநதியின் பிரம்மனாய் பூத்தவரே!
மாணவர்கள் நாம் சிங்கமாய் வீறுகொள்ளவிளக்காமமலர்ந்தவரே !
இன்றைய இவர்கள் விடல் என்றசாணக்கியம் அறிந்தவரே!
புவனம் ஆழும் கல்லூரி மைந்தர்களின் மனங்களில் ஆதியாய் நிற்பவரே .வா!
வெள்ளை ஆடை .!
பின்னியகரங்கள் !
அறிவில் மட்டும் – அல்ல ! கண்களிலும் கூர்மை !
ஆத்திரம் இல்லா...
ஆவேசம் கொள்ளா...அதிபர்த்துவத்துவத்தின் வித்தகரே..!
மாணவர் மனங்களைஅளவிடும் ஆழ்மனஉள்ளம்...!
மேன்மைகள் கண்டுமகிழ்ந்திடும் வார்த்தை...!
மௌனங்கள் காத்துஆனந்தம் தந்திடும் நேசமே...!
நேரம் தவறாமையின் காலக்களிதயே...!
குறைவாகப் பேசும்
சொல்லின் செல்வரே...!
காலைப்பிரார்த்தனைக்கே
அர்த்தங்கள் கொடுத்தநிர்வாககளஞ்சியமே!
சமூகத்தின் சங்கடங்கள் போக்கும் ஞானச்சூரியனே!
நீங்கள் ஆண்டுகள் நூறு அவனியில் வாழ்ந்து
சத்திரசாதனைகள் கண்டு இன்னும் பெருவாழ்வுவாழ்க...! வாழ்கவே..!

இன்தமிழ் இனியன் செ. ஸ்ரீநிவாசன்
பழையமாணவன்

விழாக்குழு
கொ.இ.க 1991 ஆம் அணி மாணவர்கள்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 19 . 04 . 1930

இறைவன் மடியில் 11 . 12 . 2018



அமரர்

## லில்லிமேரி பிரான்ஸிஸ் பிள்ளை

நல்லதொரு போராட்டத்தைப் போராடினேன்,
ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தை காத்துக் கொண்டேன்
(2 திமோத்தியர் 4:7)

கண்ணீரில் மலர்மாலை அனுப்பிவைத்தோம்
அம்மா உன் பொன் மார்பில் விழுததுவோ
உங்கள் பொன்னான இதயத்தை புளிந்தெடுத்த
புலம்பொலி நீர் கேட்டுத்தவித்திருப்பீர் !



அம்மாச்சி !
எத்தனை சுமைகள் வேதனைகள் போராட்டங்கள்
இழப்புக்கள் வந்தபோதும் மனம் தளரா
உறுதியுடனும் விசுவாசத்துடனும் வாழ்ந்த அம்மா

தாய்ப்பறவை தன் சிறகுகளால் தன் குஞ்சுகளை
பாதுகாப்பதுபோல் இறுதிவரை உங்கள்
பிள்ளைகளையும் அவர்களின் குடும்பத்தையும் கட்டிக்காத்து
அன்பையும் பண்பையும் ஊட்டி வளர்த்த அம்மாவே !
இன்று கூடு இழந்த பறவைகளாய் நாம் !

இன்று முதுமை எம்மிடம் இருந்து பிரிந்தாலும்
உங்கள் அன்பை பிரியாமல்
உங்கள் நினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

(CS 22481)(14,17)

# மரண அறிவித்தல்



## திருமதி இராசலட்சுமி நாகராசா

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், பாரதிவீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி நாகராசா 08.01.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - தங்காள் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னதம்பி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், நாகராசாவின் மனைவியும், பிரபு (பிரான்ஸ்), பிறேம் (டென்மார்க்), பிரகாஷ் (பிரான்ஸ்), பிரபா (பிரான்ஸ்), பிரஷாந் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும், தாரணி, கோமதி, கார்த்திகா ஆகியோரின் மாமியும், அஷாந், அர்ஷந் ஆகியோரின் பேர்த்தியும், லீலாதேவி, தர்மபூபதி, வேலாயுதம், தவமணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் சண்முகராஜா, தியாகராஜா, காலஞ்சென்ற ஸ்ரீராஜா, ஜவராணி, லலிதாராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைகால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பாரதி வீதி,**
**கோண்டாவில் மேற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/22489)(11,17)

**கணிதம், வரலாறு தரம் 06 - 11 வகுப்புக்கள்**

தேசிய, மாவட்ட ரீதியில் சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் ஆசிரியர். மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
(கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்)

**078 491 4259** (CS 22484) (14,17)

**பணிப்பெண் தேவை**

யாழ்.நகரில் உள்ள வீடொன்றில் தங்கி நின்று வேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை.

**076 564 6282** (CS22487)(11,17)

## முகாமில் நாமிருந்த வேளை வெள்ளத்தில் நீச்சல் அடித்து உதவிபுரிந்த அரச அதிகாரிகளுக்கும் ஏனைய உறவுகளுக்கும் மனமார்ந்த நன்றிகள்

கடந்த 22.12.2018 அன்று ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்தின் போது எல்லாம் இழந்து ஏதிலிகளாய் பாடசாலையில் தஞ்சம் அடைந்த வேளை 22.12.2018 தொடக்கம் 28.12.2018 வரை சமைத்த உணவை நேர்த்தியாக வழங்கி அனைத்து நலன்களையும் சிறப்பாக செய்த பிரதேசசெயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் குறிப்பாக எமது கண்டாவளை பாடசாலை நலன்புரி நிலையத்தில் இரவு, பகல் பாராது நின்று கடமை புரிந்த கிராமசேவையாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் இவற்றோடு எமது இன்னலை அறிந்து பலவழிகளிலும் உதவிப் பொருள்கள் வழங்கிய புலம்பெயர் உறவுகள் மற்றும் இலங்கை வாழ் உறவுகளுக்கும் கண்டாவளை மக்கள் சார்பில் உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கண்டாவளை மக்கள் சார்பாக மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**கண்டாவளை.**

(AKN 637) (14,17)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் வைத்திய கலாநிதி

## செல்லத்துரை பத்மநாதன்

(குழந்தை நல வைத்திய நிபுணர்)



கடந்த 14.12.2018 காலமான எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 13.01.2019 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற வுள்ளதால் இந்நிகழ்வு களிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"நவவாசம்"
7ஆம் மைல் ஒழுங்கை, மல்லாகம்.

(CS/22386)(11,17)

**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் திருமதி

## யோகேஸ்வரி சிவராசா

தோற்றம்
28.03.1954

மறைவு
13.12.2018



கடந்த 13.12.2018 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் திருமதி யோகேஸ்வரி சிவராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.01.2019) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அராலிமத்தி, வட்டுக்கோட்டை.

(cs/22480)(11,17)

**குடும்பத்தினர்.**

# பொன்னாங்கண்ணி கீரை சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்



கீரை வகைகளில் சிறந்தது என பொன் னாங் கண்ணி கீரை அழைக்கப்படுகிறது.
இதன் மருத்துவ பலன்கள்:
உடல் எடை குறைய உடல் எடை குறைய சரியான ஆரோக்கியமான டயட் அவசியம். இதற்கு பொன்னாங்கன்னி கீரை உதவுகிறது.
வாய் துர்நாற்றம் போக வாயில் இருந்து வரும் துர்நாற்றம் நமது பலவீனமாக அமையும். பொன்னாங்கன்னி கீரையை தொடர்ந்து சாப்பிட்டுவர, வாய் துர்நாற்றம் போகும்.
சுறுசுறுப்பாக செயல்பட பொன் னாங்கண்ணி கீரையைச் சாப்பிடுவதால், இதயம் மற்றும் மூளை புத்துணர்வு பெறுகிறது. இதன்னால் நாம் சுறு சுறுப்பாக செயல்பட முடிகிறது.
கண் பார்வை பொன்னாங்கன்னி கீரையை தொடர்ந்து 27 நாள்கள் சாப்பிட்டு வந்தால் கண் பார்வை நன்றாக தெரியும்.
குருதி சுத்தமாக பொன்னாங் கண்ணி கீரையுடன் பாசிப்பருப்பு, சின்ன வெங்காயம், சீரகம், பூண்டு, மிளகுத்தூள் சேர்த்து வேக வைத்து மசியல் செய்து சாப்பிட்டு வந்தால் அசுத்த குருதி சுத்தமாகும்.
சருமம் பொன்னிறமாக மாற பொன் னாங்கன்னி கீரை தங்கம் போன்ற சருமத்தைதரும் ஆற்றல் கொண் டது. இந்த கீரையை சாப்பிட்டால் அழகு மேம்படும்.
வீட்டிலேயே வளர்க்கலாம் பொன் னாங்கண்ணி கீரையின் தண்டு களை கிள்ளி மண்ணில் ஊன்றி வைத்தாலே கீரை செடி நன்றாக வளர்ந்து விடும். இதனை நீங்கள் வீட்டிலேயே வளர்க்கலாம்.

## மரண அறிவித்தல்கள்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 31 | | 09 |
| 01 | | 01 |
| 1949 | | 2019 |



### முருகேசு சிதம்பரப்பிள்ளை

*(முன்னாள் ப.நோ.கூ சங்க செயலாளரும் பணிப்பாளர் சபை உறுப்பினரும் யாழ். மாவட்ட துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்க உறுப்பினரும் உரும்பிராய் இராமகிருஸ்ண மிஷன் நூலக பொறுப்பாளரும்)*

அராலி மத்தி , வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிதம்பரபிள்ளை (09.01.2019) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு -அமுது தம்பதிகளின் கனிஷ்ட மகனும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வநாயகியின் அன்புக் கணவரும் சிஜாமினி (லண்டன்), சிவதர்சன், கிருஸ்ணபவாணி, (பகுதிநேர ஆசிரியை - இராமகிருஸ்ண மிஷன் உரும்பிராய்) கோகுலவாணி (ஆசிரியை - Royal Institute International School, Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிமலனின் (லண்டன்) அன்பு மாமனாரும் தீபிகா, பிரித்திகா ஆகியோரின் அன்புப்பேரனும் நடராஜா, காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2019)ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி மத்தி**
**வட்டுக்கோட்டை**

**தகவல்: குடும்பத்தினர்**
**0778623310, 0776582952**

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!*

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 | | 10 |
| 04 | | 01 |
| 1944 | | 2019 |



### கணபதிப்பிள்ளை வடிவேலு

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காளிகோயிலடி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வடிவேலு கடந்த (10.01.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - எள்ளுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், கௌரி, சிறிதரன், கயேந்திரன், வியேந்திரன், வனயா, குமரேந்திரன், றகீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகனதாஸ், றாகினி, சுபாகஹி, ஸ்ரீமீரா, மோகனதாஸ், கமலராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுர்சனா, ஜானுகா, கிசோத்மன், யதுகேசன், லிதிகேஸ், சாகித், லிசானா, கவினாஸ், லக்சுஜி, அனிஸ்கா, விஸ்மிகா, அர்விகா ஆகியோரின் அன்புப் பேரனும், மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், இரத்தினம் மற்றும் கனகமலர், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் துரைசிங்கம், இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, கமலாதேவி, விக்கினேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோயிலடி,**
**உடுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/23643/11/15/17)


மக்களின் நன்மதிப்பை பெற்ற
**றோயல்**
**சுத்தமான தேன்**
தேனின் தரம் ITI இல் பரிசோதிக்கப்பட்டு நல்லது என உறுதிப்படுத்தப்பட்டது.
றோயல் தேன் என கேட்டு வாங்குங்கள்
PACKED BY: ROYAL Industries Jaffna. ®




®
சந்தைப்படுத்துவோர்:
**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 2567


## பெயர்மாற்றம்



நாவாந்துறையைச் சேர்ந்த R. KAJALINI (ர. கஜாளினி) ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து R. TABITHA MIRACLYN (ர. தபிதா மிராகிளின்) எனப் பெயர் மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் அறியத் தருகிறேன்.

(CS 22494/15/17) **ர.தபிதா மிராகிளின்**

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி த.சிவநாதன்** அவர்களின் அன்புத்
தந்தை
**நல்லதம்பி முத்துக்கிருஸ்ணன்**
*(முன்னாள் ப.நோ.கூ.ச.முகாமையாளர் - வேலணை)*
அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
**பாடசாலைச் சமூகம்**
**யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை.**

(CS 22478)(14/17)



## மரண அறிவித்தல்



### திருமதி. வெற்றிவேலு கமலேஸ்வரி

நல்லூர் கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.906 பருத்தித்துறை வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வெற்றிவேலு கமலேஸ்வரி அவர்கள் நேற்றுமுன்தினம் (10.01.2019) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சபாரட்ணம்- கனகாம்பிகை தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலும்மயிலும் - இரத்தினம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் - வடகிழக்கு மாகாணம்), திருமதி யோகேஸ்வரி, திருமதி.சத்தியனேஸ்வரி (ஜேர்மனி), மகேந்திரன் (ஓய்வுபெற்ற முகாமையாளர்- மக்கள் வங்கி, நுவரெலியா), திருமதி.திலகராணி (ஆசிரியர் - மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுரேஸ்பாபு (கனடா), வேல்விழி (ஆசிரியர் - யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம்), சதீஸ்பாபு (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வேணுகா (கனடா), செல்வசீபன் (உதவி ஆசிரியர் - யாழ். தினக்குரல்), தர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பீரவீனன், அட்சயன், சஞ்சீவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**906, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்**
**021 222 6713**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

# மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

★காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
★காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
★பெற்றோர் விருப்பமின்மையா?
★கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
★வேலைத்தளத்தில் பிரச்சினையா?
★காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?

- இரகசியம் பேணப்படும்.
- நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்

**வேலு ராஜேஸ்வரி** அவர்கள்
மாத்தளை.
**0778 432 602**
என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.
வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு:- **0094 7693 70045**


# மரண அறிவித்தல்

## இராஜேந்திரன் சிவஸ்கந்தா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரன் சிவஸ்கந்தா நேற்று (11.01.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து இராஜேந்திரன் - கமலாம்பிகை தம்பதிகளின் புதல்வனும், சொர்ண ரூபினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மயூரந்தன் மற்றும் செந்தூரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்கந்த லீலா, லீலாமனோகரி, ஹரிவசனி, வசந்தசேனன் (சட்டத்தரணி), வசந்தகுமார் (இளைப்பாறிய அதிபர்), திலகினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2019) சனிக்கிழமை மாலை 4 மணியளவில் கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/22476)01.17

தகவல்: சகோதரர்கள்

021 225 5161, 077 399 8146

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை – சுன்னாகம்
# அட்டவணைப்படுத்தப்படாத பதவியணி வெற்றிடங்களை நிரப்புதல் - 2019

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்கு 2013.01.01இல் அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கு அமைவாகவும், பிரதம செயலாளர், வடமாகாணம் அவர்களின் NP/01/02/03/01/14 ஆம் இலக்க, 2018.09.25 ஆம் திகதிய அனுமதி கடிதத்திற்கு அமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களை உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமை உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | பதவிகள் | வெற்றிடம் |
|---|---|---|
| 01 | நூலக பரிசாரகர் தரம் III | 01 |
| 02 | வேலை/வெளிக்களத் தொழிலாளி தரம் III | 03 |
| 03 | சுகாதாரத் தொழிலாளி தரம் III | 02 |

❖ **மாதாந்த சம்பளஅளவுத்திட்டம்**

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 03/2016ற்கு அமைவான, சம்பளத் தொகுதி **(PL1-2016)** இற்கு ஏற்ப சம்பள அளவுத்திட்டமானது **(24250 – 10 x 250– 10 x 270 – 10 x 300 – 12 x 330 – 36410)** ஆகும். (ரூபா 25000 சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல்வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை–II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்

❖ **கல்வித்தகைமை :**

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகளுடன் ஒரு அமர்வில் 05 பாடங்கள் சித்தியடைந்தும், ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்தும் இருத்தல் வேண்டும்.

❖ **பொது நிபந்தனைகள்**

1. இப்பதவிகள் நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதும் ஆகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் 03 வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

❖ **அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களை கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர்வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் உடன் முந்திய 5 வருட காலம் தொடர்ச்சியாக நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

❖ **தெரிவுசெய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

❖ **விண்ணப்பிக்கும் முறை**

1. வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா 100.00+(VAT 15%, NBT 2%) செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் மீள அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்புதிட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரியால் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னராகவோ, அல்லது நியமனத்தின் போதோ பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

❖ **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

1. விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தினை தமது பிரிவுக்கான கிராம உத்தியோகத்தரின் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் அவசியமன்று.

❖ **விண்ணப்ப முடிவுத் திகதி**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவங்கள் 2019.01.28ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

தி.சுதர்சன்,
செயலாளர்,
வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை – சுன்னாகம்
# ஒப்பந்த அடிப்படையிலான கனரக உபகரண இயக்குநர் (Heavy Equipment Operator) பதவியணிக்கான வெற்றிடம் நிரப்புதல் - 2019

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/NP/0304 ஆம் இலக்க, 2018.03.27 ஆம் திகதிய கடிதம் மூலம் வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான கனரக உபகரண இயக்குநர் பதவியணியில் உள்ள வெற்றிடத்தினை பிரதம செயலாளர், வடமாகாணம் அவர்களின் NP/01/02/03/01/14 ஆம் இலக்க 21.11.2018 ஆம் திகதிய அனுமதி கடிதத்திற்கமைய உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி. இல | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கனரக உபகரண இயக்குநர் (ஒப்பந்த அடிப்படை) | 01 |

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி முற்றிலும் ஒப்பந்த அடிப்படையிலானது.
2. தங்களது பதவி 1 வருட ஒப்பந்த காலத்தைக் கொண்டதாகும்.

**அடிப்படைத்தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் உடன் முந்திய 5 வருட காலம் தொடர்ச்சியாக நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
3. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
4. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். சபையால் தெரிவு செய்யப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதுடன் கல்வித்தகைமை, தொழில் அனுபவம், வேலை மனப்பாங்கு என்பவற்றுக்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
5. விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் ரூபா 100.00+(VAT 15%, NBT 2%) இனைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் பொய்யானது என நியமனத்திற்கு முன்னராகவோ, பின்னராகவோ தெரிய வரும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்
6. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவு திகதி 2019.01.28 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்குப்பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**கல்வித்தகைமைகள்:**

1. கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகளுடன் ஒரு அமர்வில் 05 பாடங்கள் சித்தியடைந்தும், ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்தும் இருத்தல் வேண்டும்.
2. பதவி தொடர்பான அரச தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழிற் தகைமைச் சான்றிதழ் ஆகக்குறைந்த மட்டம் 4 அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தொழிற்பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்குக் குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை (Class of Vehicle C,CI) விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று வருடங்களிற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
4. மோட்டார் வாகன சாரதியாக மூன்று வருட அனுபவத்திற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
6. விண்ணப்பதாரி இரவு பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
7. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவினைக்கொண்டிருத்தல் வேண்டும்.

**மாதாந்த சம்பளம்**

மொத்த மாதாந்த படி ரூபா 32,891.00 மாத்திரம் வழங்கப்படும் வேறு எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

11.01.2019

திரு.தி.சுதர்சன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.




**மேடம்:** செயல்களில் தியாக குணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபார நடைமுறையில் இருந்த குறுக்கீடு விலகும். உற்பத்தி விற்பனை செழித்து ஆதாய பணவரவு பெறுவீர்கள்.

**இடபம்:** எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். புதிய செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. நிலுவைப்பணம் வசூலாகும்.

**மிதுனம்:** தேவைகளை பூர்த்தி செய்ய எண்ணம் வளரும். உறவினரின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சியில் தாமதம் ஏற்படலாம்.

**கடகம்:** முக்கியமான செயலை மறந்துவிடுவீர்கள். குடும்ப உறுப்பினர் நினைவுபடுத்துவர். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறுகளை சரி செய்வீர்கள்.

**சிங்கம்:** சிரம சூழ்நிலையை திறமையுடன் சரி செய்வீர்கள். சாமர்த்தியத்தை நண்பர் பாராட்டுவார். தொழில், வியாபாரம் செழித்து தாராள பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** லட்சிய மனதுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**துலாம்:** சிலர் தந்த வாக்குறுதிக்கு மாறாக செயல்படுவர். சுயகவுரவம் பாதுகாக்க வேண்டும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய முயற்சி மேற்கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** எந்த செயலையும் பரிசீலனை செய்து நடத்தவும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற நண்பரால் உதவி உண்டு. புதிய இனங்களில் செலவு ஏற்படலாம்.

**தனுசு:** வெகுநாள் தவம் இனிதே நிறைவேறும். உறவினர் நண்பர் பெருமையுடன் வாழ்த்துவர். தொழில், வியாபாரம் செழிக்க அதிக அளவில் பணிபுரிவீர்கள்.

**மகரம்:** பொது இடங்களில் எவரிடமும் வாக்குவாதம் பேச வேண்டாம். நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும்.

**கும்பம்:** எண்ணமும் செயலும் சிறந்து அதிக நன்மை தரும். பலரும் அன்பு பாராட்டுகிற புதிய சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும்.

**மீனம்:** நண்பரின் செயலில் குறை காண வேண்டாம். உடல் ஆரோக்கியம் பேணுவதால் செயல்களில் ஆர்வம் வளரும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.




# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | 9 | 6 | | | 2 |
| 2 | | | | | | | 1 | |
| | | 6 | 7 | 2 | | | | 3 |
| | | 1 | | | 8 | | 4 | |
| 7 | 9 | | | | | | 8 | 5 |
| | 4 | | 2 | | | 1 | | |
| 9 | | | | 4 | 3 | 7 | | |
| | 2 | | | | | | | 8 |
| 8 | | | 9 | 1 | | | | 4 |

## நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 3 | 9 | 6 | 1 | 8 | 5 | 2 |
| 6 | 9 | 8 | 3 | 5 | 2 | 7 | 1 | 4 |
| 1 | 2 | 5 | 8 | 4 | 7 | 9 | 6 | 3 |
| 2 | 8 | 9 | 4 | 1 | 3 | 5 | 7 | 6 |
| 5 | 3 | 1 | 7 | 8 | 6 | 4 | 2 | 9 |
| 4 | 6 | 7 | 2 | 9 | 5 | 3 | 8 | 1 |
| 9 | 1 | 4 | 5 | 2 | 8 | 6 | 3 | 7 |
| 8 | 7 | 6 | 1 | 3 | 9 | 2 | 4 | 5 |
| 3 | 5 | 2 | 6 | 7 | 4 | 1 | 9 | 8 |

# தள்ளிப்போகும் காஞ்சனா –3




ராகவா லாரன்ஸ் இயக்கத்தில் திகில் கலந்த நகைச்சுவைப் படமாக கடந்த 2007ஆம் வெளியாகிய படம் 'முனி'.

அதனைத்தொடர்ந்து 4 வருடங்களுக்கு பிறகு 'முனி' படத்தின் இரண்டாவது பாகமாக `காஞ்சனா' வெளியாகி மெகா வெற்றி பெற்றது. இதன் மூலம் ராகவா லாரன்ஸ் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து 'காஞ்சனா 2' படமும் வெளியாகி வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில், 'காஞ்சனா' படத்தின் மூன்றாவது பாகம் தற்போது உருவாகி வருகிறது. இதில் `முனி' படத்தில் லாரன்ஸ் ஜோடியாக நடித்த வேதிகா, பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் பிரபலமாகி இருக்கும் ஓவியா நாயகிகளாக நடிக்கின்றனர். மேலும் நிகிதா, கோவை சரளா, ஸ்ரீமன், தேவதர்ஷினி, கபீர் துஹான் சிங், மனோபாலா, சத்யராஜ், கிஷோர் உள்ளிட்ட பலரும் நடித்து வருகின்றனர்.

விறுவிறுப்பாக நடந்து வந்த படப்பிடிப்பு தற்போது முடிவுக்கு வந்துவிட்டதாக தகவல் வெளியாகி இருக்கிறது. படத்தை ஏப்ரல் 19ல் ரிலீஸ் செய்ய படக்குழு திட்டமிட்டுள்ளது. முன்னதாக படம் தமிழ் புத்தாண்டன்று ரிலீசாகும் என்று கூறப்பட்டது.




# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம்

(பூரணம்)



மாணிக்கப்பிள்ளையார் வீதி, வீமன்காமம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம் நேற்று (11.01.2019) இயற்கை மரணம் ஏய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (13.01.2019) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் தச்சன்காட்டு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

**மாணிக்கப்பிள்ளையார் வீதி. வீமன்காமம்.** நாகநாதர் செல்வராசா **0773621292**

## சிவசம்பு கனகசபாபதி

(ஓய்வுபெற்ற சுங்க திணைக்கள உதவிப் பணிப்பாளர்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு கனகசபாபதி கடந்த (10.01.2019) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற குணபூசணி அம்மாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பரராசசிங்கம் - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் கௌரி, அருந்ததி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆனந்தீஸ்வரன் காலஞ்சென்ற கைலாயநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற செல்லாபரணம், கௌரிஅம்மா, சரஸ்வதி பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கார்த்திகேசு, செல்லையா, சேர்திப் பெருமாள் ஆகியோரின் மைத்துனரும் ஜெயந்தன் - ஜானுவி, நிஷாந்தன், கனகசபாபதி, றஞ்சிற்காந்தன் - பிரியதர்ஷினி, சிவதர்ஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் அணிகாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2019) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 23, அம்மன் வீதி, கந்தர்மடம்.** **தகவல்: குடும்பத்தினர்.**



## திருமதி சிவலோகநாயகி சதாசிவம்

பருத்தித்துறை செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும் மூத்த தம்பியார் வளவு நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலோகநாயகி சதாசிவம் நேற்று (11.01.2019) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு செட்டியார் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி செட்டியார் - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சதாசிவத்தின் (இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2019) சனிக் கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மகள் - சி.சிவரஞ்சனி**

**மூத்த தம்பியார் வளவு, வதிரி கரவெட்டி.** **(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் - ஆரம்ப பிரிவு) பேரன் - சிறிஆனந்ததீபன் (கபிலன்)**

**0777434342, 0772487745, 0212262170**

# பெறுகைக்கான அழைப்பு (IFB-1)
# மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பான மாவட்டச் செயலகத்தின் **திணைக்களப் பெறுகைக் குழுவின் தவிசாளர்** கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மூடிய விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. இது **தேசிய போட்டி விலைக்கேள்வி முறையாக** இருந்தாலும் **வடக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு** மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வாகனங்களின் சட்டரீதியான உரிமையுடையவர்கள் மட்டும் கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும். **(தொடர் இல 01 மட்டும்)**
3. கேள்விகோரல் அறிவித்தலில் குறிப்பிட்ட **தொடர் இலக்கம் 2,3** என்பவற்றுக்கு CIDA தரம் கவனத்தில் கொள்ளப்படும் என்பதுடன் குறித்த தரத்துக்கு கேள்விகள் கிடைக்காதுவிடின் அல்லது கிடைக்கப்பெற்ற கேள்விகள் தகுதியற்றதாயின் அதற்கு மேற்பட்ட CIDA தரம் கருத்திலெடுக்கப்படும்
4. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்விபத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பெற்றுக் கொள்ளமுடியும். மேலும் ஒருவேலைக்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோகிக்கப்படும்
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :
021 221 4633/ 021 222 2233, 2234 (Ext. – 140) Facsimile – 021 222 3674
www.jaffna.dist.gov.lk
5. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய **( Non refundable fee)** அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை **மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தின் மூலம் (அறை இல – 42)**செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமிடத்து **14.01.2019 தொடக்கம் 25.01.2019 வரை மு.ப 9.00** மணியிலிருந்து **பி.ப 02.00** மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம், முடிவுத் திகதி 28.01.2019 முற்பகல் 10.30 மணி ஆகும்.
6. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித் தொகைகளுக்கான கேள்விப் பிணைப்பொறுப்பு (Bid Security) கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்பட்டு **தவிசாளர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **28.01.2019 மு.ப 10.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வி இலக்கத்தினையும் **(Bid ID)**, வேலை விவரத்தினையும் **(Description of work)** குறிப்பிடல் வேண்டும். கேள்விகள் சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் **உடனடியாகத் திறக்கப்படும்** என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படமாலே நிராகரிக்கப்படும்.
7. விலைக் கேள்வி செல்லுபடிக் காலம் **(Bid Validity)** கேள்வி இறுதித் திகதியிலியிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து **90** நாள்களும், கேள்விப் பிணைப்பொறுப்பு **(Bid Security)** கேள்வி திறத்தல் திகதியிலிருந்து **120 நாட்களும்** ஆகும்.
8. முற்கேள்விக் கூட்டம் **(Pre bid Meeting) 23.01.2019.** மு.ப 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.
9. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

| S. No | Bid ID. | Description of work | Estimated Amount (million) (Excluding VAT) | Business Registration, Specialty | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Valid Period Until | |
| 01 | JF/PROC/Bund /05/01/2019 | Demolishing Sand Bund & Clearing Bush | 8.26 | *(Constriction field/Machinery Hiring)* | 100,000 | 14.05.2019 | 2,500 |
| 02 | JF/PROC/Road 06/01/2019 | RE CONSTRUCTION OF PUNNIYAR VEETHY (INTERNAL ROADS )- Thellippalai | 5.90 | *C-7 (Road)* | 60.000 | 14.05.2019 | 2,000 |
| 03 | JF/PROC/Road 04/02/2019 | RE CONSTRUCTION OF PUNNIYAR VEETHY 1st JOINT ROAD (7HOUSING SCHEME ). Thellippalai | 1.04 | *C-9 (Road)* | 11,000 | 14.05.2019 | 1,000 |

நா.வேதநாயகன்.
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம்.

# வல்லாரைக்கீரையின் மருத்துவ குணங்கள



வல்லாரைக்கீரையை ஒரு கைப்பிடியளவு எடுத்து அரைத்து சாப்பிட்ட பின்னர், பால் குடிக்க மாலைக்கண் பாதிப்புகள் வராமல் தடுக்கப்படும். குழந்தைகள் இக்கீரையை தினமும் காலையில் சாப்பிட்டுவர, ஞாபகசக்தி அதிகரிக்கும். வல்லாரைக் கீரையுடன் சிறிது மிளகை சேர்த்து பச்சையாக மென்று சாப்பிட்டால் உடலில் உள்ள சூடு தணியும். வல்லாரை இலையை தினமும் பச்சையாக மென்று விழுங்கினால் குடல்புண், வாய்ப்புண், வாய் துர்நாற்றம்போன்றநோய்களில்இருந்துமுற்றிலும் விடுபடலாம்.


## Chemistry Personal Classes

Basic, inorganic, Organic, Physical, கடந்த கால வினாக்கள் ஆசிரியரால் B.SC (cey) M.SC (Cey) Chemistry கற்பிக்கப்படும். - 0750 460 555

## வாகன விற்பனை

TATA 207 கென்ரர் வகை வாகனம் விற்பனைக்குண்டு. (குறைந்த நாள் பாவனை)
தொடர்பு:- 077 763 0752 யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

நல்லூர் ஆலயத்திற்கு அண்மையாக தளபாடமிடப்பட்ட சமையலறை வசதியுடன்கூடிய வீடு வார, மாத, வாடகைக்கு வழங்கப்படும். - 070 586 8900

## தவறிவிட்டது

ஆனைப்பந்திக்கும்யாழ். பேரூந்து நிலையத்திற்கும் இடையில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை யாழ். போக்குவரத்து பஸ் வண்டியில் கணபதிப்பிள்ளை ஜெகதீஸ்வரன் என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பேஸ் 4000/= பணத்துடன் தவறவிடப் பட்டது. கண்டு எடுத்துத் தருவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்புக்கு - 0774576251

# அமுதவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்



"எழுத்து சமூகசேவைச் செம்மல் வாழி"

நம்பிக்கை நிதியத்தின் தலைவராய் எமக்கு வழிகாட்டியாய் இருக்கின்ற

## திரு.அ. பஞ்சலிங்கம்

(முன்னாள் அதிபர் - கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி)

அவர்கள் வடபால் இலங்கையின் இதயமாய் இருக்கின்ற இரு இந்துக் கல்லூரிகளின் முன்னாள் முதல்வர் தனது

## 83 ஆவது அகவையை

**08.01.2019 பூர்த்தி செய்ததையிட்டு அவரை மனமகிழ்ந்து வாழ்த்தி பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.**

எப்போதும் நிறைந்த உற்சாகத்துடன் செயற்படுகின்ற தன்மையும் தனக்கு கீழ் உள்ளவர்களை உரியவாறு வழிகாட்டுபவராகவும் புதிய வழிமுறைகளில் சிந்திக்கின்ற ஆற்றல் உடையவராகவும் இருந்ததன் விளைவாக 2002 ஆம் ஆண்டு அவருடைய அதிபர் சேவை அனுபவம் மழலைகளின் மேல் பக்கம் திரும்பியது. இதன் விளைவாக 27 இற்கும் மேற்பட்ட முன்பள்ளிகளை மேற்பார்வை செய்வதோடு உரும்பிராய் கிட்ஸ் பார்க் எனும் முன்பள்ளியை 2006 இலும் திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் எனும் முன்பள்ளியை 2009 இலும் ஸ்தாபித்து பல்லாயிரக் கணக்கான மழலைகளை சிறந்த பிரஜைகளாக்குவதற்கான அடித்தளமிட்டு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கான பெரும் சேவையை புரிந்த எங்கள் தலைவர் அவர்களை அவரது **கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் 91 ஆம் ஆண்டு அணியினரால் இன்று (12.01.2019) சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் கௌரவித்து நடத்தப்படும் அமுதவிழாவும் "பஞ்சநதி" மலர் வெளியீடும்** நிகழ்வு சிறப்புற நிகழ வாழ்த்துவதுடன் அதிபர் அவர்கள் மேலும் நூற்றாண்டு கடந்து சமூகத்திற்காய் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

__சகத்திரம் சந்தித்த சிகரம் தொட்ட__
__முதுசமே வாழ்க...!__

கொக்குவில் இந்து விருட்சத்தின்... கொலுகொம்பு
ஆனவரே...!
கொக்குவிலின் இதயத்தில்
கோயில் கொண்ட கடவுளரே...!
குடாநாட்டின் விடியலுக்கு
கலங்கரை விளக்கென...
கல்வி உலகைக் காட்டியவரே...!
கலங்காத மனம் கொண்ட
காலத்தை வென்று சரித்திரம் படைத்திட்ட.. தலைவரே
மாண்புமிகு அதிபரே... வாழ்க...!
நீங்காத சாதனைகள் வாழ்நாளில் கண்டவரே...!
நிறைவாழ்வகம் அமைத்து நிம்மதிகள்...
தேடியோருக்கு நன்மதிகள் தந்தவரே...!
குழந்தைகள் உலகை குதூகலமாக்க கிட்ஸ் பார்க் அமைத்து
புரட்சிகள் புரிந்தவரே வாழ்க...
ஆயிரமாயிரம் மாணவர் மனத்தில் மன்னராய் அமர்ந்து
ஆட்சி புரிந்திடும் தீரரே...!
அதிபர்த்துவத்தின் ஆச்சரியமானவரே... வாழ்க...!
வளர்மதியின் மாற்றத்திற்காய் மனம் எண்ணும்
சிந்தைகளை வழிகாட்டியாய்...
வைத்தவரே... தரணியிலே ஆண்டுகள் நூறு
தவசீமனவே வாழ்ந்து
தரமான சமூகத்தை நனவாக்க
உறுதியோடு உழைத்திடும்
சகத்திரம் கண்டிட்ட மகானே...
நீங்கள் வாழ்க! வாழ்வே...!

Best Wishes

Congratulations

**வாழ்த்துவோர்:**

கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்
உரும்பிராய் கிட்ஸ் பார்க்
திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
(JATE) Jaffna Academy For Tertiary Education (Board of Directors.)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும்
சனசமூக நிலையமும்,
வளர்மதி நிறைவாழ்வகமும்.

(c:32258) (13:17)



# நெய்
## சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்

பெரும்பாலான மக்கள், நெய் வெறும் கொழுப்புநிறைந்த பொருள். இதனை தினமும் சாப்பிட்டால் உடல் எடை கூடும் என எண்ணுகின்றனர்.

ஆனால் இது முற்றிலும் தவறு !!வாயு மற்றும் பித்த சம்பந்தமான நோய்களுக்கு, நெய் மிக முக்கியமான மருந்து. நெய்யை ஏன்நீங்கள்கட்டாயம்உணவில்சேர்த்துக் கொள்ள வேண்டும் என தெரியுமா?

நெய் எளிதில் ஜீரணமாகி விடும். சாப்பிட்டவுடன் அவை கொழுப்பாக உடலில் தங்குவதில்லை.

மாலைக்கண் மற்றும் கிட்டப் பார்வை, தூரப்பார்வை என பார்வை குறைபாடு இருப்பவர்கள் கட்டாயம் நெய்யை சேர்த்துக்கொள்வதால்கண்பார்வைதெளிவடையும்.

மலச்சிக்கலைப் போக்கும். வாத, பித்த, கபத்தின் சீற்றங்களைக் குறைத்து அதன தன்நிலையில்நிறுத்திநோய்களின்தாக்கத்தைத் தடுக்கும்.

பால், தயிர் போன்றவற்றில் ஒவ்வாமை இருப்பவர்கள் தாரளமாக நெய் சேர்த்துக் கொள்ளலாம். மேலும், நெய்யைசாப்பிடுவதால்நேர்மறைஎண்ணங்கள்அதிகரிக்கும் என ஆயுர்வேதம் கூறுகின்றது.


மக்களின் நன்மதிப்பை பெற்ற
றோயல்
சுத்தமான நெய்
நெய்யின் தரம் BAMBER & BRUIE இல் பரிசோதிக்கப்பட்டு நல்லது எனஉறுதிப்படுத்தப்பட்டது.
றோயல் நெய் என கேட்டு வாங்குங்கள்
PACKED BY: ROYAL Industries Jaffna. ®



சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 2567



கொழும்பு, ஜிந்துப்பிட்டி
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு
• பிராமணக் குருக்கள்
• பிராமண உதவிக் குருக்கள்
தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தங்குவதற்கு வீடு வசதி செய்து கொடுக்கப்படும்.
விண்ணப்பிக்கவேண்டிய முகவரி
98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.
Phone: 011 2433881 / 011 2431406 / 0777 261 777 / 0722 447606
Email : muruganginthupitiya@gmail.com



வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் வேலை செய்வதற்கு மேசன், மின் இணைப்பாளர்கள் உடன் தேவை.
தொடர்புகளுக்கு :
யாழ்வன் கட்டடப் பொருள்கள் வாணிபம்
இல.158, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (CS 22420) (04.17)
021 222 8286/ 076 826 4859



CEL ரசிகர்களுக்கு இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
இப்பொழுது திரையில்




வடக்கு, கிழக்கு

| | |
|---|---|
| Chelva Jaffna. 4.30am, 7.00am, 10.30, 2.30, 6.30, 9.30 pm | Majestic-Platinum Jaffna. 10.00, 1.00, 4.15, 7.00pm, 10.30pm |
| Raja 1 Jaffna. 10.30, 1.30, 4.30, 7.00pm, 9.30 pm | Vijaya Batticaloa. 10.30 am |
| Saraswathy Trinco. 10.30, 2.30, 6.30, 9.30 pm | G.K Cinema Kalmunai. 2.30, 9.30 |
| Sellam Premier Chenkalady. 10.00, 2.00, 6.00, 9.45 pm | Kibesh Mankadu. 10.30, 2.30, 6.30 pm |
| Saru Poin Pedro. 10.30, 2.30, 6.30, 9.30 pm | Shanthi Batticaloa. 10.30, 2.30, 6.30, 9.30 pm |
| Vasanthi Vavunia. 8.00am, 11.30am, 9.30 pm | Archana Trinco. 2.30, 9.30 pm |
| Cine Star Anurathapura. 7.00pm, 9.00 pm | |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்
Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)






சில சலுகைகள் மட்டுமே
உங்கள் கண்காட்சிக்கூடங்களை பதிவு செய்ய இப்போது அழைக்கவும்
RIZWAN +773 959 835
rizwan@saexhibitions.com
10TH EDITION
JITF 2019
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
ஜனவரி / January
10.00 am - 8.00 pm
Municipal Ground - Jaffna
PLATINUM SPONSOR INSEE CEMENT
GOLD SPONSOR Browns A Heritage of Trust
OFFICIAL PARTNERS



TCT MULTI TRADE CENTRE
TCT Multi Trade Centre
527, NavalarRoad,Nallur Jaffna
0212219813
தமிழர் திருநாளான பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கு
உங்கள் TCT யினால் முதன் முதலாக அறிமுகம் செய்யப்பட்ட பொங்கல் பொதி விற்பனையில்
வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப
1Kg, 2Kg, 3Kg
பொதிகளில்
அத்துடன் இலங்கையில் பிரசித்தி பெற்ற ALCOA பொங்கல் பானைகள், ஏனைய பானைகள் குறைந்த விலையில் மற்றும் தேவையான அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.



கையிருப்பு உள்ளவரை மட்டுமே.......
முந்துங்கள்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!
(IN 9068)(04.17)



போதையில் பிரசவம் பார்த்த தாதிகள்

# குழந்தையின் காலை வேகமாக இழுத்ததால் அறுந்தது தலை

ராஜஸ்தான்.ஜன.12

பிரசவத்தின்போது குழந்தையின் காலைப் பிடித்து வேகமாக இழுத்ததால் தலை அறுந்த நிலையில் குழந்தை வெளிவந்துள்ளது. இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் ராம்காரில் உள்ள அரச மருத்துவமனை ஒன்றில் நடந்த இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்சல்மார் மாவட்டம், ராம்காரைச் சேர்ந்தவர் திலோக்பதி என்கிற கர்ப்பிணித் தாய் ராம்காரில் உள்ள அரச மருத்துவமனையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். குறித்த மருத்துவமனையில் பிரசவத்துக்குப் பொறுப்பான பெண் மருத்துவரோ, பெண் தாதிகளோ இருக்கவில்லை. எனவே ஆண் தாதிகள் அந்தத் தாய்க்குப் பிரசவம் பார்த்தனர்.


பிரசவத்தின்போது பெண்ணின் வயிற்றில் இருந்து முதலில் குழந்தையின் காலே வெளிவந்தது. இதனால் குழந்தை வெளிவருவதில் சிரமம் ஏற்பட்டது. பிரசவம் பார்த்த ஆண்தாதிகள் குழந்தையின் காலைப் பிடித்து இழுத்தனர்.

குழந்தையின் தலை துண்டாகிய நிலையில் உடலின் மீதிப்பகுதி வெளிவந்தது. தலை வயிற்றுக்குள் இருந்தது. அப்போது குடிபோதையில் இருந்ததாகக் கருதப்படும் குறித்த ஆண்தாதிகள் குழந்தையின் தலை துண்டாகி வயிற்றுக்குள் இருக்கும் விடயத்தைத் தாயுக்கோ, உறவினருக்கோ சொல்லவில்லை.

வெளியே வந்த உடலின் ஒரு பகுதியை மட்டும் மருத்துவப் பரிசோதனைக் கூடத்துக்கு அனுப்பி வைத்தனர். தலை துண்டாகி வயிற்றுக்குள் இருந்ததால் தாயின் உடல்நிலை மோசமடைந்தது.

அருகிலுள்ள பெரிய அரச மருத்துவமனைக்கு அனுப்பி அறுவைச் சிகிச்சை செய்து குழந்தையின் தலை வெளியே எடுக்கப்பட்டது. தாய் ஆபத்தான நிலையில் தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்.

இது சம்பந்தமாகப் பொலிஸில் முறையிடப்பட்டிருக்கிறது. பிரசவம் பார்த்த ஆண் தாதிகள் இருவரும் தலைமறைவாகியுள்ளனர். பொலிஸார் அவர்களைத் தேடி வருகிறார்கள்.



அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் யூதர்களின் மிகப் பழமையான வணக்க ஸ்தலமாக விளங்கிய கட்டடம் ஒன்றைத் தானியங்கி மேடை ஒன்றில் வைத்து நகர்த்தி யூதர்களின் அரும்பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பகுதிக்குக் கொண்டு செல்கிறார்கள்.

# இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நமது கலாசாரத்தைச் சீரழிக்கின்றன

## பாகிஸ்தான் நீதிபதி அதிருப்தி


இஸ்லாமபாத்.ஜன.12



"இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாகிஸ்தான் அலைவரிசைகளில் ஒளிபரப்புவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் அவை நமது கலாசாரத்தைச் சீரழிக்கின்றன" என்று பாகிஸ்தான் உயர்நீதிமன்ற நீதிபதி தெரிவித்தார்.

பாகிஸ்தானின் உள்ளூர்த் தொலைக்காட்சி அலைவரிசைகளில் இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்குப் பாகிஸ்தான் மின்னணு ஊடக ஒழுங்குமுறை ஆணையம் 2016ஆம் ஆண்டு தடை விதித்தது.

2017ஆம் ஆண்டு லாகூர் உயர்நீதிமன்றம் இந்தத் தடையை நீக்கி உத்தரவிட்டது. இதை எதிர்த்துப் பாகிஸ்தான் மின்னணு ஊடக ஒழுங்குமுறை ஆணையம் மேல்முறையீடு செய்தது. இந்த மனு தலைமை நீதிபதி மியான் சாஹிப் நிசார் தலைமையில் 3 நீதிபதிகளை கொண்ட அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள் லாகூர் உயர்நீதிமன்றம் விதித்த தீர்ப்பை நீக்கம் செய்து, பாகிஸ்தான் மின்னணு ஊடக ஒழுங்குமுறை ஆணையத்தின் தடையை மீண்டும் நடைமுறைப்படுத்தினர். அதன்போது பேசிய தலைமை நீதிபதி மியான் சாஹிப் நிசார், "இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சி களை பாகிஸ்தான் அலைவரிசைகளில் ஒளிபரப்ப நாம் அனு மதிக்கக்கூடாது. ஏனெனில் அவை பாகிஸ்தானின் கலாசாரத்தைச் சீரழிக்கின்றன" எனக் காட்டமாகக் கூறினார்.



# கல்லறையில் கண்டெடுக்கப்பட்ட காதலர்களின் எலும்புக்கூடுகள்

ஹரியானா.ஜன.12

உலகின் பழமையான நகர்ப்புற நாகரிகங்களில், சுமார் 4ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னர், ஓர் ஆணும் பெண்ணும் ஒரே கல்லறையில் ஒன்றாகப் புதைக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிந்து சமவெளி நகரத்தில் இந்தியா மற்றும் தென் கொரியாவின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் 2016ஆம் ஆண்டு இதைக் கண்டுபிடித்தனர். தற்போது ஹரியானாவில் உள்ள ரகிகர்ஹி என்ற கிராமத்தில் உள்ளது அந்த இடம். புதைக்கப்பட்ட காலப்பகுதி மற்றும் அவர்களின் இறப்புக்குப் பின்னால் இருக்கும் சாத்தியமான காரணங்கள் குறித்துக் கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர்கள் ஆராய்ச்சி செய்து தற்போது அதன் முடிவுகளைப் பன்னாட்டுச் சஞ்சிகை ஒன்றில் வெளியிட்டுள்ளனர். "அந்த ஆணும் பெண்ணும் ஒருவருக்கு ஒருவர் எதிரெதிரே நெருக்கமாக அமர்ந்திருந்தனர். அவர்கள் ஜோடியாக இருந்தார்கள் என்று நம்பப்படுகிறது. மேலும், இருவரும் ஒரே நேரத்தில் இறந்திருக்கக் கூடும்." என்கிறார் இந்த ஆராய்ச்சியாளர்கள்.

குழுவுக்குத் தலைமை தாங்கிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர். அவர்கள் அரை மீற்றர் ஆழமான மண் குழியில் புதைக்கப்பட்டுள்ளனர். இறக்கும்போது அந்த ஆணுக்கு சுமார் 38 வயதும், அப்பெண்ணுக்குச் சுமார் 35 வயதும் இருக்கும். அந்த ஆண் 5.8 அடி மற்றும் அப்பெண் 5.6 அடி உயரமும் இருந்திருப்பார்கள். அதேபோல அவர்கள் இறக்கும்போது நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்துள்ளனர். இது மிக அரிதான சம்பவம். இது போன்ற பழங்கால கூட்டுக் கல்லறைகள் ஆர்வத்தை எழுப்பியுள்ளன. இத்தாலியில் உள்ள நியோலிதிக் கல்லறை தளத்தில் ஓர் ஆணும் பெண்ணும் தழுவிக் கொண்டிருப்பது போன்ற எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டது.

ரஷ்யாவில் ஒரு ஜோடி எதிரெதிரே கைகளைப் பிடித்தவாறு இருப்பது கல்லறை ஒன்றில் கண்டெடுக்கப்பட்டது. கிரேக்கத்தில் 6 ஆயிரம் ஆண்டுகள் பழமையான எலும்புக்கூடுகள் ஒன்றோடு ஒன்று தழுவி இருந்தவாறு கண்டுபிடிக்கப்பட்டன. சிந்து சமவெளியில் கண்டெடுக்கப்பட்ட இவற்றைப் பார்க்கும்போது தெரியவரும் விடயம் அவர்கள் எவ்வளவு எளிமையாக வாழ்ந்தார்கள் என்பதே. கல்லறைகளில் பொதுவாக உணவு மற்றும் சில நகைகள் கொண்ட பானைகள் இருக்கும். இறப்புக்குப் பிறகு வாழ்க்கை இருப்பதாக நம்பிய அவர்கள் அவற்றைக் கல்லறைக்குக் காணிக்கையாகச் செலுத்தினார்கள். ஆனால், அதில் சிறு அளவுகூட இந்தக் கல்லறைகளில் தெரியவில்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த ஆணும், பெண்னும் ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பில் ஆயிரக்கணக்கான மக்கள் வசித்த இடத்தில் வாழ்ந்ததாக ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

# சவூதிப் பெண்ணுக்கு அடைக்கலம் வழங்குங்கள் ஆஸ்திரேலியப் பெண்கள் நிர்வாணப் போராட்டம்

சிட்னி.ஜன.12

சவூதி அரேபியாவைச் சேர்ந்த இளம்பெண்ணான ரஹப் முகமது அல்கியூனன் (வயது18) குவைத்திலிருந்து தாய்லாந்துக்குச் சென்று அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அவரைத் தாய்லாந்து அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். தன்னை அறையில் அடைத்து வைத்துப் பெற்றோர் கொடுமைப்படுத்தியதாகக் கூறி நாட்டை விட்டு வெளியேறிய ரஹப் முகமது அல்கியூனன், குவைத்தில் இருந்து தாய்லாந்து தலைநகர் பாங்கொக் வழியாக ஆஸ்திரே





லியா செல்வதற்குத் திட்டமிட்டார். அதற்குரிய ஆவணங்கள் இல்லாததால் தாய்லாந்து அதிகாரிகள் அவரைத் தடுத்து நிறுத்தினர். அவரைச் சவூதிக்குத் திருப்பி அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு மறுத்த ரஹப் ஆஸ்திரேலிய அரசு தனக்கு அடைக்கலம் தர வேண்டும் என முகநூல், கீச்சகம் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மூலம் கோரிக்கை விடுத்தார். இதனால் இந்த விவகாரம் பன்னாட்டு அளவில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

இந்த நிலையில் அவருக்கு ஆதரவாக ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 'சீக்ரட் சிஸ்டர் கூட்' அமைப்பைச் சேர்ந்த 4 பெண்கள் மேலாடை அணியாமல் அரை நிர்வாணப் போராட்டம் நடத்தினார்கள்.

ரஹப் முகமது அல்கியூனன் ஆஸ்திரேலியாவில் அடைக்கலம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திகையில் பதாகைகளை ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் சிட்னியில் உள்ள சவூதித் தூதரகம் முன்பு நடைபெற்றது.





## றொட்டி விலை உயர்வு

# சூடானில் தொடர் போராட்டம் 22 பேர் சாவு - பலர் காயம்

கார்த்தூம்.ஜன.12

**மத்திய ஆபிரிக்க நாடான சூடானில் றொட்டியின் விலை உயர்ந்துள்ளது. விலை உயர்வுக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தின்போது ஏற்பட்ட வன்முறைகளில் இதுவரை 22 பேர் சாவடைந்ததாகத் தகவல் வெளியாகி உள்ளது.**

அசீடாஎனும்கோதுமைறொட்டி, கிச்ரா என்னும் சோள மாவு றொட்டி, குராசா என்னும்மைதாமாவுறொட்டிஎன்பன சூடானின் முதன்மை உணவுகள். அங்கு றொட்டி உற்பத்திக்கான அரச கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டதால், றொட்டிவிலைகடுமையாகஉயர்ந்தது. இது அந்த நாட்டு மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. றொட்டி விலை உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சமூக ஆர்வலர்கள், எதிர்க்கட்சியினருடன்இணைந்துமக்கள்போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 19ஆம் திகதிக்குப்பின்னர்அவர்களின்போராட்டம் அதிகரித்தது.

போராட்டக்காரர்கள் பல்வேறு பகுதிகளில் வீதி மறியலில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், கடைகளைச் சூறையாடிஅங்குள்ளபொருள்களைக்கொள்ளையடித்துச் செல்வதும் அதிகரித்துள்ளது. போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்குக் கலவரத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதனால் போராட்டக் காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

இதில் 19 பேர் சாவடைந்ததாக அந்த நாட்டு அரசு அறிவித்தது.

கடந்தபுதன்கிழமையன்று அதிபர் பஷீருக்குஆதரவாகச்சூடானின்தலைநகர் கார்த்தூமில்போட்டிபேரணிநடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். அரசுக்கு எதிராகவும் தனியாகப் போராட்டம் நடைபெற்றது. இதனால் தலைநகரில் கூடுதல் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். ஓம்டர்மான் பகுதியில் திரண்ட நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள், அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பினர். 'அதிபர் ரஷீத் பதவி விலக வேண்டும், சுதந்திரம், அமைதிமற்றும் நீதி வேண்டும்' எனக் கோசமிட்டபடி பேரணியாகச்சென்றனர். அவர்களை பொலிஸார் சுற்றி வளைத்துத் தடுத்து நிறுத்தினர். பின்னர்கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி அவர்களை விரட்டியடித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 3 பேர் சாவடைந்தனர். சிலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தால்இதுவரை22பேர்சாவடைந்திருப்பதாகச்சூடான் அரசு அறிவித்துள்ளது. ஆனால் 40 பேர் வரை இறந்திருக்கலாம் என ஐ.நா. மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

## நீளும் மூடப் பழக்கம்
## மாதவிடாய் காரணமாக தனிமையாக்கப்பட்ட பெண் சாவு

காத்மண்டு.ஜன.12

மாதவிடாய்க்காலத்தில்குடிசையில்தங்கவைக்கப்பட்டிருந்த ஒரு தாயும் அவரது இரண்டு பிள்ளைகளும் குடிசையிலிருந்துசடலமாகக்கண்டெடுக்கப்பட்டனர். அங்கு கடும் குளிர் நிலவுவதால் குளிரைத் தணித்துக் கொள்வதற்காகக்குடிசைக்குள்நெருப்புமூட்டிஇருக்கிறார்கள்.

இதனால் ஏற்பட்ட புகை மூட்டத் தால் மூச்சு விடமுடியாமல் அவர்கள் உறங்கும் போது இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மாதவிடாய்க் காலத்தில் பெண்களைவீட்டைவிட்டுவெளியேற்றித்தனிமைப்படுத்தும் செயல் குற்றம் எனும் சட்டத்தை நேபாள அரசு 2017ஆம் ஆண்டு இயற்றியது.

ஆனாலும் மாதவிடாய்க் காலத்தில் பெண்களை வீட்டிலிருந்துதூர விலக்கும்பழக்கம்நேபாளத்தின் கிராமப்புறங்களில் இருந்து வருகிறது. மாதவிடாய் காலத்தில் தனியாகத் தங்க வைக்கப்பட்ட பெண் பாம்பு தீண்டிச் சாவடைந்த சம்பவம் ஒன்றும் இதற்கு முன்னர் நேபாளத்தில் பதிவாகியுள்ளது.

**மதம் சார்ந்த மூட நம்பிக்கை**

இந்துமதத்துடன்தொடர்புடைய இந்தப்பழங்காலநம்பிக்கையானது மாதவிடாய்க் காலத்தில் பெண்களை அசுத்தமானவர்களாகப் பார்க்கிறது.

துரதிர்ஷ்டத்தை கொண்டுவரும்பெண்களாக அவர்களைப் பார்க்கிறது. கால்நடைகளைத் தொடுவதற்குக் கூட அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் தனியாக ஒரு வீட்டில் தங்கவைக்கப்படுகிறார்கள். பூப்பெய்தும்போதும்பெண்கள்தனியாகத்தங்கவைக்கப்படுகிறார்கள்.

அப்படித் தங்க வைக்கப்பட்ட பெண் ஒருவர் இந்தியாவின் தமிழகத்தில் இறந்திருக்கிறார். தமிழகத்தை உலுக்கியகஜபுயலால்இறந்த ஒருவர்பட்டுக்கோட்டை அடுத்த அணைக்காடு கிராமத்தைச் சேர்ந்த 14 வயதுடைய விஜயலட்சுமி எனும் சிறுமி.

இந்த சிறுமியின் சாவுக்குப் புயல் மட்டுமே காரணமல்ல என்ற கூற்று எழுந்துள்ளது. சில தினங்களுக்கு முன்பு பூப்படைந்திருந்த விஜயலட்சுமியை வீட்டுக்கு வெளியே, தென்னந்தோப்பில் உள்ள ஒரு குடிசையில் தங்கவைத்துள்ளார்கள்.

புயல்காரணமாகத்தென்னைமரம்வேருடன்சாய்ந்து குடிசை மீது விழுந்ததில் சிறுமி சாவடைந்தார். பூப்படைந்தபெண்ணைவீட்டில்தங்கவைக்ககூடாதுஎன்ற வழக்கத்தின் காரணமாகவே இந்தச் சாவு நிகழ்ந்தது.



## அமெ. அரச துறைகளின் முடக்கம் நீடிப்பு
## ட்ரம்பின் டாவோஸ் பயணம் நிறுத்தம்

வோஷிங்டன்.ஜன.12

அமெரிக்காவில் அரச துறைகள் முடக்கம்நீடித்துவருகிறது. உலக பொருளாதார மாநாடு சுவிட் சர்லாந்தின் டாவோஸ் நகரில் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

இந்தநிலையில், இந்தமாநாட்டில் பங்கேற்பதை ட்ரம்ப் தவிர்த்துள்ளார்.

அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக ஊடுருவும் வெளிநாட்டினரைத் தடுப்பதற்காக அமெரிக்கா மெக்சிக்கோ எல்லையில் சுவர் கட்டுவதற்கு அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் முடிவு செய்தார். அதற்காக நிதிஒதுக்கீட்டுக்குஅமெரிக்கநாடாளுமன்றிடம் ஒப்புதல் கேட்டார். அதற்கு எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி எதிர்ப்பு தெரிவித்தது. அதனால் இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் நிறை வேறவில்லை. இதனால் கடந்த 20 நாள்களாக அமெரிக்காவின் அரச அலுவலகங்கள் சில செயல்படவில்லை.

இடைப்பட்ட காலத்தில் ட்ரம்புக்கும் எதிர்க்கட்சியினருக்கம் இடையே சந்திப்பு நடந்தது. இதிலும் இந்தப் பிரச்சினைக்கு முடிவு எட்டப்படவில்லை.

அரசதுறைகளின்முடக்கம்நீடித்து வருகிறது. இந்த நிலையில், டாவோஸ் பயணத்தை நிறுத்தியுள்ளதாக ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார்.

## பொங்கலையொட்டி சேவல் பந்தயம்

ஆந்திரா.ஜன.12

பொங்கலையொட்டி இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் நேற்றையதினம் சேவல் பந்தயம் தொடங்கியுள்ளது. இதில் இலட்சக் கணக்கில் பந்தயப் பணம் கைமாறி வருகிறது. ஆந்திராவில் 'சங்கராந்தி' பெயரில் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை நாளில், கடலோர மாவட்டங்களான பிரகாசம், கிழக்கு, மேற்கு கோதாவரி, விசாகப்பட்டினம்ஆகியபகுதிகளில்சேவல் பந்தயங்கள் நடைபெறும். இந்தப் பந்தயங்களுக்குத் தயார் செய்யப்படுகின்ற சேவல்களுக்கு முந்திரி, பாதாம், பிஸ்தாபோன்றவைகளைக் கொடுத்து வளர்க்கிறார்கள். இந்தச் சேவல்கள் 10ஆயிரம் முதல் 50ஆயிரம் ரூபா வரை (இந்திய மதிப்பில்) விற்பனை செய்யப்படுகின்றன. சேவல் பந்தயங்களுக்காக பல கிராமங்களில்இப்போதிலிருந்தேதொழிலதிபர்கள், முக்கிய பிரமுகர்கள் முகாமிட்டு, சேவல் பந்தய முகாம்களை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிழக்கு கோதாவரி மாவட்டம், பெத்தாபுரம் பகுதிகளில் நேற்றே சேவல் பந்தயம் தொடங்கிவிட்டது. இதில் ஆயிரக்கணக்கில் பந்தயம் கட்டிப்பலர்பங்கேற்றனர். பொங்கல் வரை இந்தச் சேவல் பந்தயம் களை கட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## சிம்பாப்வே முன்னாள் அதிபரின் பணப்பெட்டி களவாடப்பட்டது



ஹராரே.ஜன.12

சிம்பாப்வேயின் முன்னாள் அதிபர் ராபர்ட் முகாபேவிடமிருந்து 1.5 இலட்சம் அமெரிக்க டொலர்கள் கொண்ட பணப்பெட்டி களவு போயுள்ளது.

அதைக் களவாடியதாகக் குற்றஞ்சாட்டப்படும் மூன்று பேர் அந்த நாட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மூவரும் இணைந்து புதிய மகிழுந்துகள், வீடுகள், விலங்குகளை வாங்குவதற்கு அந்தப் பணத்தைச் செலவிட்டதாகக் கூறப்படுகிறது.

குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று பேரில், முகாபேயின் உறவினரானகான்ஸ்டானியாமுகாபேஎன்பவரும்ஒருவர்என்று அந்த நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

சிம்பாப்வேயின் தலைநகர் ஹரா ரேவுக்கு அருகிலுள்ள முகாபேவுக்கு சொந்தமான வீட்டின் திறப்புகளை அவர் வைத்திருந்ததாகக் கூறப்ப டுகிறது. இந்த மூவரிடமும் சிம்பாப்வே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விளைவு...

அரசமைப்பு நிர்ணயசபை யாகக் கூடிய நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்காக வழிநடத்தல்குழு மற்றும் 7 உப குழுக்கள் அமைக்கப்பட்டு கருத்துக்கள் கேட்கப்பட்டன. 3 ஆண்டுகள் இது தொடர்பாகச் செயற்பட்டு தற்போது அந்த அறிக்கைகள் சபைக்கு வந்துள்ளன. இந்த அறிக்கை தொடர்பில் பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களின் சமர்ப்பணம் அதிர்ச்சியளிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கை பல இன, மத, கலாசாரங்களைச் சேர்ந்த பன்முக சமூகத்தினர் வாழும் நாடாகும். அந்த மக்களின் அடையாளங்கள் எப்போதும் நிலைத்திருக்கவேண்டும். எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரும் இலங்கையர்களாக இருக்க வேண்டும். பல காரணங்களுக்காக நாங்கள் பிரிந்திருக்கலாம். அதனை மறந்து ஒற்றுமைப்படவேண்டும்.

மேலும் புதிய அரசமைப்பு ஊடாக அதிகாரப் பகிர்வு இடம்பெறும்போது பல நன்மைகள் கிடைக்கின்றன. கொழும்பில் மாத்திரம் அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன. அதனால் அதிகார முறைகேடுகளுக்கு வாய்ப்பு இருக்கின்றது. அதிகாரங்கள் மாகாண, மாவட்ட மட்டத்தில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். அரசமைப்பில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த திருத்தங்கள் அனைத்தும் அன்று ஆட்சியில் இருந்த கட்சிகளின் பெரும்பான்மைகளின் அடிப்படையிலே மேற்கொள்ளப்பட்டன.

தற்போது புதிய அரசமைப்புத் தயாரிப்புக்காக சிவில் அமைப்புக்கள் மற்றும் கட்சிகளின் கருத்துக்களை அறிந்து, ஆலோசனைகளைப் பெற்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. 1987இல் 13ஆம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அதிகாரப் பகிர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் மகிந்த ராஜபக்ச அவரது காலத்தில் போர் மிகவும் உக்கிரமடைந்திருந்தது. அந்தக் காலப்பகுதியில் போரை வெற்றி கொள்ள மகிந்த ராஜபக்ச இந்தியா உள்பட பன்னாட்டுச் சமூகங்களின் உதவியை கேட்டிருந்தார். போர் நிறைவடைந்த பின்னர் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக அவர் அந்த நாடுகளுக்கு வாக்குறுதியளித்திருந்தார். ஆனால் இன்று மகிந்த ராஜபக்ச வேறு நிலைப்பாட்டில் இருக்கின்றார். அரசியல் நோக்கத்தில் செயற்பட்டு வருகின்றார்.

மேலும் புதிய அரசமைப்பை ஏற்படுத்திக் கொள்ள பொதுத்தேர்தலுக்கு செல்லவேண்டும் என்று மகிந்த ராஜபக்ச தெரிவிக்கின்றார். பொதுத்தேர்தலுக்கும் அரசமைப்புக்கும் சம்பந்தமில்லை. ஆரம்பமாக அரசமைப்பு சட்டவரைவு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்பட்டு பின்னர் அதனை மக்கள் கருத்துக்கு விடவேண்டும். மக்கள் தீர்மானிப்பார்கள் அந்த அரசமைப்புத் தேவையா? இல்லையா? என்று. அதற்குப் பொதுத்தேர்தல் தேவையில்லை - என்றார். (ஒ.5,10,61)

## புதிய...

கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபையில் இன்று முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை வழிநடத்தல் குழுவின் இறுதி அறிக்கையாக இருக்க வேண்டும். அப்போது தான் நாம் விவாதம் நடத்த முடியும். இவ்வாறு அர்த்தமில்லாத ஒரு அறிக்கையை முன்வைத்தால் உடனடியாக விவாதம் நடத்த முடியாது. இன்றைய நாள் உங்களின் அரச தரப்பில் பெரும்பாலான உறுப்பினர்கள் இல்லை. அப்படியாயின் உங்களில் பலருக்கே இதில் விருப்பம் இல்லையா என்ற கேள்வி எழுகின்றது.

சகலரதும் கருத்துக்களை தான் முன்வைக்கின்றீர்கள் என்றால் ஏன் வழிநடத்தல் குழு செயற்பட வேண்டும். வழிநடத்தல் குழுவை நியமித்தது வீண் விரயமானதாகும். மக்கள் ஆதரவு இதற்கு இல்லை. இன்று தீர்மானம் கொண்டுவரும் சகலரும் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தோற்றவர்கள். மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். அதேபோல் தேர்தல் ஒன்றினை நடத்த வேண்டாம் என்று நீதிமன்றம் சென்றவர்கள். ஆகவே இவர்களுக்குப் புதிய அரசமைப்பைக் கொண்டுவர என்ன அதிகாரம் உள்ளது என்ற கேள்வி எழுகின்றது.

### நினைக்குமளவுக்கு இடமளிக்க முடியாது

மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளைச் செய்ய வேண்டாம். ஒரு இனத்தை மிதித்துக்கொண்டு இன்னொரு இனம் செயற்பட இடமளிக்க முடியாது. சிங்கள இனம் இன்னொரு இனத்தை மிதித்து செயற்பட அதிகாரம் இல்லை. அதேபோல் ஏனைய இனத்தவரும் சிங்களவரை மிதிக்கலாம் என்று நினைக்கும் அளவுக்கு இடமளிக்க முடியாது. இரண்டு இனமும் இணங்கக்கூடிய ஒரு இடத்துக்கு கொண்டுவர வேண்டும். அப்போது தான் புதிய அரசமைப்பை உருவாக்க முடியும். ஒரு இனத்தை பகைத்துக் கொண்டு மற்றொரு தரப்பு மாத்திரம் உரிமைகள் பெற முயல்வதால் குரோதம் தான் வளரும். அந்த குரோதத்தை உருவாக்க வேண்டாம். அரசியல் சுயநலத்துக்காக அதனை செய்ய வேண்டாம். நீங்கள் கடந்த காலத்தில் எவ்வாறு இனவாதத்தை தூண்டினீர்கள் என்பது இங்குள்ள அனைவருக்கும் தெரியும்.

நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கு எதிராக நீதிமன்றம் சென்றார்கள். 19 ஆவது திருத்தத்தை நீதிமன்றம் விமர்சித்துள்ளது. தேவையில்லாத சரத்துக்கள் இதில் உள்ளன. உயர் நீதிமன்றத்துக்கு தலைசாய்க்க நாடாளுமன்றத்துக்கு நேரிட்டது. அவசரப்பட்டே திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. 19 ஆவது திருத்தம் கொண்டுவந்த போது நான் நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை. பொதுத் தேர்தலுக்கு செல்வோம். நாம் எமது அரசமைப்பு யோசனையை முன்வைக்கிறோம்.

ஐக்கிய தேசியக் கட்சி தமது யோசனையை முன்வைக்கட்டும். மக்கள் எதனை அனுமதிக்கிறார்கள் என்று பார்ப்போம். அடுத்த நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பை முன்வைக்கலாம். இந்த நாடாளுமன்றதில் புதிய அரசமைப்பை முன்வைக்க வேண்டாம். இது முறையற்ற நாடாளுமன்றம். இந்த நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டாம் - என்றார்.

### ரணில் - மகிந்த மோதல்

சமர்பிக்கப்பட்டுள்ளது வழிநடத்தல் குழுவின் அறிக்கைகளா அல்லது வேறு வேறான நிபுணர்களின் அறிக்கையா? என்று ரணிலிடம், மகிந்த கேள்வி எழுப்பினார்.

நிபுணர்கள , அரசியல் குழுக்களிடமிருந்து வழிநடத்தல் குழுவால் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையே இது. எமக்கு கிடைக்கும் சகல அறிக்கைகளையும் இந்தச் சபையில் சமர்பிக்கின்றோம் என்றார் ரணில்.

இதனை வாசிப்பதற்கு காலம் தேவைத்தானே. இன்று காலை (நேற்று) இதனைக் கொடுத்தால் எப்படி உடனடியாக வாசித்து எம்மால் விவாதம் செய்ய முடியுமென மகிந்த திருப்பிக் கேட்டார். சரி இரண்டு, மூன்று வாரங்களில் இன்னொருநாள் விவாதம் செய்வோம். இப்போது உங்களுக்கு நாட்டை பிளவுப்படுத்திவிட்டார்கள் எனக் கூச்சலிடுவதற்கு ஆவணங்கள் இல்லையென்பது பிரச்சனையாகவுள்ளது. இனவாத அரசியல் செய்ய முடியாது போயுள்ளது.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் பேச முடியாத நிலையில் இப்போது அமெரிக்க கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒருவரை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப் போகின்றோமென மதவாத பரப்புரை தொடங்கியுள்ளீர்கள் என்று தலைமை அமைச்சர் ரணில் கூறினார்.

ஒருகட்டத்தில் தன் கேள்விகளை நிறுத்திவிட்டு உரையாற்றாது மகிந்த ஆசனத்தில் அமர்ந்துவிட்டார். பிரதி சபாநாயகர் நீங்கள் உரையாற்றவில்லையா என்று மகிந்தவிடம் கேட்டார். மகிந்த ராஜபக்ச அந்நேரத்தில் கருத்துகளை முன்வைத்துக் கொண்டிருந்த தலைமை அமைச்சர் ரணிலை பார்த்து நீங்கள் அமர்ந்தால்தான் நான் பேச முடியும் எனக் கூறவே சரி சரி நீங்கள் பேசுங்கள் எனக் கூறிவிட்டு தலைமை அமைச்சர் ரணில் அமர்ந்துவிட்டார்.

இதனையடுத்து அமைச்சர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரட்ன ஆகியோர் மகிந்த ராஜபக்சவுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சித் தரப்பில் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாக தினேஸ் குணவர்தன, எஸ்.பி.திசாநாயக்க, சேஹான் சேமசிங்க போன்றோர் ராஜித, மங்களவுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அரைமணி நேரம் இடம்பெற்ற இந்த சர்ச்சைகளை தொடர்ந்து ஏனைய கட்சித் தலைவர்கள் பலரும் தமது கருத்துகளை முன்வைத்தார்கள். (ஒ.5,10,61)

## வாள்...

நிலையிலேயே அவரது வீட்டுக்குள் நேற்று அதிகாலை 1 மணியளவில் கொள்ளையர்கள் புகுந்துள்ளனர். வங்கியில் எடுத்த பணம் எங்கே என்று கொள்ளையர்கள் மிரட்டியதாக வீட்டு உரிமையாளர் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

'வீட்டின் முகப்புப் பகுதியில் உரிமையாளரின் தாய் படுத்திருந்துள்ளார். அவரை மிரட்டிய கொள்ளையர்கள், அவர் ஊடாக வீட்டுக் கதவைத் திறக்கச் செய்துள்ளனர். வீட்டினுள் முகங்களை மூடிக்கட்டியவாறு நுழைந்த 4 கொள்ளையர்கள், கைத்துப்பாக்கியைக் காட்டியுள்ளனர். வீட்டின் உரிமையாளர் மீது தாக்கியுள்ளனர். அவர்களை வாள்முனையில் கைகளைக் கட்டி இருத்திய பின்னர் தேடுதல் வேட்டை நடத்தி கொள்ளையடித்துள்ளனர்.

வீட்டில் இருந்த 12 பவுண் நகைகளைக் கொள்ளையிட்ட பின்னர் வீட்டு உரிமையாளரிடம், வங்கியில் இன்று (நேற்றுமுன்தினம்) எடுத்த பணம் எங்கே என்று கேட்டு மிரட்டியுள்ளனர். அந்தப் பணம் வைத்திருந்த இடத்தை உரிமையாளர் காண்பித்துள்ளார். அதனையும் கொள்ளையடித்துள்ளனர். 3 அலைபேசிகள், ஒரு உந்துருளி என்பவற்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். வீட்டிலிருந்த மற்றைய உந்துருளியின் சில்லை சேதமாக்கியுள்ளனர். சுமார் ஒன்றரை மணிநேரம் அந்த வீட்டில் கொள்ளையர்கள் தங்கி நின்றுள்ளனர்' என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வங்கியில் பணம் எடுத்துச் செல்பவர்களின் வீடுகள் குறிவைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட மூன்றாவது சம்பவமாக இது பதிவாகியுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ.5,105)

## இணக்கமில்லை...

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்குழுவின் வரைவு, அவர்களின் கருத்துக்கள், கட்சிகளின் நிலைப்பாடுகள், முதலமைச்சர்களின் அறிக்கைகள், இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தின் தொகுப்புகள் அடங்கிய ஆவணம், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று முன்வைக்கப்பட்டது.

அவர் அதனைச் சமர்ப்பித்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் வழிநடத்தல் குழு ஊடாகத் தயாரிக்கப்பட்ட காரணிகளைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கை மட்டுமே இன்றைய தினம் கூடியுள்ள அரசமைப்பு நிர்ணய சபையில் முன்னெடுக்கப்படுகின்றது.

இறுதிச் சட்டவரைவை உருவாக்க நாம் தீர்மானிக்கவில்லை. அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும். அதற்கு முன்னதாக சகல தரப்புக்களினதும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சகலரதும் கருத்துக்களையும் உள்ளடக்கிய அறிக்கை தயாரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. கடந்த ஒக்ரோபர் 25ஆம் திகதி இறுதியாகக் கூடி இது குறித்து ஆராய்ந்தோம். நிபுணர் குழுவின் அறிக்கை, கட்சிகளின் கருத்துக்கள், சிவில் அமைப்புகளின் கருத்துக்கள், மாற்றுக் கருத்துக்கள், விடயத்துக்கு பொறுப்பான சகல தரப்பின் நிலைப்பாடுகள், மாகாண முதலமைச்சர்கள் கருத்துக்கள் என்று அனைத்தையும் நாம் இணைத்து இன்று சபையில் சமர்ப்பித்துள்ளோம்.

### நாட்டை பிளவுபடுத்தவில்லை

நாட்டைப் பிளவுபடுத்தும் எந்தக் கருத்தும் இல்லை. ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று அரசியலை குழப்பும் எதுவும் இல்லாத காரணத்தால் மீண்டும் மீண்டும் இதே காரணியை கூறி வருகின்றனர். இங்கு சகல கட்சிகளினதும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அதனை சகல இன, மத, மொழி பிரதேச மக்களின் கருத்துக்களாகக் கருத வேண்டும். அதை விடுத்து பௌத்தம் அழிக்கப்படுகின்றது, நாடு பிளவுபடுகின்றது என்ற கருத்துக்களைக் கூற வேண்டாம். அரசமைப்பின் 9 ஆம் சரத்து மாற்றப்படக் கூடாது என்பது சகலரதும் கருத்தாகும். அதனை மாற்ற நாம் தயாராக இல்லை. ஒற்றையாட்சி என்பதில் எந்த முரண்பாடும் இல்லை. ஒற்றை ஆட்சிக்குள் எவ்வாறு அதிகாரத்தை பகிர்வது என்பதையே நாம் பார்க்கின்றோம். தேர்தல் முறைமை மற்றும் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை நீக்குவது என்ற காரணிகள் மட்டுமே இணக்கம் காணப்படாதுள்ளது.

### வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லை

புதிய அரசமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமையில்லை, நாட்டைப் பிளவுபடுத்துகின்றோம், வடக்கு - கிழக்கை இணைக்கின்றோம் என்ற கருத்துக்களை எதிர்க்கட்சியினர் அண்மைக் காலமாகக் கூறினர். ஆனால் இன்று முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் அவை ஒன்றுமே இல்லை.

சகலரதும் கருத்துக்களையும் சபையில் முன்வைத்துவிட்டோம். இப்போது சபை தீர்மானம் எடுக்க வேண்டும். அரசாக எமது கடமையை நாம் நிறைவேற்றிவிட்டோம். இப்போது சபையில் இது குறித்து இணக்கம் காணப்பட வேண்டும். இதில் இருந்து நாம் முன்னோக்கிச் செல்ல தீர்மானம் எடுக்க வேண்டும். அவ்வாறு சகலரும் இணக்கம் தெரிவித்தால் வழிநடத்தல் குழு அடுத்த கட்டமாகச் செயற்படும். இணக்கம் இல்லாது போனால் அதற்கு அப்பால் எம்மால் செய்ய எந்த வேலைத்திட்டமும் இல்லை என்றார்.

### பின்னணி

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. நாடாளுமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. 21பேர் கொண்ட வழிநடத்தல் குழு அமைக்கப்பட்டது. வழிநடத்தல் குழு 7 உப குழுக்களை அமைத்தது. 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் உபகுழு மற்றும் வழிநடத்தல் குழுவின் அறிக்கைகள் சமர்பிக்கப்படும் என்று தெரிவிக்கபட்டபோதும் அது இடம்பெறவில்லை. 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி வழிநடத்தல் குழுவின் அறிக்கை சமர்பிக்கப்பட்டு அதன் மீதான விவாதம் நடைபெற்றது.

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல், அரசியல் குழப்பம் என்பவற்றால் இந்த விடயம் இழுபட்டது. 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி உத்தேச வரைவு சமர்பிக்கத் திட்டமிடப்பட்ட நிலையில் அதுவும், ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து கிடப்பில் போடப்பட்டது. இந்த நிலையில் கடந்த புதன் கிழமை வழிநடத்தல் குழு கூடியது. புதிய அரசமைப்புக்கான உத்தேச வரைவு அரசமைப்பு நிர்ணய சபையில் நேற்றுச் சமர்பிக்கப்பட்டது.

(ஒ.5,10,61)

## இதுவரை...

### புத்தருக்கு முன்பாகவே பொய்

நேற்றையதினம் விகாரைக்குச் சென்றிருந்த மகிந்த ராஜபக்ச மத வழிபாடுகளை முடித்துவிட்டு, நாடு பிளவுபடும் அரசமைப்பு வரைவு ஏப்ரல் மாதம் கொண்டுவரப்படப்போகிறது. இதனூடாக கூட்டாட்சி (சமஷ்டி) அரசமைப்பு உருவாக்கப்பட்டு நாட்டில் ஒன்பது வேறுபட்ட பொலிஸ் உருவாக்கப்படப்போகிறது என்று அப்பட்டமான பொய் கூறினார்.

விகாரைகளுக்குச் சென்று பொய் கூறும் அரசியல் தலைவர்களே தற்பொழுது உருவாகியுள்ளனர்.

அரசமைப்புக்காக புலம்பெயர் அமைப்புக்களிடமிருந்து மில்லியன் டொலர்கள் வழங்கப்படுகின்றது என்றெல்லாம் கூறினார்கள். அவ்வாறு மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டிருந்தால் முதலில் பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களே அதனைப் பெற்றிருப்பார்கள். இந்தக் கருத்துக்கள் அனைத்துமே பொய் என்பது எமக்குத் தெரியும்.

அரசியல் ரீதியாக வங்குரோத்து நிலையை அடைந்து சதித் திட்டம் தோல்வியடைந்த நிலையில் இனவாதத்தை கையிலெடுத்து மக்கள் மத்தியில் பொய்யுரைத்து அவர்களைக் குழப்பி வருகின்றனர். அரசமைப்பு நிர்ணயசபையினாலோ, வழிநடத்தல் குழுவினாலோ அரசமைப்பு வரைவை கடந்த மூன்று வருடங்களில் தயாரிக்க முடியாது போனது. இவ்வாறான நிலையில் அரசமைப்பு என்றால் என்ன என்பதை ராஜபக்ச தன்னுடன் இருக்கும் உறுப்பினர்களுக்கு செயலமர்வொன்றை நடத்திக் கூற வேண்டும்.

புதிய அரசமைப்பு வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். தேர்தல் முறைமை மாற்றப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம்.

### நடைமுறை என்ன?

ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் நாட்டைப் பிளவுபடுத்தம் அரசமைப்பு கொண்டுவரப்படப் போகிறது என்பது அப்பட்டமான பொய். வழிநடத்தல் குழுவால் தயாரிக்கப்படும் அரசமைப்பு வரைவு அரசமைப்பு நிர்ணய சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

நிறைவேற்றப்படாவிட்டால் அரசமைப்பு நிர்ணய சபை, வழிநடத்தல் குழு மற்றும் அரசமைப்புத் தயாரிக்கும் செயற்பாடுகள் யாவும் முடிவடைந்துவிடும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசமைப்பு வரைவு நிறைவேற்றப்பட்டால் அது அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டு அங்கு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அமைச்சரவையின் அனுமதியைப் பெற்று அரசிதழ் அறிவித்தல் வெளியிடப்படும். அது மாகாண சபைகளின் கருத்துக்களுக்காக அனுப்பப்பட்டு அதன் பின்னரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் அரசமைப்பு வரைவு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப் பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு நிறைவேற்றப்பட்டாலும் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவது அவசியம். பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டாலும் அதில் அரச தலைவர் கையொப்பம் இட்டாலே அரசமைப்பு ஏற்றுக் கொள்ளப்படும். இதில் எந்தவொரு செயற்பாடும் இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை.

முழு நாடாளுமன்றமும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்துள்ளன. வழிநடத்தல் குழு 83 தடவைகள் கூடியுள்ளது.

இதுவரை அரசமைப்புக்கான வரைபொன்றை அவர்களால் தயாரிக்க முடியாது போயுள்ளது. அரசமைப்புக்கான வரைவைக் கூட அவர்களால் தயாரிக்க முடியாத நிலையில் எப்படி ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் அரசமைப்பை முன்வைக்க முடியும்?

### இழுத்தடிப்பு

ஒரு வருடத்துக்குள் அரசமைப்பை உருவாக்கக் கூடியதாக இருக்கின்றபோதும், வழிநடத்தல் குழுவின் தலைவர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்த மூன்று ஆண்டுகளாக காலத்தை இழுத்தடிப்புச் செய்துவிட்டார்.

அதுதான் உண்மை. மூன்று ஆண்டுகளில் எம்மால் ஒரு வரைவை கூட உருவாக்க முடியாது போயுள்ளது என்றால் நாம் எப்போது அரசமைப்பை உருவாக்கப்போகின்றோம். அரசமைப்புக்கான வரைவைக்கூடத் தயாரிக்க முடியாத அரசமைப்பு நிர்ணயசபை மற்றும் வழிநடத்தல் குழு தொடர்ந்தும் செயற்படுவதால் எந்தவித பயனும் இல்லை.

இது காலத்தை வீணடிக்கும் செயற்பாடாகவே அமையும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த காலங்களில் சேர்த்து வைத்திருப்பதைப் போல ஏனைய அறிக்கைகளுடன் இதனையும் ஒரு அறிக்கையாகவே வைத்துக் கொள்ள முடியும். அதைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியாது.

இனியும் காலத்தைக் கடத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை. வழிநடத்தல் குழுவில் முன்னெடுக்கப்பட்ட அனைத்தையும் இதுவரை செய்த அனைத்தையும் அரசமைப்பு சபைக்கு முன்வைக்க வேண்டும். பொய்களைக் கூறி காலத்தைக் கடத்தாது அரசமைப்பு நிர்ணய சபைக்கு அனைத்தையும் முன்வைத்து வழிநடத்தல் குழுவின் செயற்பாட்டை நிறுத்திக்கொள்ள - வேண்டும் என்றார். (ஒ.5,10,61)

## ஒற்றையாட்சிக்குள்...

வித்தார்.

அரசமைப்பு நிர்ணயசபை பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கூடியது. அரசமைப்புக்கான நிபுணர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களின் உத்தேச வரைவை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபையில் முன்வைத்தார். இதன்போது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் 19ஆவது திருத்தத்துக்கு அரச தலைவரின் வழிகாட்டலுக்கமைய மிகவும் கஷ்டப்பட்டு அதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குகளை வழங்கியிருந்தோம். 20ஆவது திருத்தத்தை கொண்டு வந்து மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென கூறினோம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி எங்களை ஏமாற்றியுள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி 13ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களை அவ்வாறே வழங்க வேண்டும் என்று கூறியுள்ளது.

சுதந்திரக் கட்சி தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி என்ன செய்துள்ளது. சகல கட்சிகளும் தமது நிலைப்பாட்டை அறிவித்திருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி தமது நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை. மெதுவாக நழுவியுள்ளது.

அரசமைப்பு நிர்ணய சபையில் தமது நிலைப்பாடு என்ன என்பதனைக் கூற வேண்டும். அரசு சிறுபான்மை கட்சிகளை தம்முடன் தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக அரசியல் விளையாட்டையே செய்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்று தலைமை அமைச்சர் முறைமைக்கே முயற்சிக்கின்றது. அது நடந்தால் பன்னாட்டுச் சமூகத்துக்கு வாய்ப்பாகிவிடும். எவ்வாறாயினும் நேரடியாகத் தேர்தல் மூலம் தெரிவாகும் ஓரளவுக்கேனும் அதிகாரத்தைக் கொண்ட அரச தலைவர் இருக்க வேண்டும் - என்றார்.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா, எதிர்க்கட்சி உறுப்பினர் நிமல் சிறிபாலடி சில்வாவின் குற்றச்சாட்டை நிராகரித்ததுடன், எமது கட்சி முன்வைத்த யோசனைகள் இந்த அறிக்கையில் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார். இதன்போது இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய நிமல் சிறிபாலடி சில்வா, ஐக்கிய தேசியக் கட்சி இதில் நழுவிச் சென்றுள்ளது. தப்பிச் சென்றுள்ளது. நாங்கள் பொய் கூறவில்லை. அவர்களே பொய் கூறுகின்றனர். ஒவ்வொரு கட்சியினதும் நிலைப்பாட்டை எழுத்து மூலம் கோரிய போதும் ஐக்கிய தேசியக் கட்சி சரியாக தமது நிலைப்பாட்டை அறிவிக்காத காரணத்தாலேயே தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. முறையான அரசமைப்பைக் கொண்டு வரவே நாங்கள் விரும்புகின்றோம். இது தொடர்பாக அரசியல் கட்சிகள் பரந்த மனதில் செயற்படுமாறு கோருகின்றோம் - என்றார். (ஒ.5,10)

## பொன்னான...

யுள்ளது. இந்த வாய்ப்பை தவறவிட்டால் நாட்டுக்குப் பேரழிவாகவே அமையும். அரசமைப்பை உருவாக்கும் செயற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதி வரை பங்கேற்கும். அதனைப் புரிந்துகொண்டு இருதரப்பும் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாதென வடக்கிலிருந்து முதல் முறையாக இணைந்து பணியாற்றும் தமிழ்க் கட்சியாக வேண்டுகோள் விடுக்கின்றோம். இவ்வாறுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அரசமைப்பு நிர்ணயசபையில் நேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

### முன்பின் முரணான நிலைப்பாடு

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணி கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்ற அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. அதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவளித்து புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் இணைவதாக உறுதிமொழியளித்தனர். அதனை நாடாளுமன்றமும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. ஆனால், இப்போது அந்தச் செயற்பாட்டை ஒரு தரப்பு எதிர்கிறது. நாடு 9 துண்டுகளாக பிளவுப்படும், பௌத்த மதத்துக்கான முன்னுரிமை இல்லாது போகும் என்று எதிர்க்கின்றனர்.

இடைக்கால அறிக்கை கருத்தொருமைப்பாட்டின் பிரகாரம்தான் தயாரிக்கப்பட்டது. அதனையும் எதிர்க்கின்றனர். நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொண்டனர். இடைக்கால அறிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தெளிவாக விளக்கப்படுத்தப் பட்டுள்ளது.

இடைக்கால அறிக்கை, உப குழுக்களின் அறிக்கை எனப் பல அறிக்கைளின் பிரகாரம்தான் தற்போது நிபுணர்களின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் மாத்திரம் அறிக்கைகள் உள்ளதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டுள்ளன. அது பிழையானது.

### வரலாற்றுச் சந்தர்ப்பம்

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் அரசமைப்பு நிர்ணய சபையில் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் புதிய அரசமைப்புக்கான சட்டவரைவை தயாரிப்பதற்கான பரிந்துரைகள் வழிநடத்தல் குழுவுக்கு வழங்கப்பட வேண்டும். புதிய அரசமைப்பை உருவாக்க அனைத்து உறுப்பினர்களும் உறுதிமொழியை வழங்கியுள்ளதால் அதிலிருந்து பின்வாங்க முடியாது.

இந்தச் செயற்பாடுகளில் வரலாற்றில் முதல் தடவையாக வடக்கில் இருந்து ஒரு தமிழ்க் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்று வருகிறது. இறுதிவரை நாங்களில் இந்தச் செயற்பாட்டில் பணியாற்றுவோம். அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவுடன்தான் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். ஏற்பட்டுள்ள இந்த பொன்னான சந்தர்ப்பத்தை இரண்டு பிரதானக் கட்சிகளும் தவறவிடக்கூடாது. தேசிய பிரச்சினைக்குத் தீர்வைக்காண இதனைப் புரிந்துகொண்டு இருதரப்பும் செயற்பட வேண்டும் - என்றார். (ஒ.5,10,61)

## 40...

லேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணமானது மோசமான பாதிப்புற்ற பிரதேசமாகும். மழைப் பற்றாக்குறை, வெள்ளம் மற்றும் கடலால் சூழப்பட்ட வடக்கு மாகாணத்தை எதிர்மறையாக பாதிக்கிறது. அதற்காக நிலையான அபிவிருத்தியை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, மாகாணத்தை அத்தகைய அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு ஒரு நடைமுறை தேவை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுடன் இணையவேண்டும். அமைச்சுப் பதவிகளை பெற்று வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குச் சேவையாற்ற முன்வர வேண்டும். தமிழ்க் கூட்டமைப்பு அரசுடன் இணைவதால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும், பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அமரர். சௌமியமூர்த்தி தொண்டமான், ஆளுங்கட்சியில் அங்கம் வகித்ததால் மலையகத் தமிழ் மக்களின் கலாசாரத்துக்கு அச்சுறுத்தல் பாதிப்பு ஏற்பட்டதா? இல்லை.

அதேபோல் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசின் பங்காளிக்கட்சியாக அங்கம் வகிப்பதால் முஸ்லிம் மக்களின் கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களில் எதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதா? இல்லை.

எதிர்ப்பு அரசியலைக் கைவிடுத்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கட்டியெழுப்ப அரசுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இணையவேண்டும். கடந்த 50 ஆண்டுகளில் வடக்குப் பகுதியில் பெரிதாக எவ்வித தொழிற்சாலையும் உருவாகவில்லை. வேலையில்லாப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை - என்றார். (ஒ.5)

## தைப்பொங்கலை...

ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தமிழர்களின் திருநாளான தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. அதற்கு அமைவாகவே இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடுமுறைக்கான மாற்றுப் பாடசாலை நாள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,7)

# வவுனியா - யாழ்ப்பாணம் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 12
வடக்கு மாகாண துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் 23 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட அணி நாளை மோதவுள்ளது.

வவுனிய நகர சபை விளையாட்டு மைதானத்தில் நாளை காலை 8.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண துடுப்பாட்டச் சங்கத் தலைவர் கே.மதிவாணன், மதிப்புறு விருந்தினர்களாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான பா. சத்திய லிங்கம், ம.தியாகராசா, செ.மயூரன் மற்றும் வடமாகாண துடுப்பாட்டச் சங்கத்தின் செயலர் எஸ்.பி.ரஜீவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்: (ம-23)





# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 12

**கால்பந்தாட்ட காலிறுதிகள்**

யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

காலை 9.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதிக்கு முன்னைய ஆட்டத்தில் மன்னார் சென். லூட்சியா மகா வித்தியாலய அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. மேற்படி போட்டியில் வெற்றிபெறும் அணி பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியுடன் மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோத்வுள்ளது.

**ஜப்னா சுப்பர் லீக்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் ஜப்னா சுப்பர் லீக் ரி20 தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்ணை ரில்கோ அணியை எதிர்த்து கொக்குவில் ஸ்ரார் அணி மோதவுள்ளது.

மதியம் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை வேங்கைகள் அணியை எதிர்த்து தெல்லியூர் ரைட்ரன் அணி மோதவுள்ளது. (ம-23)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 12
பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 2019ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. எனவே விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலர் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-23)

## ஆயத்த வகுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12
இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான தமிழ்மொழிமூல எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 2ஆம் 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

செயன்முறைப் பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கான பயிற்சிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது என யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலர் சி.சுரேந்தினி தெரிவித்துள்ளார். (ம-23)

## மரதன், சைக்கிளோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 12
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் சைக்கிளோட்டம் மற்றும் மரதனோட்டம் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு அராலி கரைப்பிட்டி பிள்ளையார் கோவில் முன்றலில் ஆரம்பமாகவுள்ளன. (ம-23)

# ஹாட்லிக் கல்லூரிக்கு எதிராக முன்னிலை பெற்றது ஸ்கந்தா!

யாழ்ப்பாணம், ஜன. 12
இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஹாட்லிக்கு எதிரான ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது ஸ்கந்தா.


சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சீராளன் 59 ஓட்டங்களையும், கேதுசன் 30 ஓட்டங்களையும், ஸ்ரெபான் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டிமில்ரன்;, டினோஜன் இருவரும் தலா 3 இலக்குகளையும், அர்ஜுன், பிரியந்தன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 34.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. அபிசாந் 30 ஓட்டங்களையும், தருண் ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களையும் ஜெனுசன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் சார்பில் டனிலோ 4 இலக்குகளையும், பிரணவன் 3 இலக்குகளையும், கேதுசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸ்க்காகத் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து 19 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது நாள் முடிவுக்கு வந்தது. (ம-23)



# ரி-20யும் நியூசியிடம் இலங்கை வெறுங்கை







இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ரி-20 போட்டி நேற்று ஒக்லான்டில் இடம்பெற்றது. 179 ஓட்டங்களை நிர்ணயித்தது நியூசிலாந்து அணி. பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 35 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. டெஸ்ட் தொடரை 1:0 என்ற கணக்கிலும், ஒருநாள் போட்டித் தொடரை 3:0 என்ற கணக்கிலும் இலங்கை அணி இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ரி-20 ஆட்டத்தில் வெற்றி பெற்றால் ஆறுதல் வெற்றியாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் களமிறங்கியது இலங்கை அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் நியூசிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்து. நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக குப்தில், முன்றோ களமிறங்கினர். வந்த வேகத்திலேயே குப்தில் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் மலிங்கவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இணைந்தார் சிவேற். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் வந்த வேகத்திலேயே பவிலியன் திரும்பினர். சிவ்வேற் 2 ஓட்டங்களுடனும், நிக்கோலஸ் 4ஓட்டங்களுடனும், முன்றோ 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்திருக்க அணி தடுமாறியது. அணி 55 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 5 இலக்குகளை இழந்திருந்தது. ரெயிலர், சன்னற இணைந்து அணியை நிலைநிறுத்தினர். அணி 100 ஓட்டங்களைக் கடந்த போது சன்னற ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். ரெயிலர் 33 ஓட்டங்களுடனும், பிறேசிவெல் 44 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். குக்லிஜெிந் ஆட்டமிழக்காமல் 4 ஆறு ஓட்டங்கள் ஓர் நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 35 ஓட்டங்களையும் , சவுத்தி 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். அணியின் மத்திய, பின்வரிசைவீரர்கள்கைகொடுக்கஅணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் ரஜித் 3 இலக்குகளையும், மலிங்க 2 இலக்குகளையும், திசாரா பெரேரா, சண்டகன் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.


பதிலுக்கு 180 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி எனக் களமிங்கிய இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டிக்வெல, சமரவிக்கிரம களமிறங்கினர். அணி 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது சமரவிக்கிரம ஓட்டம் எதனையும் பெறாது ஆட்டமிழந்தார். வந்தார் குசல் பெரோரா. அவர் ஒரு ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 23 ஓட்டங்களைப் பெற்று பவிலியன் திரும்பினார். டிக்வெல 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மென்ரிஸ், திசாரா பெரேரா இணைந்து அணியை ஓரளவு நிலை நிறுத்தினர். இந்தப் போட்டியிலும் திசாரா பெரேரா அதிரடி காட்டியிருந்தார். அவர் 24 பந்துகளில் 43 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினர். இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதனால் இலங்கை அணி நியூசிலாந்துடனான எந்தவொரு போட்டியிலும் வெற்றி பெறாமல் வெறுங்கையுடன் திரும்புகின்றது.


பந்து வீச்சில் வ்றிகோசன், சோட்கி தலா 3 இலக்குகளையும், ஏனைய பந்து வீச்சாளர்கள் தலா ஓர் இலக்குகளையும் கைப்பற்றியிருந்தனர். ஆட்டநாயகனாக நியூசிலாந்து அணியின்பிறேசிவெல்தெரிவுசெய்யப்பட்டார்.

## தொடர் தோல்விகளால் 'ஜெர்சியை' மாற்றிய ஆஸி.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர்கள் நடைபெற்று வரும் நிலையில் இந்திய அணி டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இன்று ஆரம்பமாகும் ஒருநாள் போட்டித் தொடருக்கு ஆஸ்திரேலிய அணி 1980ஆம் ஆண்டுகளில் ஆலன் பார்டர் தலைமையிலான ஆஸ்திரேலியா பயன்படுத்திய ஜெர்சியைப் போன்று தற்போது புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட ஜெர்சியை அணிந்து விளையாடவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுவாக ஆஸ்திரேலிய அணி வீரர்கள் ஒருநாள் போட்டியில் மஞ்சள் நிறத்திலான ஜெர்சியை அணிந்து விளையாடுவார்கள். சமீப காலமாக ஆஸ்திரேலிய அணி தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகின்றது. இந்த நிலையில் இன்று இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் வீரர்களுக்கான ஜெர்சியை ஆஸ்திரேலிய அணி மாற்றியுள்ளது.






### இந்தியா– ஆஸ்திரேலியா ஒருநாள் தொடர் இன்று

இந்திய அணி ஆஸ்திரேலிவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. மூன்று ரி-20 தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில்முடிந்தது. 4போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஒருநாள் தொடர் இன்று சிட்னியில் ஆரம்பமாகின்றது. இரண்டாவது போட்டி அடிலெய்டிலும், மூன்றாவது போட்டி மெல்பேர்ணிலும் நடக்கவிருக்கின்றது.

ஆஸ்திரேலிய அணி இந்தத் தொடரைக் கைப்பற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இந்திய அணி டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற உத்வேகத்துடன் இந்தத் தொடரையும் கைப்பற்றுவோம் எனக் களமிறங்குகின்றனர்.

## டோனியை பார்க்க வந்த மூதாட்டி

ஒருநாள் போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய வீரர் டோனி ஆஸ்திரேலியாவுக்குச் சென்றார்.

இந்த நிலையில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த டோனியைப் பார்ப்பதற்காக 87 வயது மூதாட்டி ஒருவர் அவரை அணுகியமை சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

பயிற்சி முடிந்ததும் அந்த மூதாட்டியுடன் டோனி ஒன்றாக அமர்ந்து சிரித்துப் பேசுகின்ற காணொலியே இவ்வாறு பரவி வருகின்றது.



# ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் நேர அட்டவணை நேற்று அறிவிப்பு

## செரீனாவுக்கு கடும் சவால்



ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் எதிர் வரும் 14ஆம் திகதி மெல்போண் நகரில் ஆரம் பமாகின்றது. இந்தத் தொடருக்கான நேர அட்டவணை நேற்று அறிவிக்கப்பட்டது.

முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிக், முதல் சுற்றில் தகுதி சுற்றில் வெற்றி பெறும் வீரருடன் மோதுகின்றார்.

போட்டித் தரவரிசையில் இரண்டாவது இடத் தில் உள்ள ரபேல் நடால் தனது முதல் சுற்றில் 238ஆம் நிலை வீரரான ஆஸ்திரேலியாவின் ஜேம்ஸ் டக்வொர்த்துடன் மோதுகிறார்.

மூன்று முறை கிண்ணத்தை வென்றுள்ள இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே தனது முதல் சுற்றில் 22ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ராபர்ட்டோ பவுதிஸ்டா அகுட்டை சந்திக்கிறார்.

சாதனை செய்யும் முனைப்புடன் களமிறங் கும் செரீனா வில்லியம்ஸ்க்கு போட்டி அட்ட வணை கடும் சவால் அளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. இவர் எதிர் கொள்ளும் காலி றுதி ஆட்டங்களில் முதல் நிலை வீரங்கனை களான சிமோனா ஹாலப், கரோலினாவைச் சந்திக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் இவர் கடும் சவால்களை எதிர்கொள்ள வாய்ப்பு உள் ளது. இவருக்கு போட்டித் தரவரிசையில் 16ஆவது இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

செரீனா வில்லியம்ஸ் தனது முதல் சுற்றில் ஜேர்மன் வீராங்கனையான தட்ஜனா மரியா வுடன் மோதுகிறார்.

காயம் காரணமாக 4 மாதங்களுக்குப் பிறகு களத்துக்கு திரும்பியுள்ள ருமேனிய வீராங் கனை சிமோனா ஹாலப் தனது முதல் சுற் றில் எஸ்டோனியாவின் கயா கனேபியுடன் மோதுகின்றார்.

நடப்புச்சம்பியனான டென்மார்க்கின் வோஸ்னி யாக்கி தனது முதல் சுற்றில் பெல்ஜியத்தின் அலிசன் வானை எதிர்கொள்கிறார்.


**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள காட்சியறை ஒன்றுக்கு நிர்வாகம் நடத்தக்கூடிய வேலையாள்கள் (ஆண், பெண்) தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

077 025 6640

**தேவை**

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் உயர்தர சைவ உணவகத்துக்கு

- உணவு பரிமாறுபவர்கள்
- சமையல் உதவியாளர்கள்

உடன்தேவை (அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

077 773 0590


# 110,000 இரசிகர்கள் அமரக்கூடிய கிரிக்கெட் மைதானம் குஜராத்தில்



உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதா னம் இந்தியாவின் குஜராத் மைதானத் தில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தி யாவைப் பொறுத்தவரையில் தற்போது கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானமே மிகப் பெரியது.

உலகிலுள்ள கிரிக்கெட் மைதானங்களில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண் நகரில் அமைந்துள்ள மைதானமே மிகப்பெரியது. இந்த மைதானத்தில் சுமார் ஒரு லட்சம் பார்வையாளர்கள் அமரலாம். இந்த நிலையில் சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரசிகர்கள் அமரக்கூடிய வகையில் இந்தி யாவின் குஜராத் மாநிலத்தின் அகமதா பாத் நகரில் புதிய மைதானமொன்று அமைக்கப்பட்டு வருகிறது. இந்த மைதானத்துக்காக இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரத்து 100 கோடி ரூபா செலவிடப்படுகிறது. (ம)


கொடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 392
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.01.11
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 109,273,258/-
N 03 13 24 67
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 492
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.01.11
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 52,287,825/-
வெற்றி இலக்கங்கள்
28 38 54 57 A
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

நியத ஜய நியத்த ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம் : 736 வர்ணம் : நீலம்
திகதி : 2019.01.11
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
20 36 37 64 M
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 20,578,856/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 11.01.2019 வெற்றி வாரம் 2433 வர்ணம் சிவப்பு
துலாம்
வெற்றி இலக்கங்கள் 30 43 51 62
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,956,504 /=
2019.01.13 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 906
சீட்டிழுப்பு திகதி 2019.01.10 வியாழக்கிழமை
U 03 10 25 67
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 44,127,496/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk


### பெண்கள் குறித்த சர்ச்சை

# ராகுல், பாண்டியா கருத்துக்கு அணித் தலைவர் கோக்லி பதில்



இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் ஹார்த்திக் பாண்டியா, லோகேஷ் ராகுல் ஆகி யோர் தொலைக்காட்சி நேரலையில் பெண்கள் குறித்து பேசியது சர்ச் சையை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப் பாட்டு சபை விளக்கம் கேட்டு துண்ட றிக்கை அனுப்பியிருந்தது. இதைய டுத்து ஹார்த்திக் பாண்டியா தனது கருத்துக்கு மன்னிப்புக் கேட்டார். எனினும் இருவருக்கும் குறைந்தது இரண்டு போட்டியில் விளையாடு வதற்குத் தடை விதிக்கப்படலாம் என்ற கேள்வி இருந்தது.

இந்த நிலையில், ஆஸ்திரேலியா - இந்தியா இடையிலான மூன்று போட் டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் இன்று சிட்னியில் ஆரம்பமா கின்றது. இந்தப் போட்டிக்கு முன்ன தாக அணித் தலைவர் விராட் கோக்லி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து தெரிவிக்கையில்;

உலகக் கிண்ணத்துக்குத் தயார் ஆவதே எங்களின் உட னடிக் கவனம் என்றும் ராகுல், பாண்டியாவின் கருத் துக்கள் அவர்களின் தனிப் பட்ட கருத்துக்கள் என்றும், கிரிக்கெட் சபைக்கும் வீரர்க ளுக்கும் அதில் தொடர்பு இல்லை என்றும் கூறினார். மேலும், இந்த விடயத்தில் கிரிக்கெட் சபையின் முடி வுக் காகக் காத்திருக்கின்றோம் - என்றார்.


**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S. றோட், சுன்னாகம். இரு இடங்களிலும்

**வணிகக்கல்வி**

**A/L 2021**

யாழ் நகர் : 9.00 - 10.00 AM.
சுன்னாகம் : 4.00 - 5.00 PM.
(சனி, ஞாயிறு நாள்கள்)

ஆசிரியர்

**சக்தி வடிவேல் பிரதீபன்**


(HNDA, M.COM.PGDE)

Note: A/L 2019, 2020, 2021 வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.


## முர்ரே ஓய்வு

இங்கிலாந்தைச் சேர்ந்த ரென்னிஸ் வீரர் ஆண்டி முர்ரே, 3 கிராண்ட்ஸ் லாம் பட்டங்களை வென்றுள்ளார். எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமா கும் ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியில் பங்கேற்க உள்ள இவர் இந்தப் போட்டியுடன் ஓய்வு பெறுவ தாக அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்தது வது; "ஆஸ்திரேலியா ஓபன் ரென் னிஸ் போட்டிதான் எனது இறுதித் தொடராக இருக்கும் என கருதுகி றேன். இடுப்பில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வருகிறேன். எனது சொந்த நாட்டில் நடக்கவிருக்கும் விம்பிள்டன் போட்டியோடு ஓய்வு பெற விரும்பினேன். ஆனால் நீண்ட காலமாக வலியோடு அவதிப்படுகி றேன். அந்த வலியுடன் அடுத்த 5 மாதங்களுக்கு விளையாட முடியும் என்று என்னால் உறுதியாகக் கூற முடியாது. இதனால் ஆஸ்திரேலிய ஓபன் போட்டி எனது இறுதித் தொட ராக இருக்கலாம் என்று கருதுகி றேன்"- என்றார்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.